455

சுதேசமித்திரன்

JL
ms211, N30s
N48. 1944
1266160

269

சுதேசமித்திரன்

269/455

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
24 JAN 1949
MADRAS

28-11-48

அணா 4





இயற்கையான வாஞ்சையுடன்

அடைய விரும்புதல்

குழந்தைக்கு

ஆரோக்கியத்தைத் தரும்

வுட்வார்ட் வைத்தியனின்

"கிரைப் வாட்டர்"

என்னும் மருந்துத் திராவகம்

WOODWARD'S GRIPE WATER

W. WOODWARD LTD. LONDON. ENGLAND

அவளுக்கு

வியாதிக்குப் பிறகு

அவனுக்கு

பலங்குன்றிய சமயத்தில்

அவர்களுக்கு

வளரும் போது

விடோபெரின்

ஒரு I·T·L

விடோபெரின் சிறந்த புஷ்டியளிக்கும் டானிக். அதில் ஏ, டி; விடமின் சத்தும், ஆரோக்கியமளிக்கும் உலோகப் பொருள் சத்தும் உள்ளன. மதுரமான சுவை யுள்ளது.

விற்பனை ஏஜெண்டுகள்:

தயாரிப்பு. பெஸ்ட் & கம்பெனி, லிமிடெட்.

GVK·12 TM

தயாரிப்பவர்கள் :—மைசூர் இண்டஸ்டிரியல் & டெஸ்டிங் லாபரேடரி லிமிடெட்., மல்லேச்வரம், பெங்களூர்.

ஜாதகம்! ஆரூடம்!!

இன்றே எழுதுங்கள். பிறந்த தேதி, நேரம் அல்லது ஜாதக நகல் தேவை. ஜாதகம் இல்லாதவர் கடிதம் எழுதும் நேரம் குறிக்கவும்.

கட்டண விவரம்:- 1 முதல் 3 உமது எதிர் கால கேள்விக்கு ரூ. 2. 3-க்கு மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஒரு வருட பலன் 8 பிரிவுகளில் எழுத ரூ. 5. ஆயுள் பூராவுக்கும் பலன் சுருக்கமாக எழுத ரூ. 35.

குறிப்பு :—வெளிநாட்டுக்கு இரட்டிப்புக் கட்டணம்,

Lt. Col. M. N. C. ஸர்ஜன் ஜெனரல் மதராஸ் கூறுவதைக் கவனியுங்கள்:-தாங்கள் அனுப்பிய ஜாதக பலன் வியக்கத்தக்கது. எனக்குத்திடீரென்று ரூ. 35,000 கிடைக்கும் என்று தாங்கள் கூறியபடியே எதிர்பாராமல் எனக்கு ரூ. 35,000 கிடைத்தது.

மானேஜர், வீனஸ் அஸ்டிரோலாஜிகல் ப்யூரோ,

தெப்பக்குளம் P. O. (தென் இந்தியா)



ஆபரேஷனுக்குப்

பிறகும் அதிர்ச்சிக்குப் பிறகும், விபத்துக்குப் பிறகும் மயிர் உதிர்வதுண்டு. நீடித்த ரோகங்களாலும், பிரஸவத்தாலும், ஜுரங்களாலும் கூந்தல் நஷ்டமடைவதுண்டு. மயிர் விடாமல் உதிர்ந்து வந்தால் கேசத்துக்குப் பதில் அடித்தலையே புலப்படும்.

எந்தக்காரணத்தால் உதிர்ந்தாலும் கேசவர்த்தினியைக்கொண்டு மயிர் உதிர்வதை நிறுத்துங்கள். இழந்த கூந்தலுக்குப் பதில் இளம் புதுக் கூந்தலை வளரச் செய்யுங்கள். இருக்கும் கூந்தல் இழக்காமல் காப்பாற்றிக் கொள்ளுங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலைக் காப்பது; விருத்தி செய்வது; அழகுபடுத்துவது விலை அணா 14. தபால் செலவு தனி. எல்லா கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்:

தென் இந்திய ரஸாயன சாலை,

"ஆச்ரமம்", க்ராஸ்கட் ரோட்,

பவர் ஹவுஸிற்கு அடுத்தது

கோயமுத்தூர்.

தந்தி விலாசம்: "கோகுல்" ஸ்தாபிதம் 1909. டெலிபோன் நெ. 57

டி. எஸ். ஆர். & கோ.,

கும்பகோணம்.

(பிராஞ்சு: மன்னார்குடி.)

சந்தனாதித் தைலம் - அரைக்கீரை விதைத் தைலம்

கோகுல் கூந்தல் தைலம்

கூந்தலுக்கு வளர்ச்சியையும், குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றவை.

வத்திகளுள் சிறந்தது "கோகுல்" வத்திகள்

பல காய்கறி ஊறுகாய், கோகுல் வாசனைப் பாக்கு

முதலிய இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

ஸோல் ஏஜெண்டுகள்:—
புஷ்பவனம் ஸ்டோர்ஸ்,
பைகிராப்ட்ஸ் ரோட்,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

(கோவை & பாலக்காடு ஏஜெண்டு)
B. Balapattabi Chettiyar,
246, Vysyal St.,
COIMBATORE.

ஜோதிஷ வித்வான்

V. S. சேஷாத்ரியாச்சாரியார்

45, பரோடா தெரு, தியாகராயநகர், சென்னை 17.

ஒரு ஜாதகம் விவரமாகப் பார்க்க......ரூ. 5.
எதிர்காலத்தைப்பற்றிய மூன்று கேள்விகளுக்கு...ரூ. 2.
மேல் கேள்வி ஒன்றுக்கு......அணா 12.
ஜாதகம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை.
ஒரு ஜாதகம் கணிக்க......ரூ. 3.
பிறந்த ஊர், தேதி, மணி தேவை. வி. பி. சார்ஜ் பிரத்யேகம்.



மெஸ்மெரிஸம்

ஆங்கிலத்தில் ஹிப்னட்டிஸம், மெஸ்மெரிஸம் என்று கூறப்படும் வசிய சக்திகளைப்பெற உங்களுக்கு விருப்பமுண்டானால், இவ்வுலக வாழ்க்கையில் வியாபாரத்தில், இல்வாழ்க்கையில் வெற்றியும், சந்தோஷமும் லாபமும்பெற இச்சையுண்டானால் இன்றே,

'ஜீவவசிய பரம ரஹஸ்யம்' என்னும் அரிய பெரிய தமிழ் நூலைப் படித்து அதன்படி நடந்து வெற்றியையும், லாபத்தையும் பெற்று மகிழ்வீர்களாக. தமிழில் இந்தச் சாஸ்திர சம்பந்தமான நூல்கள் மிகவும் அபூர்வமாகத்தான் வெளியாகின்றன. இந்தச் சாஸ்திரத்தை நன்கு பயின்று, பிறகு அப்யசித்து வெற்றிபெற்ற ஒரு மகானால் இது வரையப்பட்ட அனுபவ நூலாகும். இன்றே வாங்கிப்படித்து பயன்பெறுங்கள்.

விலை ரூ. 4—8—0.
வி. பி. செலவு அணா 9.

ஷாஜஹான் புக் டெப்போ,
34, சாந்தோம், சென்னை 4.

தொண்டைப் புண்,

ஜலதோஷம் இன்புளுயன்ஸாவுக்கு

சமனமூட்டி வியாதி பரவுதலை தடுக்கும் பெப்ஸ் உமக்கு தேவையாகவிருக்கும்

நல்ல ருசியுள்ள பெப்ஸ் வில்லையில் மருந்து சத்துக்கள் இருப்பதால் உமது தொண்டைக்கும் சுவாசப்பைக்கும் சமனமூட்டும். பெப்ஸின் சமனமூட்டும், குணமாக்கும் கிருமிநாச ஆவிகள் தொண்டை, மார்பு, சுவாசப்பை இவற்றுக்கு சுவாசத்துடன் கலந்து பல னளிக்கக்கூடியவை. புண், கமைச்சல், வீக்கம் இவற்றை குணமாக்கி, கிருமிகளை நாசம் செய்து அடைப்பை நீக்கும்.

பெப்ஸ் மருந்து சத்துக்கள் ஒவ்வொரு சுவாச உறுப்புக்கும் போவதைக் குறிக்கும் படம்.

ஏஜண்டுகள்:— மெஸர்ஸ். தாதா & கம்பெனி. பி. டி. மதராஸ்.

PEPS

கிருமி நாச
தொண்டை & மார்பு வில்லைகள்
தொண்டை, மார்பு, சுவாசப்பை தகராறுகளுக்கு சிறந்த பலனளிக்கவல்ல நிவாரணி.

வைத்திய ரத்ன
யு. ராமநாத சாஸ்திரிகளின்

ஸித்தமகரத்வஜம்
(தங்கம் சேர்ந்தது.)
அங்கங்களையும் நரம்புகளையும் பலப்படுத்தும். திடசாலியாயும் யௌவனமாயும்இருக்கலாம். 30மாத்ரை சீசா1 ரூ.7.

மஹா பில்வாதி லேஹியம்
பித்தம், அஜீரணம், மலபந்தம் முதலிய வயிற்றுக் கோளாறுகளை உடனே கண்டித்துவிடும். ஒரு சேர் டப்பி 1-க்கு ரூ. 4.

ஸ்ரீ தன்வந்திரீ கவசம்
வியாதி, மனோ விசாரம், தரித்திரம், இவைகளை விலக்கி, உத்தியோக வியாபார லாபங்கள், காரிய ஸித்தி, ஜனவசியம் இவைகளை அளிப்பதில் அபாரமான சக்தி உள்ளது. இதில் வசீகரண் மூலிகை, பிரதிஸரஸூத்ரம், ஸ்ரீ தன்வந்தரீயந்திரம் இவைகளை மந்திரபூர்வமாய் ஸ்தாபிக்கப்பட்டு இருக்கிறது. கவசம் 1-க்கு ரூ. 3.

ஆனந்த படை நிவாரணி
எல்லாவிதமான படைகளையும் திரும்பி வராமல் இருக்கும்படி ஒரே வேளையில் போக்கிவிடும். டப்பி 1-க்கு ரூ. 1.

ஆனந்த பற்பொடி
(40 வருஷங்களாக புகழ்பெற்றது.)
சென்னை ஹைகோர்ட்டில் உரிமைபெற்றது. இந்தியாவில் இது ஒன்றுதான் சிறந்தது. எங்கும் கிடைக்கும். கேட்லாக் இனாம்.
ஸகலத்துக்கும் வி. பி. பிரத்யேகம்.

வைத்திய ஸித்தாச்ரமம்
பஜார் ரோட், மயிலாப்பூர், மதராஸ்.

எலக்ட்ரிக் சாமான்கள்

ENGLISH MAKE

Switches Porcelain Base.	Dozen Rs.	19-8-0
Staircase Switches	,, ,,	36-0-0
Holders Bakelite	,, ,,	8-8-0
Cealing Roses Bakelite	,,	8-12-0
Wallplugs & Pins Bakelite	,,	15-8-0
C.M.A. 1/18 V.I.R. COILS 100 yards		15-8-0
,, 14/36 Flexable wires	,,	30-0-0
15 to 30 watts India Bulbs	Dozen	18-8-0
15 amp. Ironclad Main Switches	each	11-0-0
9" O. C. Braket & Holder	,,	2-8-0
Kantark 15 amp. Fuse Units	,,	3-0-0
11 m-m. pipes. 10 Feet	,,	3-2-0
$2\frac{1}{2}$ amp. A. C. Venner Meters	,,	50-0-0
Transformer lights GEC	,,	8-0-0
Langbam Shades "Colour Border"	,,	2-8-0

மற்றும் இதர சாமான்களும் கிடைக்கும்.

M. R. Parthasarathy Iyengar
Electrical Dealers
29A, T. P. Koil Street
TRIPLICANE MADRAS. 5

"பீம-வீர்" பூர்வகால ஆயுர்வேத முறைப்படி மூலிகை சத்துக்களாலும், பஸ்பங்களாலும் தயாரிக்கப்பட்டது. ரத்தத்தை சுத்தி செய்து, சாஸ்வதமான யௌவனத்தையும், ஞாபக சக்தியையும் உண்டாக்கி, தேக புஷ்டியையும், வீரிய சக்தியையும், வலுவையும் கொடுப்பதில் நிகரற்ற ஔஷதம்.
40-நாள் மருந்து ரூ. 3—12—0. பாக்கிங், தபால் சார்ஜ் கிடையாது.
ஜமதக்னி ஔஷதாலயா, 31-சி, வடக்குமாடவீதி, மயிலாப்பூர், சென்னை 4

ஆபீஸ் ஸ்தாபிதம்: 1924.

பிரபல ஜோதிஷர்



மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ. 5. ஷை பலனை வாரா வாரம் விவரமாக எழுத ரூ. 10. ஆருடம் 3 கேள்விகளுக்கு ரூ. 2. மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. ஜ்யோதிஷ ஞான போதினி. ஜாதக யோகங்கள் என்னும் புத்தகம் விலை ரூ. 2—8—0. வி. பி. சார்ஜ் பிரத்யேகம்.

பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், "தபோநிதி" தியாகராய நகர், மதராஸ் 17.

501 ஸோப்பால் வெளுக்கப்பட்டது.

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி, லிமிடெட்.

டெலிபோன்: 2246. தந்தி: கிளாவர் பீடி

பிரசித்தி பெற்ற

'காஸினோ ஸ்னோ'

உங்கள் முகப்பருவைப்போக்கி, சருமத்தை மிருதுவாக்கி முகத்தைப் பொலிவுடன் பிரகாசிக்கச் செய்வது 'காஸினோ ஸ்னோவே' வாங்கும்பொழுது "காஸினோ" மார்க்கைப் பார்த்து வாங்குங்கள்.

CHANDRA TRADING CO.,
93, ACHARAPPAN ST. G.T. MADRAS 1.

லேட் கான்சாகிப் எம். முஹமது உமர்சாகிபுவின் குமாரரான முகமது நூருல்லா என்று பெயர்கொண்ட நான் இவ்வியாபாரத்தை மிகவும் அபிவிருத்தி செய்துள்ளேன். மிகச் சிறந்த புகையிலையையும், உயர்தரமான சரக்குகளையும் உபயோகித்தே

ஸ்பேட் கிளாவர் பீடிகள்

தயாரிக்கப்படுகின்றன. இந்த பீடிகளின் ரகமும், மணமும், குணமும் என் தகப்பனார் காலத்திலிருந்ததைப் போன்றே சிறப்பாக விளங்குகின்றது.

முகம்மது நூருல்லா
ஸோல் புரொப்ரைட்டர்:
ஸ்பேட் கிளாவர் & ஆர்டீன் பீடிகள்
37, மன்னடி, மதராஸ்.

பாத்ருடுவின் "பால சஞ்சீவினி"

(Regd)

குழந்தைகளின் ஈரல், சூலை, ஜுரக்கட்டி வியாதிகளை சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் சிறந்த மருந்து இது ஒன்றுதான். அசல் விஜயநகரம் மருந்து. போலிகளைக்கண்டு ஏமாறாதீர்கள்.

Dr. பிள்ளா பாப்பய்யா பாத்ருடு & பிரதர்,
11, தெற்கு மாட வீதி, மயிலாப்பூர்.

கும்பகோணம் கிளை:— 7, சாரங்கபாணி கோவில் கீழவீதி	திருச்சி கிளை:— 15, புகழிய பிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்டு.

1 பவுனில் 4 ஜதை கவரிங் வளையல்கள் கிடைக்கும்

காஸிம் பிரதர்ஸ், 192, சைனா பஜார், சென்னை.

காங்கிரஸ் மகாசபை சரித்திரம்

முதல் பாகம் கைவசமில்லை.
இரண்டாம் பாகம் „ ரூ. 2
மூன்றாம் பாகம் „ ரூ. 2.
(தபால் செலவு அணா 10)
V. P. அனுப்புவது கிடையாது.
சுதேசமித்திரன் புத்தகசாலை சென்னை.

வயிற்று நோவுகளை ஆப்ரேஷன் இல்லாமல் சுகப்படுத்தக்கூடிய

R.P.S. முப்பு சூரணம்

ஆண், பெண் இருவரும். இந்த சூரணம் 30 வருஷ காலமாய் அனுபோகமுள்ளது. பத்தியம் கிடையாது. முப்புவினால் தயாரிப்பு வயிற்றுப்புண், அஜீரணம், மலசிக்கல வயிறு குமட்டல், வாந்தி, மயக்கம், சாப்பிடுவதற்கு முன்னும் பின்னும் வரும் வயிறு நோவுதல், குடல் கொந்தளிப்பு மேக சம்பந்தமான வியாதிகளையும் போக்கும். 4 அவு. பாட்டில் 1-க்கு விலை ரூ. 3. (த. செலவு தனி)

Dr. R. P. சாரதி. மகாத்மா காந்தி சித்த வைத்தியசாலை
தர்மராஜா கோவில் தெரு சிந்தாதிரிப்பேட்டை சென்னை

உங்கள் எதிர்காலம்

பண நிலைமை, தொழிலில் மாறுதல், காதல், கலியாணம், குடும்பம், பிரயாணம், எதிர்பாராத லாப நஷ்டம், படிப்பு, ஆரோக்கியம், அதிருஷ்ட நாள், எண், நிறம் மற்றும் எதிர்காலத்தில் உங்களுக்கு ஏற்படக்கூடிய பலன்கள் எழுதியனுப்பப்படும். ஜாதக நகல் அல்லது முழுப்பெயர், சுமார் வயது, செய்யும் தொழில், கடிதம் எழுதும் நேரம் குறிப்பிடவும். ஏன்றுமுதல் 5 கேள்விகளுக்கு பதிலளிக்க ரூ. 2. மேல் ஒவ்வொரு கேள்விக்கும் அணா 8. ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன் எழுத ரூ. 6. வாரப்பலனுக ரூ. 20. ஜாதகக் குறிப்பும் சுருக்கமான பொதுபலனும் எழுதியனுப்ப ரூ. 5. த. செ. தனி

வி. கே. கிருஷ்ணமாச்சாரியார்,
ஹநுமதுபாஸி, திருவல்லிக்கேணி, MADRAS 5.

குஷ்டத்திற்கு மருந்து இல்லையா?
இதோ லக்ஷ்மி பிரசாதம்

(லெப்பர் க்யூர்)

18 குஷ்டங்களையும் வெண் குஷ்டம், செவ்வாய் மேகம், வெள்ளை, வெட்டை நிவாரணத்திற்கு எல்லாம் சாப்பிடக்கூடிய அமிர்தம்.

40 நாட்களில் குணம்.

தலைமை ஆபீஸ்: வால்டேர், ஆர். எஸ்.	லக்ஷ்மி & கோ., 2/135, பிராட்வே, மதராஸ்.

Quality always tells!
hence BUY **L.G** ASAFOETIDA



எல். ஜி. பெருங்காயமே உயர்ந்தது

பிரசுரமான கிருதிகள்

★

"சுதேசமித்திரன்" வாரப்பதிப்பில் வெளியான கீர்த்தனைகள் கீழ் கண்டுள்ள விலைக்கு கிடைக்கும்:

காயகசிகாமணி அரியக்குடி. ராமானுஜய்யங்காரால் ஸ்வரப் படுத்தப்பட்டவை:—

1. அருணாசலக் கவிராயர் கீர்த்தனை 32-க்கு ரூ. 8 0 0
2. திருப்பாவை 30 பாட்டுக்கு ரூ. 7 8 0
3. பூச்சி ஐயங்கார் ஜாவளிகள் 24-க்கு ரூ. 6 0 0
4. ஸ்ரீ சியாமா சாஸ்திரி க்ருதிகள் 12-க்கு ரூ. 3 0 0

செம்மங்குடி ஸ்ரீ ஸ்ரீனிவாசய்யரால் ஸ்வரப்படுத்தப்பட்டவை:—

1. ஸ்ரீ ப்ரும்மேந்திரர் க்ருதிகள் 15-க்கு ரூ. 3 12 0
2. ஸ்வாதித் திருநாள் 80-க்கு ரூ. 20 0 0

மேற்கூறியுள்ளவை புத்தக ரூபகமாக இல்லை, தனித்தனி தாளாக உள்ளன ஒரு தாளில் ஒரு கீர்த்தனை தான் இருக்கும். தபால் செலவு ப்ரத்தியேகம்.

மானேஜர்.
"சுதேசமித்திரன்" புத்தகசாலை, மவுண்ட் ரோடு, சென்னை.

ஞாபகப்படுத்துகிறோம்

★

"சுதேசமித்திரன்" வாரப் பதிப்பில் வெளிவரும் கதைகள், கட்டுரைகள், கவிதைகள் இவற்றில் வரும் பெயர்கள், சம்பவங்கள் முதலியன எவரையும் குறிப்பிடுவன அல்ல. அவை முற்றிலும் கற்பனையே.

—ஆசிரியர்.

சக்தி ஆரூடம்!

சென்னை சர்க்கார் விவசாய இலாகா டிப்டி டைரெக்டர் (Retd) Sri M. A. பாலகிருஷ்ணன் L. Ag., M. A. S., சிவகங்காவிலிருந்து 21-10-48ல் எழுதுகிறார்:—

"தங்களுடைய ஆருடம் பலித்தது. மறுபடியும் தங்களை அணுகத் துணிந்தேன்." 3 கேள்விகளுக்கு ரூ. 1, மேல் கேள்வி 1-க்கு அணா 8. 1 வருட பலன் ரூ. 5. ஜாதகம் கணிக்க ரூ. 2. சக்தி கவசம் ரூ. 7—8—0. வி. பி. பி. தனி. ஜாதகம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை.

N. B:—வெளிநாட்டிற்கு முன் பணம் தேவை.

சக்தி ஹோம், விருத்தாசலம் P. O., (S. I.)

காச குலாந்தகம்

சரீரம் மெலிந்து, அங்கங்கள் உலர்ந்து, கைகால்கள் அயர்ந்து; பார்வை குன்றி, கஷ்டப்படும் அன்பர்களே!

சுவாசக் குழாய்களிலும், சுவாசப் பைகளிலும் தடைபட்டு நிற்கும் கபம் விலகிப்போவதைத்தவிர, நெஞ்சிலும், விலாப்பக்கத்திலும் வலி, இருமல், இழுப்பு, பலக்குறைவு, மார்பு அடைப்பு, தலைவலி, காய்ச்சல், குரல் அடைப்பு, நாசி வழி ஜலம் வடிதல், க்ஷயம், சுவாசக் குழாய்களிலிருக்கும் புழுப்பு, கபத்தாலுண்டாகும் இழுப்பு முதலிய சுவாசப்பையை ஒட்டிய சகலவித நோய்கள் யாவற்றையும், ஆதவனைக்கண்ட பனிபோல் விரைவில் மாற்றிவிடும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. கடின பத்தியமில்லை.

வி. பி. பார்சலில் தேவையுள்ளோர் தபால் செலவு அணா 14 முன் பணம் அனுப்பி பெற்றுக்கொள்ளலாம் விவரமான கேட்லாக் இனாம்.

மலையாள மெடிகல் ஹால்

H. O. TRIVANDRUM.

189, வக்கீல் புது தெரு - P. B. No 27, மதுரை.

கிளை ஸ்தாபனங்கள்:— 207, நாகேஸ்வரர் வடக்கு வீதி, கும்பகோணம். 20, கோவிந்தப்பநாயக்கன் தெரு. சென்னை. G. T. 58E, தர்மராஜா கோயில் தெரு, பெங்களூர், 179, SEA ST., COLOMBO.

விட்டிலேயே வாசனை தைலங்கள் தயாரித்தால் பணம் மிச்சமாகும்: கீழ்க்கண்ட மோஹினி பியூர் செண்டுகளில் ஏதேனும் ஒன்றை தேங்காய் எண்ணெய், மணிலா, ஆமணக்கு அல்லது நல்லெண்ணெயில் சேர்த்தால், மலிவான விலையில் சிறந்த வாசனைத் தைலம் கிடைக்கின்றது. இலவசமாக எண்ணெயை சிவப்பாக்கும் ஆல்கானட் வேர்கள் அனுப்புவோம்.

மோஹினி பியூர் செண்ட் ரகங்கள்.

1. சம்பக் செண்ட்	ரூ. 2–0.	8. ரோஜா செண்ட்	ரூ. 1–8.
2. கியோரா	,, 2–0.	9. சுரங்கி	,, 1–8.
3. காஸ்	,, 2–0.	10. வில்வி	,, 1–0.
4. போகுல்	,, 1–8.	11. லோடஸ்	,, 1–0.
5. ஜாஸ்மின்	,, 1–8.	12. ஆரஞ்சு	,, 1–0.
6. கதம்பம்	,, 1–8.	13. மோதியா	,, 1–0.
7. ஹேனா	,, 1–8.	14. கோலோன்	,, 1–0.

அரை அவுன்ஸ் புட்டிகளில். பாக்கிங், போஸ்டேஜ் வி. பி. பி. தனி.

S. PAUL & Co., Perfumiers, (Dept. S W.) 4, Hospital St. Calcutta 13.

விநோத கதா மஞ்சரி

விலை ரூ. 1—0—0 (தபால் செலவு பிரத்யேகம்)

சுதேசமித்திரன் புத்தகசாலை, சென்னை.

தேவை

கீழ் குறிப்பிட்டுள்ள இடத்தில் எமது மித்திரன் தினசரி, வாரப்பதிப்பு முதலியவைகளை விற்பனை, பட்டுவாடா செய்ய ஊக்கமுள்ள ஏஜண்டுதேவை. விண்ணப்பதாரர் உள்ளூர் வாசியாகவும், செக்யூரடி கட்டக்கூடியவர்களாகவும் இருக்கவேண்டும். விருப்பமுள்ளவர் அடியில்கண்ட விலாஸதாருக்கு விண்ணப்பித்துக் கொள்ளவும்.

கொழும்பு:

சர்க்குலேஷன் மானேஜர்,
சுதேசமித்திரன், விக்டரி ஹவுஸ்,
மௌண்ட்ரோட், சென்னை 2.

"சுதேசமித்திரன்" வாரப்பதிப்பு

★

சந்தா விவரம்

(சந்தாவை முன்னதாகக் கட்டவேண்டும்.)

	இந்தியா, சிலோன்.	வெளிநாடு
1-வருஷம்	13 0	18 0
6-மாதம்	7 0	9 8
3-மாதம்	3 12	5 0

தனிப்பிரதி அணா 4

3-மாதத்திற்குக் குறைந்து சந்தா ஒப்புக்கொள்ளப்படமாட்டாது.

மானேஜர்,
"சுதேசமித்திரன்" ஆபீஸ்,
மவுண்ட் ரோட், மதராஸ்.

வாழிய செந்தமிழ்! **சுதேசமித்திரன்** வாழ்க நற்றமிழர்!

வாரப்பதிப்பு

Vol. XIX] ஸர்வதாரிஞு கார்த்திகைமீ 13உ ★ 1948-ஞு நவம்பர்மீ 28உ No. 44

நேர்மையான வழி

பிரஞ்சு இந்தியப் பிரச்னை அமைதியாக, சமரசமாகத் தீரவேண்டு மென்பதே இந்திய சர்க்காரின் விருப்பம். குறிப்பாக பிரஞ்சு, அதிகாரிகளுடன் இதுபற்றி வீண் தகராறு எதுவும் ஏற்படாதிருக்கும் பொருட்டு இந்திய சர்க்கார் தங்களாலானவரை விட்டுக்கொடுக்கவும் தயார். ஆனால், இந்த சமரச மனோபாவத்தைப் பிரஞ்சு சர்க்கார் சரியாகப் புரிந்துகொண்டதாகக் காணவில்லை. உண்மையில், இந்திய சர்க்காரின் நடைமுறைக்கு அவர்களுடைய பலவீனந்தான் காரணமென்று பிரஞ்சு அதிகாரிகள் எண்ணுகின்றனரோவென்றுதோற்றுகிறது. ரஸ்வியின் கையாட்கள் இவ்வாறு எண்ணித்தான் உருட்டலும், மிரட்டலும் பலித்துவிடுமென்று மனப்பால் குடித்தனர். இறுதியாக அவர்களுக்கு ஏற்பட்ட கதியைக் கண்டபின்னும் பிரஞ்சு அதிகாரிகள் அதே தவறைச் செய்ய முற்பட்டிருப்பது ஆச்சரியதாகும்.

இந்திய யூனியன்மீது பிரஞ்சு அதிகாரிகள் கொண்டுள்ள பகைக்கான அறிகுறிகள் தற்போது பெருகி வருகின்றன. எனினும், பிரஞ்சு இந்திய கவர்னர் பிரஞ்சு இந்திய சட்டசபைக் கூட்டத்தை ஆரம்பித்து வைத்தபோது, இந்தியாவின் நட்பைப் பெறப் பிரான்ஸ் அபாரமான அக்கரை கொண்டிருப்பதுபோல் அளவளாவச் சிறிதும் கூசவில்லை. அதேசமயத்தில் பிரஞ்சு இந்திய மக்கள் எப்படியாவது சந்துஷ்டியுடன் வாழவேண்டுமென்பதே பிரான்ஸின் கோரிக்கையெல்லாம் என்றும் அவர் கதைத்தார். உண்மையில் இந்திய நட்பைப் பெறுவதிலும், பிரஞ்சு இந்திய மக்களின் க்ஷேமத்திலும் பிரஞ்சு அதிகாரிகளுக்குக் கருத்திருக்குமாயின், அவர்கள் இப்போது செய்யவேண்டிய காரியம் ஒன்றேதான். அதாவது, பிரிட்டிஷாரைப் பின்பற்றி அவர்களும் இந்நாட்டிலிருந்து உடனே தங்கள் மூட்டை முடிச்சுகளுடன் வெளியேறி விடுவதுதான். இதில் தாமதம் செய்யும் ஒவ்வொரு நிமிஷமும், பிரஞ்சு கவர்னர் வெளியிட்ட மேற்குறித்த இரண்டு கோரிக்கைகளுக்கும் இடையூறு பெருகி வருவது பகிரங்கம்.

எனினும், பிரிட்டிஷாரைப்போல் தாங்களாக அந்த யோக்கியமான முறையைக் கையாளப் பிரஞ்சு அதிகாரிகள் தயாராயில்லை. புதுச்சேரி போன்ற ஸ்தலங்கள் இனியும் தங்கள் காலடியில் மிதிபட்டு உழலவே வேண்டுமென்று பிரஞ்சு கவர்னர் வற்புறுத்துகிறார். அவை பிரஞ்சு யூனியனுக்குள் நீடித்து, பிரான்ஸுக்கும், இந்தியாவுக்கும் நேசத்தை வளர்க்கும் தொடர்புகளாக விளங்கவேண்டுமென்று அவர் கூறியிருப்பதன் பொருள் அதுதான். நேசம் வளர்வதற்கு இந்நாட்டிலுள்ள எந்தப் பகுதியும் ஒரு அந்நிய தேசத்தின் அரசியல் தொடர்பையோ, ஆதிக்கத்தையோ ஏற்றுக்கொண்டாக வேண்டிய அவசியமில்லை. பிரிட்டிஷ் வெளியேற்றத்துக்குப் பின், இத்தகைய தொடர்பெதுவும் இல்லாததால், பிரிட்டனுக்கும், இந்நாட்டுக்கும் உறவு சீர்கெட்டுப்போய் விடவில்லை. அதற்கு மாறாக, அது பலவகைகளிலும் பலப்பட்டே வருகிறது. பிரஞ்சு அதிகாரிகள் கோருவதுபோல், இந்நாட்டில் அவர்களுடன் அரசியல் தொடர்புகொண்ட ஸ்தலங்கள் நீடிப்பது இந்திய-பிரஞ்சு உறவு அடியோடு சீர்குலையவே உதவுமென்பதில் சந்தேகமில்லை. தனது அந்தஸ்துக்கு இழிவான, தனது வாழ்வுக்கே அபாயகரமான இந்

126816

நிலையை இந்திய யூனியன் ஒருபோதும் அனுமதிக்க முடியாது. கையளவு நிலமான பிரஞ்சு இந்தியா ஒரு தனி சுதந்திர ராஜ்யமாக இருக்க முடியாதென்பதும் வெட்ட வெளிச்சம். எனவே பண்டித ஜவாஹர் மீண்டும் அன்று அறிவுறுத்தியதுபோல், பிரஞ்சு இந்தியா இந்திய யூனியனுடன் ஐக்கியமாவதைத் தவிர வேறு வழி எதுவும் கிடையாது.

உண்மையில் இந்திய சமுதாய உடலைச் சேர்ந்த ஒரு அங்கமே பிரஞ்சு இந்திய சமூகம் என்று காட்ட வாதம் எதுவும் தேவையுமில்லை. பிரஞ்சு இந்திய மக்களுக்கு ஒருமுறை இந்தோ சீனுவிலிருந்து அரிசி கொண்டு வந்து ஸப்ளை செய்துவிட்டதாகப் பிரஞ்சு கவர்னர் சொன்னது உண்மையாயிருக்கலாம். ஆனால், அதன் மூலம் அவர்கள் வாழ்வில் இந்திய சர்க்காரை விட பிரஞ்சு அதிகாரிகள் அதிகமான அக்கரை கொண்டவர்கள்போல் அவர் காட்ட முயன்றிருப்பது நகைக்கத்தக்கதாகும். இத்தகைய பிரசாரத்தைக் கேட்டு தங்கள் கைக்கு மேலும் விலங்கிட்டுக்கொள்ளப் பிரஞ்சு இந்திய மக்கள் உற்சாகத்துடன் முன் வருவரென்று அக்கவர்னர் நம்புவது பரிதபிக்கத்தக்கதாகும். இந்திய யூனியனிலுள்ள மற்ற மக்களுக்கிருப்பது போன்ற பிரஜா அந்தஸ்தையும், உரிமைகளையும் தாங்களும் பெறுவதன் மூலமே உண்மையில் தங்களுக்கு வாழ்வுண்டு என்பதில் பிரஞ்சு இந்திய மக்களுக்குச் சிறிதும் சந்தேகமிருக்க முடியாது. சமீபத்தில் அங்கு நடந்த முனிஸிபல் தேர்தலில் பிரஞ்சு அதிகாரிகள் தங்கள் கைக்கூலிகளை ஏவிவிட்டு அட்டூழியம் செய்யாமலிருந்திருந்தால், அம்மக்கள் மேற்குறித்த கருத்தை வெட்ட வெளிச்சமாக்கியிருப்பர். இந்த அக்கிரமங்களுக்கும், பலாத்கார வெறிக்கும் தாராளமாக இடங்கொடுத்து வந்திருக்கும், பிரஞ்சு இந்திய கவர்னர், இப்போது அஹிம்ஸா தர்மத்தைப்பற்றி உபதேசிக்கப் புறப்பட்டிருப்பது கேலிக் கூத்தாகும்.

ஆனால், தந்திரத்தாலோ, அடக்குமுறையாலோ மக்களின் கருத்தைக் குடை சாய்த்து விடக் கூடியகாலம் இதுவல்ல. பிரஞ்சு இந்தியாவைப் பொறுத்தவரை, அக்கருத்து என்னவென்று பிரஞ்சு அதிகாரிகள் கேட்கத் தேவையேயில்லை. அவ்வாறின்றி, சம்பிரதாயப் படி அதைக் கேட்டுத் தெரிந்துகொண்டுதான் வெளியேறுவோம் என்று பிரஞ்சு அதிகாரிகள் பிடிவாதம் பிடிப்பராயின், அதற்கும் வழிவிட இந்தியசர்க்கார் தயாராயிருக்கின்றனர். ஆனால், ஏற்கெனவே ஏற்பட்ட அனுபவத்திற்குப் பின், இதில் இனி மோசடி எதுவும் நடக்க இந்திய சர்க்கார் சிறிதும் இடங்கொடுக்க முடியாது. பிரஞ்சு இந்திய மக்கள் கருத்தை யோக்கியமான முறையில் நிர்ணயிப்பதற்குத் தேவையான எல்லா நிபந்தனைகளையும் பிரஞ்சு அதிகாரிகள் ஏற்கும்படி இந்திய சர்க்கார் வற்புறுத்தியே தீரவேண்டும். இவைகளுக்குப் பிரஞ்சு அதிகாரிகள் இணங்கவில்லையானால், அதற்கு ஒரே ஒரு பொருள்தானுண்டு. இதில் முறைப்படி கையாள வேண்டிய நேர்மையான வழியை நிராகரிப்பதால் ஏற்படும் விபரீதங்கள் அனைத்துக்கும் பிரஞ்சு அதிகாரிகளே பொறுப்பேற்க வேண்டும்.

★

சென்னைக் கார்ப்பொரேஷன் மேயராகச் சென்ற வாரம் தெரிந்தெடுக்கப்பட்ட ஸ்ரீ எஸ். ராமஸ்வாமி நாயுடு இடதுபுறத்தில் நிற்கிறார். டெபுடி மேயராகத் தெரிந்தெடுக்கப்பட்ட ஸ்ரீ பக்கிரிஸ்வாமிப் பிள்ளை வலதுபுறத்தில் நிற்கிறார்.

★





வேலை தேடித்தரும் ஸ்தாபனத்தின் ஆதரவில் நடத்தப்படும் பொருட்காட்சி சாலையைச் சென்ற வாரம் சென்னைக் கவர்னர் திறந்துவைத்தார். நடுவே கவர்னர் வீற்றிருக்கிறார். மந்திரி டாக்டர் ராஜனையும் படத்தில் காண்க.



சென்னை பஸ்களில் இப்போது ஸ்திரீகள் கண்டக்டர்களாக வேலை பார்க்கின்றனர். இவர்கள் இவ்வேலைக்கு வருமுன் பயிற்சி பெறுகின்றனர். இப்பயிற்சியைப் பெற்ற முதல் கோஷ்டி சென்ற வாரம் பதவி ஏற்றது. புட்போர்டில் நிற்பவர் ஆங்கிலோ-இந்திய ஸ்திரீ கண்டக்டர்.

அட்டைப்படம்

தலைவன் பிரிவு

எப்போதும் தன்னோடு இருந்து மகிழ்ச்சி தந்து வந்த தன் தலைவன் வேறிடம் செல்வதற்குத் தலைவி மனம் ஒப்பவில்லை. தானும், தலைவியும் 'அநுபவித்து வரும் இவ்வின்ப வாழ்க்கை தொடர்ந்து நீடிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு தலைவன் பொருளீட்டும் பொருட்டு வெளி நாடு செல்ல முற்படுகிறான். இந்தப் பயணம் அவனுக்கு சுலபமாகக் கைகூடவில்லை. ஏனெனில், தலைவி இந்தத் தற்காலிகப் பிரிவுக்கும் சம்மதி கொடுக்கவில்லை. எந்த நேரத்திலும் பிரிந்திருப்பதில்லையென்ற திட சங்கல்பத்தோடு அவள் பிடிவாதம் செய்து பிணங்குகிறாள். தலைவன் என்னென்னவெல்லாமோ சொல்லி, கடைசியில் ஒருவாறு தலைவியின் மனம் தேறுவதற்கு வழிசெய்து, நிலைமையைச் சமாளிக்கிறான்.

இறுதியில் அவன் தன் காதலியிடம் "நிச்சயமாக என்னை நீ நம்பு. கார் பருவம் வந்தவுடன் திரும்பி வந்துவிடுகிறேன். அதுவரையில் நீ பொறுத்துக் கொண்டிரு" என்று உறுதி கூறி பிரிந்து செல்லுகிறான்.



தன் காதலன் குறித்துச் சென்ற அந்தக் கார்காலமும் இதோ வந்துவிட்டது. மழைக் காலம் வந்துவிட்டது என்பது கொன்றை மலர்கள் புஷ்பிப்பதிலிருந்து தெரியவருகிறது. முல்லைக் கொடிகள் முகைகள் விளங்க அரும்பியிருக்கின்றன. காட்டிலுள்ள மிருகங்களும், பட்சிகளும் ஜோடி ஜோடியாக ஒன்றுசேர்ந்து கார் பருவத்திற்கொத்தவாறு கூடி வாழ்கின்றன. ஆண் மான் பெண் மானோடு துள்ளிக் குதித்துக் குதூகலிக்கிறது. இவற்றையெல்லாம் கண்ணுறும் காதலிக்குக் கார் பருவம் வந்துவிட்டது தெள்ளெனத் தெரிகிறது. அவளுக்கு உடனே தனிமை அளவுக்கதிகமாகக் கசக்க ஆரம்பித்து, பிரிவுத் துயரம் மிக்க தீவிரமாகி, மனம் வெதும்புகிறாள். 'ஆண் மானின் ஆட்ட பாட்டங்களைக் கண்டு இன்ப வாரிதியில் திளைக்கும் இந்தப் பெண்மான், என்னைவிட எவ்வளவோ பாக்கியசாலி! கார் காலம் வந்தவுடன் திரும்பி வந்துவிடுவதாகச் சொன்னார்; இன்னும் வரக் காணோம். இந்தப் பிரிவைச் சகித்துக்கொண்டு இன்னும் நான் உயிர்வாழ்கிறேனே!' என்று தலைவி தன் தோழியிடம் நொந்துகொண்டு சோர்ந்துபோகிறாள்.

தன்னுடைய பேதைப் புத்தியைப் பார்த்து "இன்னுமா நீ உயிரை வைத்துக்கொண்டிருக்கிறாய்?" என்று கார் காலம் எள்ளி நகையாடுவது போலத் தலைவிக்குத் தோன்றுகிறது. இத்தகைய பேச்சுக்கு இடத்தைக் கொடுத்துவிட்டதாம் கார்காலம்!" "இனிமேற் கொண்டும் அவர் வராமற் போவாராயின், நான் உயிர் வாழ்வது சாத்தியமில்லை" என்று தலைவி உறுதி கொள்கிறாள். தலைவியின் இவ்வுள்ளப் போக்கைப் படம் பிடித்துக் காட்டும் குறுந்தொகைப் பாடல் வருமாறு:—

வன்பரல் தெள் அறல் பருகிய
இரலை தன் இன்புறு துணையொடு
மறுவந்து உகளது
தான் வந்தன்றே தளிதரு தண் கார்
வாராது உறையுநர் வரல் நசைஇ
வருந்தி நொந்து உறைய
இருந்திரோ எனவே.

வன்பரல் தெள் அறல்-வலிய பருக்கைக் கற்களினிடத்தேயுள்ள தெளிந்த நீரைக் குடித்த; இரலை-ஆண்மான்; இன்புறு துணையொடு-இன்பத்தை நுகர்தற்குரிய தன் பெண் மானோடு; மறுவந்து உகளது-களிப்பினால் சுழன்று துள்ளி விளையாடா நிற்கவும்; வாராது உறையுநர்-இங்கு வாராமல் சென்ற இடத்தே தங்கிய தலைவர்; வரல் நசை இ-மீண்டும் வருதலை விரும்பி; வருந்தி நொந்து உறைய-மிக வருந்தித் தங்கும் பொருட்டு; இருந்திரோ எனவே-உயிர் வைத்துக்கொண்டிருந்திரோ என்று கேட்பதற்கு; (தளி தருதண்கார்-மழைத் துளியைத் தருகின்ற தன்மையான கார் பருவம்.)

—★—

அறிவாளிகள், படிப்பு வாசனை இல்லாதவர்களாயும், படிப்பு வாசனை உள்ளவர்கள் அறிவிலிகளாக இருப்பதையும் உலகத்தில் பார்க்கிறோம். நான் ஒரு சில விஷயங்களில் அறிவற்றவனாகவும், மற்றும் சில விஷயங்களில் படிப்பு வாசனை அற்றவனாகவும் இருக்கிறேன். அறிவையும் படிப்புத் திறமையையும் உதவ எனக்குப் பற்பல நண்பர்கள் கைகொடுத்து உதவுவார்கள். இந் நண்பர்கள் இத்தாலியில் இருந்தும் வருவார்கள், ஐரோப்பிய குக்கிராமத்திலிருந்தும் வந்துவிடுவார்கள்; மெக்ஸிகோ, ஜப்பான், ரஷ்யா இப்படி வங்கம், கலிங்கம், குஜரம் முதலாக; உள் நாடு அயல் நாடுகளிலிருந்தும் வருகிற நண்பர்கள் என் அறிவின்மையை ஒழிக்க வருகிறவர்கள்; இவர்கள் எல்லோரும் நான் இருந்தாலும் இல்லாவிட்டாலும் எனதறையில் கம்பீரமாக வீற்றிருப்பார்கள்; மௌனமாகக் கூடியிருப்பார்கள்; தோளோடு தோள் சேர்ந்து நின்றாலும் கப்சிப் என்ற மௌனமே நிலவும். ஒருவருக்கொருவர் பேசமாட்டார்கள். தனித்தனியே என்னோடு சம்பாஷிப்பதோடு இந் நாட்டு நண்பர்களின் வேலை முடிந்துவிடும். இந்தப் பரோபகாரிகளை என்னை விட்டுப் பிரித்து கூட்டிக்கொண்டு போய்விடும் சூழ்ச்சிகள், அவ்வப்போது ஒரு சிலரால் நடைபெறும்.

சில மாதங்களுக்கு முன்னால் சாரங்கன் வந்தான். மழை வந்தால் பூமி குளிர்வது போல, சாரங்கன் வந்தால் புஸ்தகங்கள் இடம்மாறும்; கைமாறும்; நான் ஏமாறுவேன்! ஆடிக்காற்றில் பறக்கிற இலவம் பஞ்சுபோல என்னையும் எனது அயல் நாட்டு நண்பர்களையும்-அநேகமாக இவர்கள் ஆங்கில உடையில் இருப்பார்கள்!-பரத்தி விடுவான்; படாதபாடு படுத்தி விடுவான். சீதையைத் தூக்கிக்கொண்டு போன ராவணன் போல, அலக்காக அலமாரியோடு தூக்கிவிடுவான்.

'இது என்னடா புஸ்தகம். நான் பார்க்கவே இல்லையே. கமலாம்பாள் சரித்திரமா?'

'ஆமாம்; பூகோள பாடத்தில் முதல் மார்க்கு வாங்கியதற்குப் பரிசு இந்தக் கமலாம்பாள் சரித்திரம். அதனாலே...மேலும் இது பழைய காலத்து நாவல், சாரங்கா' என்று தட்டிக் கழித்தேன். மற்றப்படி இரவல் கொடுப்பதற்காக ஒரு பக்கமாக அடுக்கப்பட்டு சதகுப்பைகள் அருகாக நண்பன் கவனத்தை இழுத்தேன். சாரங்கன் என்னிடமிருந்து ராஜமய்யரின் நிழலைத் தட்டிக்கொண்டு போகத் தீர்மானித்துவிட்டான். கமலாம்பாளுக்கு ஆபத்து வந்துவிட்டது.

'அது பழைய பந்தா. அதையா போயும் போயும் எடுத்தாய்?'

'பழைய காலத்து நாவல் என்றால் இன்னும் ருசி...பாட்டி மடியில் படுத்துக் கதை கேட்கிறமாதிரி; பாட்டி கையால் சாதம் ஊட்டிக்கொள்ளுகிற இன்பம் போல...'

இப்படி ஏதேதோ பழைமையின் பெருமைபற்றிப் பேசவே, 'சாரங்கன், அது நாவல், மற்றப்படி அறிவுக்கு விருந்து அதில் இருக்காது' என்று மழுப்பினேன்.

'நாவல் நாவல் என்பது என்னடா, வாழ்க்கையின் நிழல், சமூகத்தின் கண்ணாடி, உன்னையும் என்னையும் எடுத்த போட்டோ பிரதிபலிப்பு, மனுஷனுடைய ஆசாபாசங்கள் சிந்தனை சிதறல்கள், எண்ணக் கலவைகளின் நறு மணம்... விஞ்ஞானி, தத்துவதரிசி, பூச்சி பூஞ்சாண சாஸ்திரிகள் இவர்களைவிட மனித இதயப் போராட்டத்திலே பங்கெடுக்கும் இன்ப நூல், நாவல் ஒன்றுதான். அது சொல்லுகிற, கொடுக்கிற இன்பம் வேறெந்தத் துறையிலும் இல்லை. இதனால் தான் மகாகவி கம்பனைவிட கத்தரிக்காய் எழுதிய நாவலை நாம் சுலபமாக ரஸிக்கிறோம். அதிலும், இந்தக் கமலாம்பாள் மிகப் பழைய நாவல். அது தாண்டா எனக்கு வெகு பிரியம்; பழைய நாள் கிடாரங்காய் ஊறுகாய் மாதிரி. இலக்கியத்திலே நானும் பத்தாம் பசலிதான்.'

'அப்படியானால் இதை எடுத்துக்கொண்டா போகிறாய்?'

'ஆமாம்'

'பிரமாதமாக இல்லாவிட்டாலும், நான் பரிசு பெற்ற புஸ்தகம் என்பதற்காகச் சொன்னேன்.'

எனக்கு உள்ளூர அதை எடுத்துக்கொண்டு போய்விடக் கூடாதே என ஆதங்கம்.

‘‘ஓகோ, பரிசுப் புஸ்தகமா? நீ பலே மூளைக்காரன் தான். நமக்கெல்லாம் பள்ளிப் படிப்பு கோழிமுட்டை!’’

‘‘புஸ்தகத்தை அப்படியே வைத்துவிடு, எடுக்க வேண்டாம்.’’

சாரங்கனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. ‘‘சொல்லி விடப்பா, புஸ்தகம் கொடுக்க இஷ்டமில்லை யென்று. ஏன் பன்னிப் பன்னி பேசுகிறாய்’’ ‘‘என்றானே யொழிய, புஸ்தகம் அவனிடம் போய்விட்டது.

நான், ஏதோ பறிகொடுத்து விட்டவன்போல பரக்கப் பரக்க விழித்தேன்.

‘‘ஏண்டாப்பா; இரவல் கொடுத்தால் தானம் பண்ணினமாதிரி என்று பலர் பரிகசிப்பதைக் கேட்டிருக்கிறேன். நான் இரவல் கொடுத்ததெல்லாம் எனக்குப் பத்திரிகை விஷய தானம்போல என்னிடம் வந்து விழும். நான் இரவல் வாங்கிக்கொண்டு போனாலும் திரும்பக் கொடுத்துவிடுகிறது. இதுவே என் சுபாவம். உனக்கு இஷ்டமில்லாவிட்டால், புஸ்தகத்தை உன் கைப்பட அலமாரியில் வைத்துவிடலாம்’’ என்று புஸ்தகத்தை மேஜைமேல் வைத்தான்.

இப்படிச் சொல்லும்போது, மறுக்க முடிகிறதா? கொண்டு போகும்படி நல்ல வார்த்தை சொன்னேன். நானே என் கைப்படத் தூக்கி கையில் திணித்தேன்.

என்னமோப்பா, நீ பிடிவாதப்படுத்துவதால் கொண்டு போகிறேன். ஒரு வாரம். அதிகம் வேண்டாம்.

‘‘எவ்வளவு நாளானாலும் பாதகமில்லை. ஒரு மாசம், ஏன் மாசக்கணக்காக இருந்தாலும் சரி.’’

, மாசமா? எதுக்கு? அடுத்த ஞாயிற்றுக்கிழமை சரியாக நாலு மணிக்கு ஐயா வந்துவிடுவார். டாண்ணு நாலு என்றால் நாலு மணிதான். இவ்வளவு கண்டிப்பு கறார் இருக்கிற நீ ‘சாரங்கனுக்கு இன்று கமலாம்பாள் இரவல்’ என்று குறிப்புஎழுதிக் கொள். நான் மறந்து விட்டாலும் நீ செவிட்டில் அறைந்தமாதிரி நானே என்னிடம் கேட்கலாம். ரொம்ப சந்தோஷம். வரட்டுமா? அவசியம் அடுத்த ஞாயிற்றுக் கிழமை நாலு மணி, மறந்து விடாதே.’’

‘‘...புஸ்தகம் கட்கத்துக்குள் போய் உட்கார்ந்துவிட்டது...’’

அடுத்த வாரத்தில் ஞாயிறு வந்தது. ஏன், திங்கள், செவ்வாய், புதன், வியாழனும் போய், வெள்ளிகூட விடிந்தது. விடிந்தால், போகிறபொழுது போய்க்கொண்டே ஞாயிறும் போயிற்று. மாசமும் கடந்தது. சாரங்கனைக் காணோம்.

திடீரென்று இன்றைக்கு வந்தானய்யா பேர்வழி. வரும்போதே ‘ஏதாவது நல்ல புஸ்தகம் இருந்தாலும் நீ நமக்கெல்லாம் படிக்கக் கொடுப்பாயா?’ என்று சொல்லிக்கொண்டே புஸ்தக அடுக்கில் கை வைத்தான். நாலைந்து புதிய புஸ்தகங்கள் அங்கே இருந்தன.

‘இன்னொரு புஸ்தகமும் வேணுமா? கமலாம்பாள் சரித்திரம் என்ன ஆயிற்று?’

‘அருமையான நாவல். ராஜமய்யர் பெருமைப்படக்கூடிய நாவல். அதேமாதிரி இன்னொன்று கொடு. நல்ல புஸ்தகமானாலும் என்னை நம்பிக்கொடுக்கலாம். சொன்னபடி ‘கமலாம்பாள்’ கொடுத்தேனா இல்லையா?’

‘‘கொடுக்கவில்லையே!’’ என்று மறுத்தேன்.

‘‘கொடுக்கவில்லையா, நான் கொடுத்தே விட்டேன்.’’

‘‘கொஞ்சம் மறதி உண்டோ உனக்கு? கொடுக்கவில்லை. சரி, போனால் போகிறது. ஒன்றும் குடி முழுகிவிடாது. கிடைத்தால்எப்பொழுதாவதுகொண்டு வந்து கொடுத்தால் போச்சு.’’

‘எப்பொழுதாவது என்னடா நன்றாய்நினைத்துப்பார். எனக்கு ஞாபகம் இருக்கிறது.கொடுத்து விட்டேன். ஞாயிற்றுக்கிழமை நாலு மணிக்குக் கொடுத்தேன்.’

‘எப்போ? எந்தத் தேதி?’

‘அதுவா? நான் கடைசியாக எப்போ வந்தேன்?’

‘கமலம்பாளைத் தூக்கிக் கொண்டு போனதுதான் நீ கடைசியாக வந்தது.’

‘அப்படி இருக்க முடியாதே. என் டைரியைப் பார்க்கலாம்.

ஞாயிறு 15–ந்தேதி கமலாம்பாள் வாபஸ். பார்த்தாயா? ஐயா டைரியைப் பார்.

‘நீ எழுதிக்கொண்டால் அது கொடுத்துவிட்டதாக ஆகுமா என்ன?’

நான் கொடுக்கவில்லை என்பதற்கு ஏதாவது ஆதாரம் இருக்கிறதா?’ என்று போட்டானே ஒரு போடு.

‘நீ திருப்பிக் கொடுக்கவில்லை என்பது தெரிந்தாலும், அதைப் பற்றிப் பாதகம்......’

‘நான் திருப்பிக் கொடுத்ததாக உன் நினைவிற்குவரவில்லை என்கிறாய். அப்படியானால், என் ஞாபக சக்தியைக் குறை கூறுவது தவறு. அந்தப் புஸ்தகம் உன்னிடம் இல்லையென்று தைரியமாகச் சொல்ல முடியுமா?’

‘கட்டாயம் முடியும். அதனால் பாதகம்......’

‘தேடிப் பார்த்தாயா, வீட்டிலே எங்கும்?’

‘எங்கும் தேடிப் பார்த்ததாகச் சொல்ல முடியாது. இருந்தாலும் பரவாயில்லையப்பா.’

‘தேடிப்பார்க்கிறதாகவாவது அபிப்பிராயம் இருக்கிறதா?’

‘தேடிப் பார்த்தேன். அது இங்கே எப்படி அகப்படும்?’ நான் தேடுகிறபோது சாரங்கனும் தேடினான்:

‘யாருக்காவது இரவல் கொடுத்திருப்பாயோ, நினைத்துப் பார்.’

‘கொடுத்ததுதான். போனால் போகிறது. விட்டுத்தள்ளு.

‘விட்டுத் தள்ளுகிறதா; இதென்ன விளையாட்டுடா? அது கிடைக்கிறவரை எனக்குத் தூக்கம் வராது!’

‘அந்தப்- பழைய புஸ்தகம் எப்பவோ ஜாகரபியில் மார்க்கு வாங்கியதற்காக பரிசு கொடுத்தது. போனால் போகட்டும். இப்போ, அதை நாலணாவிற்குக் கூட எவனும் தீண்டமாட்டான்?’

‘சொல்லுகிறதைக் கேளு, அதேமாதிரி பழைய புஸ்தகம் வாங்கி, நல்ல பைண்டும் செய்து, ‘பூகோள சாஸ்திரப்

‘‘...........நான் தேடும்போது சாரங்கனும் தேடினான்.........’’

பரிசு’ என்று எழுதியும் தந்து விடுகிறேன். இதனால் என்ன செலவானாலும் பாதகமில்லை!’

‘இப்படி நீ சொல்லுவாய் என்று எதிர்பார்க்கவில்லை சாரங்கன்.’

‘நீ வந்து, அந்தப் பாடாவதி புஸ்தகத்தை நான்தான் திருடிக் கொண்டதாகப் பழி சுமத்தும் போது...’

‘அவனை இடைமறித்து, சே சே, என்னப்பா, நீ இப்படியெல்லாம் பேசுகிறாய். எங்கேயாவது தவறுதலாக வைத்திருப்பாய், இடதுகை வாக்கிலே’

‘நான் அப்படி வைத்திருக்க மாட்டேன்.’

‘யாரோ, நம்ம இரண்டு பேரில் ஒருத்தர்.’

‘ரொம்ப சந்தோஷம். தன் குற்றத்தை ஒப்புக்கொள்ளுகிறவர்கள் இந்த லோகத்திலே கொஞ்சம்பேர்தான்.எங்கேயோ இடதுகை வாக்கிலே வைத்து விட்டாய். இனிமேலாவது அடுத்தவன் மனசை இப்படிப் புண்படுத்தமாட்டாய் என நினைக்கிறேன்.’

எனக்கு மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் திணறுதல் ஏற்பட்டது. ஏதோ அவனை தாஜா பண்ணி கொஞ்சம் அவசரமாகப் பேசி விட்டேன். நான் வெளியே போயிருக்கிற நேரத்திலே நீ வீட்டிலே கொண்டுவந்தும் கொடுத்திருக்கலாம்.

‘‘அப்படித்தான் இருக்கும். அதில் சந்தேகம் என்னடா. நீ வெளியே போயிருப்பே,உன் வீடு ரூம்தான் திறந்த மடம் ஆச்சே! எவனாவது ஒரு பயல் எடுத்துக்கொண்டு போயிருப்பான் என்று சொல்லிக்கொண்டே,நம்மைப்புஸ்தக விஷயத்தில் இனிமேலாவது நம்புவாயல்லவா? கண்டிப்பு கறார் என்றால் ஐயா அதில் கண்டிப்புதான். வரட்டுமா? இது என்ன, புது நாவலா? அடுத்த வியாழன் 3–30–க்கு வருகிறேன். கறார்தான். ஞாபகம் வைத்துக்கொள் வியாழன் 3–30.’’

ஆசாமி புஸ்தகத்தோடு போய்விட்டான்!

'ஜலப்பிரபா'வின் முதல் யாத்திரை







விசாகைப்பட்டினம் துறைமுகத்திலிருந்து தனது முதலாவது யாத்திரைக்குச் சென்ற "ஜலப் பிரபா"வின் தோற்றத்தை முதலில் பாருங்கள். புதிய டில்லியிலிருந்து பொண்ணம் மின்சாரவிசைகொண்டு ஜலப்பிரபாவை ஸர்தார் படேல் மிதக்க விட்டுப் பேசினார். கப்பலைச் சிருஷ்டித்த ஸிந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனியைச் சேர்ந்த ஸ்ரீ வால்சந்த் ஹீராசந்த் ஸர்தாருக்கு அருகே வீற்றிருக்கிறார்.

(கீழ் படம்)

ராஷ்டிரபதியாக வந்திருக்கும் டாக்டர் பட்டாபியைப் பாராட்டச் சென்ற வாரம் டில்லியில் நடந்த ஒரு கூட்டத்தில் ஹைதராபாத் காங்கிரஸ் தலைவர் ஸ்வாமி ராமானந்த தீர்த்தர் பேசினார்.



தேர்த்தட்டு வார்த்தை

மகா சாஸனம், அட்லாண்டிக் சார்ட்டர், வார்சேல்ஸ் உடன்படிக்கை இவற்றைப் பற்றிய விவரங்கள் நம்மில் பலருக்குத் தெரியும். ஒவ்வொன்றும் சரித்திரப் பிரசித்தம் பெற்றது. அரசியல் பிராதான்யம் வாய்ந்தது என்கிறோம். சாஸனமோ உடன்படிக்கையோ ஒரு காலத்தில் ஒரு தேசத்தில் வாழ்ந்த மக்களுக்கு நன்மையாகவிருந்திருக்கலாம். பிற தேசங்களுக்குத் தீமையாகவுமிருந்திருக்கலாம். அக்காரணங்களாலேயே அப்பொழுது இருந்த மக்களின் கவனத்திற்குரிய விஷயமாயிருந்திருக்கலாம். பிற்காலத்திலோ, பள்ளிக்கூடத்தில் சரித்திரம் படிக்கும் மாணவர்களுக்கு மட்டும் பரீட்சையில் தேறும் பொருட்டு ஞாபகத்தில் வைக்க வேண்டிய செய்திக் குப்பைகளில் ஒன்றாகிவிடுகிறது.

இதன்றி, ஞானிகள் அல்லது பக்தர்கள் கோஷ்டியில் பிரசித்தமாக வழங்கிவரும் வார்த்தைகளும், செய்திகளும் பல உண்டு. அவற்றின் பிராதான்யம் கூடுதல் குறைவில்லாமல் எக்காலத்திலும் ஒரே விதமாயிருக்கும். அவை, தோன்றிய காலத்தில் பயன்பட்டது போலவே நடக்கும் காலத்திலும், வருங்காலத்திலும் பயன்படும். ஒரு தேசத்தாருக்கோ ஒரு வகுப்பாருக்கோ மட்டும் இல்லாமல், அகில உலகிற்கும் பயன்படும்.

பாரதப் போர் ஆரம்பமாகு முன் இருவரிடையே ஓர் சம்வாதம் நிகழ்ந்தது. சோக மோகத்தால் இருண்ட உலகில் கலங்குவோர், சம்வாதத்தில் மனத்தைச் செலுத்தினால் ஒளியும் தெளிவும் பெறலாகும். இச் சம்வாதத்தின் சாரத்தைப் பருகிய நம்மாழ்வார் 'வார்த்தை' என்றே கூறுகிறார். வார்த்தை என்பது பொதுவாக எல்லாச் சொற்களையும் பேச்சையும் குறிக்கும். எனினும், அவை பயனற்றவை. இச்சம்வாதம் ஒன்றே படிப்போர்க்கும் கேட்போர்க்கும் அழியாத பயன் தருவது எனக் கருதி, 'வார்த்தையறிபவர் மாயவர்க்காளன்றி ஆவரோ' எனக் கூறினார். ஆண்டாள் இச் சம்வாதத்தை 'மெய்ம்மைப் பெரு வார்த்தை' என்று அடைமொழி தந்து குறிப்பிட்டாள். பொய்கையாழ்வார், "திறன் உரையே சிந்தித்து இரு" (திறன்–வலி) எனச் சம்வாதத்தை வலிமை கொண்ட சொற்களாகப் பேசுகிறார்.

இந்தியாவில் மாத்திரமன்றி, பிற நாடுகளிலும் கீதா என்ற பெயரால் வழங்கும் இச்சம்வாதம் மஹாத்மா காந்தியடிகளின் உள்ளத்தையும் கொள்ளை கொண்டது. கீதையின் பண்பைத் தெரிந்துகொண்டதிலிருந்து கீதா பாராயணம் இல்லாமல் ஒரு நாள்கூட மகாத்மாவின் வாழ்நாளில் கழிந்ததில்லை. பக்தி என்னும் தோணிகொண்டு கீதா கீதைக் கடலில் மூழ்கிய ஞானிகளில் மகாத்மா தலை சிறந்தவர். மூழ்கி எடுத்த உபதேச ரத்னங்களை ஒவ்வொரு நாளும் பிரார்த்தனைக் கூட்டத்தின்போது அள்ளி வீசினார். அவ்வாறே வாழ்ந்து காட்டினார். கீதையின் கருத்தை உள்ளபடி உணர்ந்தோர், உடலையும் உயிரையும் எவ்வாறு பாவிப்பர் என்பதைத் தானே வீர மரணம் எய்தியும் காட்டினார்.

'கீதா கீதா' என்று ஓயாமல் சொல்லி வந்தால், 'தியாகீ தியாகீ' என்ற சொல் தோன்றும். அதிலிருந்து தியாக புத்தியும் உண்டாகும்' என்று ஆசார்யர்களுள் ஒருவர் கூறுகிறார். கீதையில் திளைத்த மஹாத்மாவிடம் நாம் கண்ட தியாகத்தின் பெருமை எல்லையற்றது. சென்ற பல நூற்றுண்டுகளாக வாழ்ந்தவர்களில் மஹாத்மா தியாகராஜனாக விளங்குகிறார். பிறர் நலத்திற்காகத் தங்நலனைச் சிறிதளவாவது தியாகம் பண்ண உலக மக்கள் அனைவரும் தயாராக வேண்டும். அவ்வித தியாகத்திலேதான் உலக சுபிட்சம் தோன்ற முடியும் என்று அடிக்கடி கூறி வந்தார். சுமார் பதினைந்தாண்டுகளுக்கு முன் மஹாத்மா சென்னை நகரத்தில் ஒரு கூட்டத்தில் பேசும் பொழுது, 'பகவத் கீதை படிப்பதற்காகவாவது நீங்கள் அனை

வரும் வடமொழி பயின்ருல் நான் மகிழ்ச்சியடைவேன்'என்று குறிப்பிட்டது நமது சிந்தனைக்குரியது. கீதை படிப்போர் தமிழ் நாட்டில் மிகக் குறைவாயிருப்பதை நினைத்து,மகாத்மா அவ்வாறு குறிப்பிட்டிருக்கலாம். குறைவாயிருப்பதற்குக் காரணம் இல்லாமல் இல்லை.

இந்தியாவில் பேசப்படும் பாஷைகளில் தமிழ் ஒன்றே வடமொழியோடு மிகமிகக் குறைந்த தொடர்புடையது. எழுத்து, ஒலி,பொருள், இலக்கணம் இவற்றில் வடமொழியிலிருந்து அதிகம் வேறுபட்டிருப்பதால், தமிழ் பேசுவோருக்குக் கீதையைப் படித்தறியும் அளவிற்குக்கூட வடமொழி கற்பது கடினமான காரியமாகிறது. அதனுல் 'பொருளிலும் அழகிலும் சாரத்திலும் மூலத்தோடு வேறுபடாமல் தமிழில் ஆக்கப்பட்ட கீதை நூல் இருந்தால் நமக்குச் சாதகம் ஆகும்'எனப் பலர் நினைப்பது இயல்பு. ஆனுல். சுமார் அறுநூறு வருஷங்களுக்கு முன்னரே அவ்வாறு ஆக்கப்பட்ட கீதை நூல் தமிழில் இருந்தும் நம்மவரில் பெரும்பாலோர் அதை அறியாமலிருக்க நேர்ந்தது. வட மொழியிலுள்ள ஒவ்வொரு கீதா ச்லோகமும் இந்நூலில் ஒவ்வொரு வெண்பாப் பாட்டாக அமைந்திருக்கிறது. தமிழ்நாட்டிலுள்ள வடமொழிப் பண்டிதர்களில் இத் தமிழ்ப் பாடல்களைச் சொல்லக் கேட்டு ஆச்சர்யப்படாதாரில்லை. 'கடவுள் அவதாரம் போல் வடமொழி கீதையின் தமிழ் அவதாரம்' என்றுகொண்டாடுகின்றனர்.

'தான் பெற்ற பேறு இவ்வையகம் பெறுக' என்று சான்ருேர்க்கு இயல்பாக வருகின்ற மஹாத்மாவின் ஆசையைப் பூர்த்தி செய்யவும், நாமே ஆத்மானந்தம் பெறவும் ஏன் கீதை வெண்பாவைப் பயில பிரதிவாரமும் ஒரு சிறிது நேரமாவது செலவிடக்கூடாது?. கீதையைத் தமிழில் வெளியிட்ட ஆசிரியர் 'வாதிகேசரி அழகிய மணவாளஜீயர்'என்று அழைக்கப்படுகிருர். இவருடன் தொடர்பு கொண்ட பக்தர்கள் நம்பிள்ளை, பெரிய வாச்சான்பிள்ளை முதலியோர். இப்பக்தர்கள் கோஷ்டியில் கீதை 'தேர்த்தட்டுவார்த்தை' என்றே சொல்லப்பட்டது.

எப்பொருளிலும் தங்கியிருப்பவன் இறைவன். மனம் மொழி மெய்களைக் கடந்து நிற்பவர் கடவுள். எங்கும் ஒக்க வியாபித்து இருப்பவன் வாஸுதேவன். அத்தகைய பரம்பொருள், அனைவரும் காணும் உருவம் பெற்று பாரத யுத்தத்தின்போது தன் மேன்மையைப் பாராது சாரதியாகித் தேரின் கீழ்த்தட்டில் அமர்ந்தார். தனக்கு மேல் ஸ்தானத்தில் இட்ட ஆசனத்தில் அமர்ந்திருந்த அர்ஜுனனுக்குக் கிருஷ்ண பகவான் தலைப்பாகையணிந்து, கையில் சாட்டையேந்தி, தன் உடலில் புழுதிபடிய தேர்த்தட்டில் வீற்றிருந்த சாரத்ய நிலையையும், அதை மேற்கொண்ட காரணத்தையும்அடிக்கடி சுட்டிக் காட்டியே கீதோபதேசம் செய்தார். சாரதியாய்க் கீழ்த்தட்டில் அமர்ந்திருந்த தன் நிலையிலேயே சீலகுணமாகிய பகவத்தன்மையைக் காட்டினுர். சாரமாகிய அப்பொருளையே கீதையில் விவரித்தார், ஆதலால், ஞானிகளும் பக்தர்களும் கீதையை 'தேர்த்தட்டு வார்த்தை' என்று விவகரிப்பர்.

1, அகமும் குருடு

பாண்டவர் சேனையும், கௌரவு சேனையும் அணிவகுக்கப்பட்டு குருக்ஷேத்திரம் அடைந்தன. ராஜ்யாதிபத்தியத்திற்காகப்போராடுவதென்றே முடிவு செய்த பாண்டவர்களும் கௌரவர்களும் தத்தம் பரிவாரங்களோடு போர்க்களம் சென்றனர். அத்தருணத்தில் வியாஸரின் அருளால் போர்க்களத்தில் நடப்பன யாவற்றையும் கண்டறியவல்ல சக்தி பெற்றிருந்த சஞ்சயனைப் பிறவிக் குருடனுகிய திருதராஷ்டிரன் அணுகினுன். ஒரு கேள்வியும் கேட்கிருன்.

தன்மநில மாகும் குருநிலத்துத்
[தாம்சேர்ந்து
வன்மை அமர் இச்சித்தென்
மைந்தரும்தம்—தன்மையுறப்
பஞ்சவரும் என்செய்தார்? என்
[றந்தன் பண்புரைப்பச்
சஞ்சயனும் சொன்னுன்
[சமைந்து

(ப-ரை) வன்மை அமர் இச்சித்து—கொடிய போரைவிரும்பி, தன்மநிலம் ஆகும் குருநிலத்து—புண்ணிய பூமியாகிய குருக்ஷேத்திரத்தை, தாம் சேர்ந்து—தாங்கள் அடைந்து, என் மைந்தரும்—எனது புத்திரர்களும், தம்நன்மை உறப் பஞ்சவரும்—தமது அரச பதவியை அடையப் பாண்டவர்களும், என் செய்தார்? — என்ன காரியம் செய்தார்கள்? என்று அந்தன் பண்பு உரைப்ப—என்று பிறவிக் குருடனுன திருதராஷ்ட்ரன் இயல்பு கேட்க, சஞ்சயனும் சமைந்து சொன்னுன்— சஞ்சயனும் ஏற்ற பதில் சொன்னுன்.

4
தர்மக்ஷேத்ரே குருக்ஷேத்ரே
ஸமவேதா யுயுத்ஸவ:
3
மாமகா: பாண்டவாஸ் சைவ
கிமகுர்வத ஸஞ்சய.

(ப-ரை) ஸஞ்சய-ஸஞ்சயனே! தர்மக்ஷேத்ரே குருக்ஷேத்ரே—புண்ணிய பூமியாகிய குருக்ஷேத்திரத்தில், யுயுத்ஸவ:—யுத்தம் செய்யவெண்ணி, ஸமவேதா:—கூடின, மாமகா:—எம்மவர்களும், பாண்டவாஸ்சைவ — பாண்டவர்களும்கூட, கிம குர்வத ?—என்ன செய்தார்கள்?

தருமம் தோன்றுவதற்கும் ஏற்கனவே தோன்றியது வளர்வதற்கும், ஆகவித்துக்கு விளைநிலம் போல் விளங்கியதால் குருக்கள் வாழ்ந்த இடத்தை 'தன்மநிலம்' என்று குறிப்பிடுகிருர். போர் செய்யும் நோக்குடன் சென்ற போதிலும் தர்ம க்ஷேத்திரத்தின் மகிமையால் 'அஹிம்ஸா தர்மம் தோன்றிப் போரை நிறுத்திவிட்டனரோ' என்ற ஐயங்கொண்டு இரு சாராரும் என்ன செய்தனர்? என்று குருடன் கேட்டான். தர்ம நோக்குடைய பாண்டவரும் தனக்கு மைந்தர்களாகவிருக்க, அவர்களை வேறு பிரித்து என் மைந்தரும் பஞ்சவரும் என்று துரியோதனுதியரிடம் தனக்கிருக்கும் பேரபிமானத்தையும், பாண்டவர்களிடம் தனக்கிருக்கும் த்வேஷத்தையும்வெளிப்படுத்துகிருன். பாண்டவர் தரும நெறியில் செல்பவர். சாத்விகம் மிக்கவர். ஆதலின், யுத்தம் எப்படி நடந்தது? என்று கேட்பதைவிட்டு, நிலத்தின் மகிமையால் தன் மைந்தர்கள் தெளிவு பெற்று பாண்டவர்களிடமிருந்து வஞ்சனையால் ராஜ்யத்தை அபகரித்த பிழையை உணர்ந்து,அனுதாபத்தோடு போரின்றியே அந்த ராஜ்யத்தைக் கொடுத்துவிட்டால் தனக்கு நஷ்டமும் தொல்லையும் ஆகுமே என்று தடுமாற்றமடைந்திருப்பது,'என் செய்தார்?' என்ற கேள்வியில் நன்கு வெளியாகிறது. வெளிப் பார்வையிழந்த திருதராஷ்ட்ரன் புத்திர வாஞ்சை மேலிட்டு தர்மநோக்கு மிழந்திருக்கிருன் என்பது அவன் கேள்வியில் வெளியாவதால், பெயர் கூருது அவனின் இருண்ட இருதயத்தையும் காட்ட 'அந்தன்' என்ருர். அந்தன் கேட்ட கேள்வி அவன் மனோ நிலையையே நன்கு வெளிப்படுத்தியதால், 'அந்தன் பண்புரைப்ப'எனப்பட்டது. எனவே, திருதராஷ்டிரன் புறத்திலும் குருடன், அகத்திலும் குருடனுயிருப்பது கண்ட ஸஞ்சயன் நடுநிலை பிறழாது ஏற்ப பதில் சொன்னுன்.

2, வஞ்சன் நெஞ்சம்

விருப்பு வெறுப்புகளை வென்றதனுல் சஞ்சயன் என்று பெயர் பெற்ற ஞானியிடம் 'என் மக்களும் பாண்டவரும் குருக்ஷேத்திரத்தையடைந்து என்ன செய்தார்கள்?' என்று அந்தன் கேட்டான். ஞான திருஷ்டியால் சஞ்சயன் அந்தனின் உள்ளக்கிடக்கையை அறிந்தான். தரும பூமியை அடைந்ததனுல் மனம் தெளிந்து கௌரவர் அரசைக் கொடுத்துவிடுவரோ என்ற அச்சமே அந்தனை அவ்வாறு கேட்கத் தூண்டியது என்பதை அறிந்தே தான் சஞ்சயனும் பதில் கூறுகிருன். தர்ம பூமியைச் சேர்ந்தும் கௌரவர்கள் மனோபாவத்தில் திருந்தவில்லை. பொருமையே கொண்டிருக்கிருர்கள் என்பதாக ஆரம்பத்தில் துரியோதனனின் தீச்செயலையே வெளியிடுகிருன்.

பாண்டவர்கள் தங்கள்
படை வகுத்த பாங்கதனைப்
பூண்டுமிக நோக்கிப்
பொருமையினுல்- தூண்டுபரித்
தேரார் துரோணன்பால்
சென்றடைந்து செப்பினுன்
தாரார் துரியோதனன்.

(இ-ள்) தார் ஆர் துரியோதனன்—பூமாலை அணிந்த துரியோதனன், பாண்டவர்கள் தங்கள் படை வகுத்த—பாண்டவ சேனை வியூகமாய் வகுக்கப்பட்ட, பாங்கு அதனை—தன்மையை, பூண்டு மிக நோக்கி—நன்ருக உற்றுப் பார்த்து, பொருமையினுல்—மனம் தாங்கமாட்டாமல், பரி தூண்டு தேர் ஆர் துரோணன் பால்—குதிரை இழுக்கும் தேர்ப் படை நிறைந்த துரோணனிடம், சென்று அடைந்து—(தானே) போய்ச் சேர்ந்து, செப்பினுன்—சொன்னுன்.

3 3
ந்ருஷ்ட்வாது பாண்டவ நீகம்
1 3 4 3
வ்யூடம் துர்யோதனஸ்ததா
3
ஆசார்யம் உபஸங்கம்ய
3
ராஜா வசந மப்ரவீத்.

(இ-ள்) ராஜா துரியோதன்:-அரசனுகிய துரியோதனன், வ்யூடம்—வியூகமாய் வகுக்கப்பட்ட, பாண்டவாநீகம்—பாண்டவ சேனையை, த்ருஷ்ட்வா—பார்த்து, ஆசார்யம்—(துரோணராகிய) குருவை,உபஸங்கம்ய—அடைந்து வசனம்—வார்த்தையை, அப்ரவித்—சொன்னுன்.

துரியோதனன் வேந்தனுகையால், யாவரையும் தன்னிடம் அழைத்திருக்கலாம். பாண்டவ சேனையைக் கண்டு பெரிதும் பயந்தானுதலால்,அவ்வாறு செய்யாது பரபரப்புடன் தானே துரோணரிடம் சென்ருன். சென்று செப்பினுன் என்று கூருமல், சென்றடைந்து செப்பினுன் என்றதனுல், தன்னைக் காக்கும்பொருட்டு வில் வித்தையில் தேர்ந்த துரோ

ணரைத் துரியோதனன் சரணம் புகுந்தான் என்பதையும் ஸஞ்சயன் குருடனுக்குச் சுட்டிக் காட்டினுன் என்பது குறிப்பு. ஆடையும் ஆரமும் அணிந்து டம்பமான ஆள் அலங்காரத்தோடு சரி:; ஆண்மை, அழகு சிறிதும் இல்லாதவன் துரியோதனன் என்று இகழ்ச்சி தோன்றவே ஸஞ்சயன், 'தாரார் துரியோதனன்' என்று கூறினுன்.

உள்ளத்தில் பொருமை தோன்றினுல் அதை அடுத்து ஆத்திரம் மூளும். அவ்வாத்திரம் அழிவு வேலையைச் செய்யப் பெரும்பாலும் துணையும் தேடும். துரோணருக்குப் பாண்டவர்கள் பிரியமான சிஷ்யர்களாகையால், பாண்டவர்களின் வில் வன்மையைக் கண்டு மகிழ்ந்து துரோணர் போர் செய்யாமல் நின்றுவிடுவரோ என்ற பயமும் துரியோதனனுக்கு ஆத்திரம் மூண்ட உள்ளத்தில் கலந்தது. பாண்டவர் செயலை அவருக்கு அறிவித்துக் கோபம் மூட்ட முயன்ருன். அதனுல் தன் ஆத்திரம் வெளிப்பட துரோணருக்கும் ஆத்திரம் எழும் பொருட்டுத் தன் பேச்சை 'பார்' என்ற சொல்லை முதலில்வைத்துத் தொடங்குகிறுன்.

பார்ஆ ரியனேயிப் பாண்டவர்
கள் சேனையினைத்
தார்ஆரும் பாஞ்சாலன் தந்த
மகன்—சீரார்
மதியுடைமை நீ கொடுத்த
வண்மையினுல் காக்கும்
விதியுடைமை பூண்ட வியப்பு.

(இ-ள்) ஆரியனே!—பெரியோனே! இப்பாண்டவர்கள் சேனையினை—இந்தப் பாண்டவர்கள் படையை, தார் ஆரும்-மாலை சூடிய, பாஞ்சாலன் தந்த மகன்—பாஞ்சால மன்னன் திருபதன் பெற்ற மகனுகிய திருஷ்டத்யும்னன், நீ கொடுத்த—நீ கற்றுக் கொடுத்ததால் (வந்த), சீர் ஆர் மதி உடைமை வண்மையினுல்—சிறப்புப் பொருந்திய (போர் நுட்ப) அறிவுச் செல்வ வளமையின் உதவியால், காக்கும்—(தலைமை பூண்டு) நிர்வகிக்கும், விதி உடைமை பூண்ட வியப்பு—ஊழ் வினையோடு பிணைந்திருக்கிற ஆச்சரியத்தை, பார்—காண்பாய்.

3
பச்யைதாம் பாண்டு புத்ராணும்
ஆசார்ய மஹதீம் சமூம்
1 3 3
வ்யூடாம் த்ருபத புத்ரேண
4
தவ சிஷ்யேண தீமதா.

(இ-ள்) ஆசார்ய-ஆசார்யனே! தவ சிஷ்யேண-உமக்குச் சிஷ்யனுய், தீமதா-புத்தி சாலியான, த்ருபத புத்ரேண-பாஞ்சாலன் மைந்தனுல், வ்யூடாம்-வியூகமாய் வகுக்கப்பட்ட, மஹதீம்—பெரிதான, ஏதாம்-இந்த, பாண்டு புத்ராணும்-பாண்டு மைந்தர்களான தரும புத்திராதியர்களின், சமூம்-சேனையை, பச்ய-பார்.

ஆசார்யராகத் தாங்களும் தங்களை யொத்த மகானுபாவர்களும் இங்கிருக்க, அதைச் சிறிதும் பொருட்படுத்தாமல் எதிர்த்து நிற்கும் பாண்டவர்களின் பெரிதான இச் சேனையைத் தாங்களே பார்க்க வேணும் என்கிருன். தங்களை அவ்வளவு அவமதிப்பதோடு நின்று விடவில்லை. தங்களிடம் கற்றுப் போர் நுட்பம் தெரிந்து கொண்ட தங்கள் சிஷ்யனையே படைத் தலைவனுகக் கொண்டு தங்களையே எதிர்க்கக் கோலினுர்கள் என்று தெரிவித்து; ஆத்திரம் மூட்ட நீ கொடுத்த வண்மையினுல் காக்கும்' என்று கூறுகிருன்.

திருஷ்டத்யும்னனின் தந்தை த்ருபதனுக்கும் துரோணருக்கும் உள்ள பழைய விரோதத்தை ஞாபகப்படுத்தித் துரோணருக்குக் கோபமூட்டக் கருதினுன். அதனுல் த்ருஷ்டத்யும்னன் என்னுது 'பாஞ்சாலன் தந்த மகன்' என்றது, துரியோதனனின்வஞ்சம் நிறைந்த நெஞ்சத்தையும், எதையும் தனக்குச் சாதகம் ஆக்கிக் கொள்ள முயலும் அவன் சாமர்த்தியத்தையும் நன்கு புலப்படுத்தும். 'சிஷ்யன்தானே,' என்று அலட்சியமாக விருத்தலாகாது எனக் கருதி, 'மதியுடைமையினுல்' என்ருன். பராக்காயிராது மேற்கொண்ட காரியத்தில் கண்ணுங் கருத்துமாயிருந்ததற்காகத் துரோணரை 'பார்' இச்சேனையை என்று சுட்டிக் காட்டிக் கவனத்தைத் தன் வழித்திருப்புவது நாடக வியல்பாக அமைந்தது குறிப்பிடத்தக்கது.

(தொடரும்)

'பார்' என்ற சொல்லில் துரியோதனன் படும் ஆற்ருமை கண்ணுடியில் பிரதிபிம்பம்போல் நன்கு தெரிகிறது. தந்தைக்குச் சத்துருவான உன்னைத் தனக்கும் சத்துருவாகக் கொண்டு உன்னைக் கொல்ல உன்னிடமே வித்தை கற்றுக் கொல்லவும் எதிரே நிற்கிருனே திருஷ்டத்யும்னன், அவனல்லவோ புத்திமான்! உன்னை வதைக்கவே த்ருபதன் நோற்றுப் பெற்ருன் என்பதை அறியாமல் பகைவன் மைந்தனுக்கு வித்தையைக் கொடுத்தாயே. அதனுல் அவன் வலிமை பெற்றதாலன்ரே எனக்கு இவ்வாறு நேர்ந்தது? இந்த ஆற்ருமையை யாரிடம் சொல்வேன்! நீயே காணுய்! என்று ஓடும் உள்ளத்துணர்ச்சி நன்கு பிரதிபலிக்கக் காணலாம்.

எதிரே தோன்றும் காட்சி விசித்திரத்துக்கு எதைக் காரணமாகச் சொல்வது? விதியைத் தான் சொல்லவேண்டும் என்று துரியோதனன் வெளியிடுவதை ஊன்றிக் கவனிக்க வேண்டும். எதிரே நின்ற திருஷ்டத்யும்னனுலேயே துரோணர் பாரதப் போரில் மாண்டார். 'இவனுல் நீ இறக்க வேண்டிய விதி விசித்திரக் காட்சியில் கண்கூடாகத் தெரிவதை நீயே பார்' என்பது போல் வார்த்தை வெளி வந்தது நயத்திலும் நயம்.



8

கோடி மனிதரும் ஒரு மனிதரும்

★

'குரு நானக் ஜயந்தி இந்த நவம்பர் 15-ந் தேதி கொண்டாடினுர்களே, அப்படி அந்த 'சீக்கிய' குரு என்ன செய்துவிட்டார் பிரமாதமாக? பலவேறு மதங்களும் ஜாதிகளும் நிறைந்த ஒரு தேசத்திலே ஒரு புதிய மதத்தையும் ஜாதியையும் சேர்த்துவிட்டார்; அவ்வளவுதானே!' என்ருள் கமலா.

'கோடிக்கு ஒருவர் குருநானக்!' என்றேன் நான்.

'தாதா கோடிக்கொருவர்' என்று சங்கீத வித்வான்கள் அறியாத ஒரு புதிய ராகத்திலே பாடினுன் ராமு. அதைச் சோமு ருஜுப்படுத்துவதுபோல், எதிர் வீட்டுத் திண்ணையில் குந்தியிருந்த ஒரு கிழவனுரைச் சுட்டிக்காட்டி, 'தாந்தா கோடிக் கொருவர்!' என்று சத்தம் போட்டான்.

இரு பெரும் செய்திகள்

இரு சிறுவரும் போய் சத்தமும் ஓய்ந்த பிறகு கமலா என்னை நோக்கி, 'நீ புதிர் போடுகிருய்! எப்படி ருஜுப்படுத்துவாய்?' என்று கேட்டாள்.

அதற்கு விடையாக நான், 'நமது மாபெருந் தலைவர்களான நேருவும் ராஜாஜியும் குருநானக் ஜயந்தி விழாவை ஒட்டி வெளியிட்டிருக்கும் நற்செய்திகளைப் படித்துப் பார்த்தாயா?' என்று ஓர் எதிர்க் கேள்வி போட்டேன்.

அச்சமயம் ராமுவும் சோமுவும் வெளியே,

'ராஜாஜி எங்கள் ராஜா! நேரு புருஷ மேரு!' என்று கூச்சலிட்டது எங்கள் காதில் விழுந்தது.

கமலா சொன்னுள்: நமது கவர்னர்-ஜெனரல் 'சீக்கிய' குருவின் பிறந்த தின விழாவை முன்னிட்டு வெளியிட்டிருக்கும் செய்தியை நான் 'ஹிந்து'விலும் படித்தேன், 'மித்திரனி'லும் படித்தேன். ராஜாஜி குரு நானக்கின் 'சீக்கிய' மதத்தை மட்டும் பாராட்டவில்லை. ஒன்ருேடொன்று பூசலிடும் எல்லா மதங்களையும் பாராட்டுகிருரே! பண்டித நேருவோ மத வாதியர்களின் குறுகிய புத்தியையும், வகுப்பு வாத உணர்ச்சிகளையும் கண்டித்திருக்கிருர். இவ்வளவுதானே இந்த இரு பெருந் தலைவர்களின் செய்தியும்.

இந்து--முஸ்லிம் சமரஸவாதி

நான் சொன்னேன்: நீ சுருங்கக் கூறினுய். ஆனுல், அவர்கள் கூற்றை உள்ளபடி விளங்கவைக்கவில்லை. 500 ஆண்டுகளுக்கு முன் குருநானக் தோன்றி, ஜயதேவர், ராமானந்தர், கபீர்தாஸர் முதலான பக்தமணிகளைத்தொடர்ந்து சடங்குகளின் குழப்பத்திலே மறைந்துபோன உபநிஷதப் பொருள்களைப் புதிதாகக் கண்டு பிடித்துக் காட்டினுர் என்பது ராஜாஜி செய்தியின் முக்கியமான பகுதி. நீ வேணுமானுல், சரித்திரக்காரர் போல் 15-ம் நூற்ருண்டின் இறுதியிலும், 16-ம் நூற்ருண்டின் தொடக்கத்திலும் 'சீக்கிய' மதம் ஏற்பட்டது என்று சொல்லலாம். இன்னும் விருஷங்களைச் சரியாகக் கண்டு பிடித்துப் பேசவேணுமென்ருல், 'சீக்கிய' மத ஸ்தாபகர் 1459 ல் பஞ்சாபில் தோன்றினுர்; 1538-ல் பரகதியடைந்தார் என்று சொல்லலாம். இவ்வளவுதானே. மற்றப்படி ராஜாஜி சொன்னது பெரும்பாலும் சரிதானே?

நான் இப்படிப் பேசிக்கொண்டிருக்கும்போது வந்து சேர்ந்த ஸரோஜா, பெரும்பாலும் சரி என்கிருயே, ராஜாஜி சொல்வதை நீ அப்படியே ஒப்புக்கொள்ளவில்லையா? என்று கேட்டாள்.

அதற்கு நான் 'குருநானக்' உபநிஷதப் பொருள்களை மட்டும் கண்டுபிடித்துக் காட்டவில்லை. ஹிந்து மதக் கொள்கைகளிலும் மகமதியக் கொள்கைகளிலும் உள்ள சிறந்த கோட்பாடுகளைக் கண்டுபிடித்துக் கூறியுள்ளார் என்றேன்.

அப்போது அங்கேவந்துசேர்ந்த ராமு, 'அவர் கடவுள் ஒருவரே என்றும், ஹிந்துக்களும் முஸ்லிம்களும் வேற்றுமையில்லாது அவரை வழிபட வேண்டுமென்றும் உபதேசித்தார். அவருக்கு அநேக சிஷ்யர்கள் ஏற்பட்டார்கள். சிஷ்யர்களைத்தான் 'சீக்கர்கள்', சீக்கியர்கள் என்கிருர்கள். 1539-ல் குருமூர்த்தி பரகதியடைந்த பின் வேறு குருமார்கள் ஒருவர் பின் ஒருவராய் சீக்கியர்களுக்குத் தலைமை வகித்தார்கள். இங்ஙனம் இம்மதம் இந்தியாவில் மிகப் பிற்பட்ட காலத்தில் ஏற்படக் காரணம் யாது?' என மட மட வென்று சொல்லிக்கொண்டே போனுன்.

சரித்திரப் படிப்பு

அவனைத் தொடர்ந்து வந்து சேர்ந்த சோமு, ராமு களைத்துப் போய் நிறுத்தியதும், 'குருநானக் 1469-ம் ஆண்டு, பாஞ்சால நாட்டில் லாகூர் ஜில்லாவைச் சேர்ந்த தால்வாண்டி என்னும் ஊரில் பிறந்தார். இவர் க்ஷத்திரிய குலத்தவர். இவருடைய பெற்ருேர் வறிஞர். பூணூல் போட்டுக்கொள்வதால் பயனில்லை என்று மறுத்துவிட்டார். இமயமுதல் குமரி வரை சுற்றித் திரிந்தார். புதியதொரு மதத்தைப்

பரப்பினார். இவர் மதம் தான் சீக்கிய மதம். 1538-ம் ஆண்டு, தமது 69-ம் வயதில் உலக வாழ்வை நீத்தார். இவருக்கு மாணவர் ஒன்பதின்மர். அங்கதர், அமரதாஸர், அராமதாஸர், அர்ஜுனர், ஹரிகோவிந்தர், ஹரிராயர், ஹரிகிருஷ்ணர், தேஜ் பகதூர், கோவிந்தஸிங் என்பவர்களே. அவர்களில்......' எனத் தடதடவென்று பேசிக்கொண்டே போனான்.

'என்னம்மா, இந்தப் பிள்ளைகள் குருநானக் விஷயமாக ராஜாஜி, நேருஜியைக் காட்டிலும் எத்தனையோ செய்திகளை அறிந்திருப்பதுபோலத் தோன்றுகிறதே!' என்று குறுக்கிட்டாள் கமலா.

நான் சொன்னேன்: 'ராஜாஜியின் செய்தியையும் நேருவின் ஜயந்தி விழாப் பிரசங்கத்தையும் உபாத்தியாயர்கள் வகுப்பிலே வாசித்துக் காட்டலாம். மதங்கள் பலவாக இருந்தபோதிலும் அவற்றின் ஸாராம்சமான கொள்கைகள் பொது என்பதையும் உபாத்தியாயர்கள் பிள்ளைகளுக்கு எடுத்துச் சொல்லலாம்.'

'மத போதனை வகுப்பிலே நடைபெறலாமா?' என்று கேட்டாள் ஸரோஜா.

'பள்ளிக்கூடத்தில் மதச் சண்டைகளை வளர்த்துவிடுவது சரியில்லைதான். ஆனால், சரித்திர வகுப்புகளிலும் வேறு வகுப்புகளிலும், மதம் மக்களுடைய அபிவிருத்திக்கு மிகவும் அவசியமானது என்பதையும் உபாத்தியாயர்கள் பிள்ளைகளுக்குத் தெரிவிக்க வேண்டியதுதான். ராஜாஜி சொல்லுகிறபடியே "நம்முடைய அடிப்படை-மனப் போக்கை மாற்றி நல்ல குணங்களையும் பழக்க வழக்கங்களையும் மேலும் மேலும் நல்லனவாக வளர்க்கவே மதம் ஏற்பட்டிருக்கிறது. இந்த உண்மையைப் பிள்ளைகள் தெரிந்து கொள்ள வேண்டாமா?' என்றேன் நான்.

பள்ளிக்கூடங்களிலும் நாஸ்திகமா?

கமலா சொன்னாள்: 'மத நம்பிக்கையே மூட நம்பிக்கைதான்; கடவுளே குருமார்களின் சிருஷ்டிதான்!—என்றெல்லாம் சில புதிய குருமூர்த்திகள் பள்ளிக்கூடங்களிலே பிரசாரம் செய்து வருகிறார்களாமே இந்நாளில்! தெரியாதா உங்களுக்கு?'

ஸரோஜா இதற்குத் தக்க பதில் சொன்னாள்: 'மத போதனைக்கென்று தனி வகுப்புகளைப் பள்ளிக்கூடங்களில் நடத்தாவிட்டாலும், மதத் துவேஷத்தையாவது வளர்க்காமல் இருக்க வேண்டுமல்லவா? சரித்திர பாடம் முதலான சந்தர்ப்பங்களையும் மத தூஷணைக்குப் பயன்படுத்திக் கொள்வது பெருந்தவறு. பிள்ளைகளுக்கும் பெற்றோர்களுக்கும் ஒருங்கே துரோகம். குருநானக் முதலானவர்களும் சீர்திருத்தவாதிகளே—புரட்சிகரமான சீர்திருத்த வாதிகள் தான். உதாரணமாக குருநானக், கங்கை முதலிய புண்ணிய தீர்த்தங்களில் நீராடுவதைக் கண்டிக்கிறார். ஜபமாலையைக் கையில் ஏந்தி மந்திரம் ஜபிப்பதையும், "கடவுள்-கடவுள்" என்று ஜபமணிகளை உருட்டிக்கொண்டே தீய சிந்தனைகளுக்கு இடம் கொடுப்பதையும் வன்மையாகக் கண்டிக்கிறார். கடவுளுக்குத் தரகர் வேண்டாம் என்கிறார். தீச்செயல் புரிந்துவிட்டு குருக்களுக்குத் தானம் செய்வதால் பயனில்லை என்கிறார். அன்பு குடிகொள்ளும் உள்ளமே ஆண்டவன் குடியேறும் கோயில் என்கிறார், இத்தகைய கொள்கைகளை மீராபாய் முதலான ஹிந்து பக்த மணிகளும் பிரசாரம் செய்திருக்கிறார்கள். ஆகவே, மதத்தையும் சிறப்பாக ஹிந்து மதத்தையும் பழிப்பது மூடத்தனம். எவர் மனமும் புண்பட நடந்துகொள்வது பகுத்தறிவுக்கு அழகன்று. எத்தனையோ உண்மையான மதாபிமானிகள் சிறந்த ஒழுக்கம் உள்ளவர்களாகவும் பரந்த நோக்கம் உள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். ஆகவே, ராஜாஜி சொல்கிறபடி மதத்தைக் கௌரவித்துப் பயன்படுத்திக்கொள்ள வேண்டியதுதான் என்றேன்.

"எப்படியிருந்தாலும் மதம் என்றால் குறுகிய புத்தி வந்துவிடுகிறதல்லவா?" என்று கேட்டாள் கமலா.

கோடிக்கு ஒருவர் சிறந்த மதாசாரியர்

அதற்கு நான், மதத்தை மறுப்பவர்களின் குறுகிய மனப்பான்மையும் ஆபத்தானது என்பதற்கு நம்து தமிழ் நாட்டிலுள்ள ஒரு நவீன வகுப்புவாத இயக்கமே சான்றாகும். மதவாதம் வேண்டாம் என்பவர்கள் வகுப்புவாத நெருப்பை ஏன்தான் மூட்டிவிட வேண்டுமோ? உலகத்திலுள்ள துன்பத்திற்குக் காரணம் வகுப்புவாதமும், மனித வாழ்க்கையின் அடிப்படை-மதிப்பை உலகம் மறந்துவிட்டதும்தான் என்பதைப் பண்டித நேரு, குருநானக் ஜயந்தி விழாவில் தெளிவாக ஒப்புக்கொண்டிருக்கிறார். மனித வாழ்க்கையின் அடிப்படை-மதிப்பை நன்குணர்ந்து, குறுகிய மனப்போக்கை மாற்றித் தனி மனிதனும் சமுதாயமும் நல்ல பண்புகளையும் பழக்க வழக்கங்களையும் வளர்த்துக்கொள்ள மதம் அவசியம் என்கிறார் ராஜாஜி. இவ்விருவரும் குருநானக் ஜயந்தி விழாவில் நமக்கு அளித்திருக்கும் நற்செய்தி இதுதான் என்று பதில் சொன்னேன்.

'சரி. நான் இன்று கற்றுக்கொண்டதைச் சுருக்கமாகச் சொல்லட்டுமா? மதம் வேண்டும் எம்மதமும் சம்மதம் என்று சொல்லவும் வேண்டும். தம்மை வாதத்திற்கும் வம்புக்கும் இழுக்கும் கடிதங்களுக்கெல்லாம் ஓர் அறிஞர் முடிவான பதில் எழுதும் வழியொன்று கண்டுபிடித்திருந்தாராம். "அன்பார்ந்த ஐயா! அல்லது அம்மா!" என்று வழக்கம் போலவே ஆரம்பிப்பார். பிறகு "தாங்கள் கூறுவதே சரியாயிருக்கவும் கூடும்" என்றுஎழுதி முடித்து விடுவாராம். வாதத்திற்கு இடமில்லாமலே வாதத்தை முடித்து விடும் முடிவான பதில் மட்டுமா இது? எவ்வளவு மரியாதையான பதில்! மேலும் எதிரி எழுதிய கடிதத்தைப் படிக்கும் சிரமமும் இல்லாமலே எழுதக்கூடிய பதில் இல்லையா?' என்றாள் ஸரோஜா.

'மத விஷயத்தில் இப்படிச் சம்மதம் தெரிவிக்க வேண்டாம். சன்மார்க்க உணர்ச்சியுடன் சமயங்களை ஆராய்ந்து பார்க்க வேண்டும். இது நீண்ட வழி. ஆனால், நல்ல வழி. குருநானக் போன்ற மதபோதகர் கோடிக்கு ஒரு மனிதர்; கோடிக்கணக்கான மனிதர்கள் உய்ந்து போக வழி காட்டுகிறார்கள். மத வழிகளுக்கெல்லாம் முடிவு ஒன்றே. மதங்களையெல்லாம் சகோதரமதங்களாக்கொண்டு மனிதர்கள் சகோதர வாழ்வு வாழ முயன்றால், உலக நன்மைக்கு மதங்களும் மிகவும் அவசியமானவை என்பதை நன்கு உணர்ந்துகொள்ளலாம்' என்றேன் நான்.

—

அத்தியாயம் 9

ராவ்பகதூர் பயங்கர நரசிம்மம் அவர்களை வெகுவாகப் புகழும் மனிதன் கூட (அப்படி யாராவது இருந்தால்) அவர் சிருங்கார ரஸிகர் என்று சொல்லமாட்டான். ஆனால், அவரிடமும் கூடக் கொஞ்சம் சிருங்கார உணர்ச்சி இருக்கத்தான் செய்தது என்று நம்பவேண்டியிருக்கிறது.

தம்முடைய பிரத்யேக பொக்கிஷத்தில் அவர் தம் மனைவியின் விலையுயர்ந்த வைர அட்டிகை ஒன்றை வைத்துக்கொண்டிருந்தார். குடும்பத்து நகைகளோடு அதை வைக்காமல், தம் பெட்டிக்குள் அதை வைத்திருந்தார். தினசரி காலையிலும், மாலையிலும் அதைப் பார்த்தால்தான் அவருடைய மனம் நிம்மதியடையும். ஒருக்கால் அந்த ஆபரணத்தைக் காணும்போது அவருக்குப் பழைய இல்லற வாழ்க்கையின் இனிய நினைவுகள் நினைவுக்கு வருமோ என்னவோ? அவருக்கு எப்பேர்ப்பட்ட அவசரம் இருந்தபோதிலும்கூட அந்த வைர அட்டிகையைப் பார்க்காமல் இருக்கமாட்டார். தம் குழந்தைகளுக்கே தெரியாமல் ரகசியமாகச் சில நிமிஷங்கள் அந்த ஆபரணத்துடன் தனிமையிலும், சிந்தனையிலும் ஆழ்ந்திருப்பார்.

அந்த வழக்கப்படியே இன்றும் அவர் தம் அறைக்குள் புகுந்து பெட்டியை வெகு ஜாக்கிரதையாகத் திறந்தார். வைர அட்டிகையை வெளியே எடுத்தார். அதைப் பார்த்துக்கொண்டிருந்தபோது வெளியே சீமாச்சுவின் குரல் அவரைக் கூப்பிடவே, அவசர அவசரமாகப் பெட்டிக்குள் வைத்துப் பூட்டினார்.

"என்னத்துக்குடா கூப்பிடறே? எங்கே கொள்ளை போறது?" என்று கேட்டுக்கொண்டே அறைக் கதவைத் தாளிட்டுவிட்டு வெளியே வந்தார்.

அவர் போன சற்று நேரத்திற்கெல்லாம் நடராஜன் அவரைத் தேடிக்கொண்டு அவருடைய அறைக்குள் சென்றான். அவருடைய மேஜை மேல் அவர் கடைசியாக எழுதிய கதை இருந்தது. நடராஜனுக்கு இப்போது நெப்போலியனுக்குக்கூடத் தோன்றாத ஒரு யோசனை தோன்றியது. பயங்கரம் தன் பெட்டியில் வைர அட்டிகை வைத்திருக்கும் விஷயம் அவனுக்குத் தெரியும். இந்த ரகசியத்தைக்கூடத் தெரிந்து கொள்ளாவிட்டால் அவன் இன்ஷ்யூரன்ஸ் தொழிலுக்கே லாயக்கில்லை அல்லவா? இன்னும் சிலமணி நேரங்களில் சேகரன் கதலீபுரத்தைவிட்டு ஓடப்போகிறான். வைர அட்டிகையை நடராஜன் கிளப்பிவிட்டால் பிறகு அவன் இன்ஷ்யூரன்ஸுக்கே முழுக்குப் போட்டுவிடலாம். சேகரனைப் போன்ற கொடாக்கண்டர்கள் இருக்கும் உலகத்தில் இன்ஷ்யூரன்ஸ் ஏஜெண்டுகள் உயிர்வாழ முடியாது. இன்னும் சில நிமிஷங்களில் வைர அட்டிகையைக் கிளப்பிவிட வேண்டும். நடுவில் பயங்கரம் வந்துவிட்டால்? வந்தாலென்ன? அவருடைய கதையைப் படித்துக்கொண்டிருப்பதுபோலக் காட்ட வேண்டும்.

நடராஜன் பெட்டியைத் திறப்பது எப்படி என்று யோசனை செய்துகொண்டே பூட்டைத் தொட்டான். பூட்டு தானாகவே திறந்துகொண்டது. பெட்டி உண்மையில் பூட்டியிருந்தது போலத் தோன்றிற்றேயொழிய, பயங்கரம் அதைச் சரியாகப் பூட்டவில்லை. நடராஜன் வெகு துணிச்சலுடன் அட்டிகையை எடுத்து தன் தோல் பையில் மறைத்துக்கொண்டு (பெட்டி பூட்டியிருப்பதுபோலச் செய்துவிட்டு) வெளியே நடந்தான்.

வெளியே வந்த பயங்கரம் சேகரன், வைத்தாவுடன் குலாவிக்கொண்டிருப்பதைப் பார்த்தார்.

"மிஸ்டர் சேகர்! உங்களோடு நான் தனியே பேசவேண்டும்."

"அந்த மீனுட்சி கதையை முடித்துவிட்டீர்களா, ஸார்?" என்று அன்பொழுக விசாரித்தான் சேகரன்.

பயங்கரத்திற்கு மீனுட்சியின் கதையைப் பற்றிப் பிறர் தம்மை விசாரிப்பது பிடித்தந்தான். என்ருலும், இப்போது அவர் முகஸ்துதியில் மெய்மறந்துபோகத் தயாராயில்லை.

'நான் பேச வந்த விஷயம் வேறு!'

'ஓகோ! வேறு ஏதாவது கதை எழுதியிருக்கிறீர்களா? எதாயிருந்தாலும் சரி, படித்துப் பார்க்கிறேன்!'

'கதையைப்பற்றி அப்புறம் பேசுவோம். நீங்கள் சற்று முன்தோட்டத்தில் சிரித்துக் கொம்மாளம் அடித்தீர்களாமே?'—பயங்கரத்தின் குரலில் கடுமையும், கண்டிப்பும், அதர்மத்தினிடம் ஆத்திரங்கொள்ளும் தர்மவந்தரின் வெறுப்பும் பிரதிபலித்தன.

சேகரன் இதற்குத் தயாராக இல்லை.

'ஓகோ! சிரிக்கக்கூடாது போலிருக்கிறது! கதலிபுரத்தில் 144. நிலைமை கட்டுப்படுகிற வரை அமுலில் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது......ஏன் சிரிக்கக்கூடாதாம்?'

'விசாலாட்சியும் நீயும் சேர்ந்தாற் போல சிரிக்கக் காரணமென்ன?' பயங்கரத்திற்கு இருந்த கோபத்தில் ஏக வசனத்திலேயே பேச ஆரம்பித்துவிட்டார்.

'அன்னிக்கு நடராஜன் என்னவோ வேடிக்கையாகச் சொன்ஞர். அப்போது நீங்களும் நானும் சேர்ந்தாற்போல சிரிக்கவில்லையா? கதலிபுர எல்லையில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மனிதர்கள் சிரிக்கக்கூடாது என்று ஏதாவது 'ஆர்டினன்ஸ்' (அவசரச் சட்டம்) புதிசாக வந்திருக்கா என்ன? அப்படியிருந்தாலும், கடைசியாக வந்த ரேடியோ நியூஸாக இருக்கணும். ஏனென்ருல், இன்னிக்குக் காலையிலே பார்த்த பேப்பரிலேகூட கடைசிச் செய்திகள் என்ற தலைப்பில் அது காணப்படவில்லை... இந்தப் புது 'ஆர்டினன்ஸ்' ஏற்பட அவசியமென்ன?"

சேகரனிடமிருந்த நகைச் சுவையை பயங்கரம் ரஸித்தபோதிலும், முக்கியமான சமயங்களில் சுருக்கமாகப் பேசவேண்டும் என்று விரும்புபவர் அவர்; ஒரு மனிதனிடம் அவர் குறுக்கு விசாரணை செய்யும்போது அவன் 'ஆர்டினன்ஸ்'களைப் பற்றிய தன் அபிப்ராயங்களை வெளியிடுவதை அவர் வெறுத்தார்.

'நீ என்னைச் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. ஒரு இளம் பெண்ணும் ஒரு வாலிபனும் தோட்டத்தில் நின்று பேசிக்கொண்டு சேர்ந்தாற் போல சிரித்தால், அது சாதாரண சம்பவம் என்று சொல்ல முடியாது.'

சேகரனுக்கு சமாச்சாரம் விளங்கிற்று. காதலுக்கு இடையூறுகள் வருவது சகஜந்தான் என்றெண்ணிக்கொண்டான்.

'உங்கள் கதையைப்பற்றிப் பேசிஞேம். அதில் ரொம்பத் தமாஷாக இருந்த ஒரு பாகத்தைச் சொன்னேன். உங்கள் கதையைப் பற்றிப் பேசவோ, அதிலிருக்கும் ஹாஸ்யத்தை அனுபவித்துச் சிரிக்கவோ கூடாது என்பது எனக்குத் தெரியாது.'

பயங்கரம் என்னதான் கோபத்துடன் இருந்தாலும், கொஞ்சம் இளகிஞர். தன் கதையை ஆசையுடன் படித்து, அதன் ஹாஸ்யத்தைத் தானும் அனுபவித்து, அத்துடன் திருப்தியடையாமல் பிறரையும் ரஸிக்கச் செய்யும் பரோபகாரத் தன்மையாளரைக் கடுஞ் சொற்களால் தாக்குவது அவருக்குப் பிடிக்கவில்லை. ஆனுல், அவருக்கு ஒரு சந்தேகம் உதித்தது.

'அதைப்பற்றி நடராஜனிடம் பேசுவதுதானே? இல்லாவிட்டால் வைத்தாவிடம் பேசுகிறது? ஒரு இளம் பெண் தனியாக இருக்கும்போது அவளிடம் போய் எதற்காக இலக்கியத்தைப் பற்றி சர்ச்சை செய்யவேண்டும்?'

இது ஒரு கடினமான கேள்வி. யூனிவர்ஸிடி பரீட்சைகளில் கேட்பதுபோல இல்லாமல் இங்கு 'சாய்ஸ்' கிடையாது. சேகரன் மௌனமானுன்.

'இதையெல்லாம் என்னுல் சகிக்கமுடியாது. நாளைக்காலையில் நீ இந்த வீட்டை விட்டுப் போய்விட வேண்டும்.'

விசாலாட்சிமட்டும் அவனைக் கவர்ந்திராவிட்டால் சேகரன் இந்தத் தண்டனையை ஒரு வரப்பிரஸாதமாகவே நினைத்திருப்பான். தவளைகளையும் நாய்களையும் அடிக்கும் சிமாச்சுகளும், உலகத்தில் உள்ள ஒவ்வொருவனும் 'கங்காலைப்' கம்பெனியில் ஆயுள் பாலிஸி எடுத்துக் கொள்ளவேண்டும் என்று விரும்பும் நடராஜனும், இலக்கியப்பணி செய்துகிடப்பதைத் தவிர வேறென்றறியேன் பராபரமே என்று கிடக்கும் ராவ்பகதூர் நரஸிம்மமும், தன் நாடக மேடை அனுபவங்களை வலுவில் பிறர்மீது திணிக்கும் வைத்தாவும், சொந்தமாய் ஷேவிங் செய்துகொள்வதை பலமாக எதிர்க்கும் பயங்கரத்தின் தாயாரும் இருக்கும் கதலீபுரத்திலிருந்து போய்

விடுவது என்பது எளிதில் கிடைக்கக்கூடிய பாக்கியமல்ல. ஆனுல், இந்த விசாலாட்சி வந்து உட்கார்ந்துகொண்டு, முள்ளில் ரோஜா மலர் வதுபோல, கதலீபுரத்தின் சுற்றுப்புறத்திற்கே மணத்தையும், எழிலையும், சோபையையும் கொடுத்துவிட்டாள். கதலிபுரம், சேகரனைப்

பொறுத்தவரையில் உலகத்தின் தலே நகரமாக விளங்குகிறது.

சேகரனுக்கு பயங்கரத்திற்குப் பதில் சொல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஞாபகத்துக்கு வந்தது. அவனுக்கும் பயங்கரத்துக்கும் நடந்த சம்பாஷணை:—

"சீமாச்சுக்கு இப்போதுதான் 'அவர் க்ளாஸ் ரூம்' நடக்கிறது. இன்னும் புத்தகம் முடிய நாற்பது பக்கம் இருக்கிறது. 'ட்விங்கள் ட்விங்கள் லிட்டில் ஸ்டார்' வேறு பாக்கியிருக்கிறது..."

'சீமாச்சுக்கு இனி இங்கிலீஷ் தேவையில்லே'

'கணக்கில் லாப நஷ்டம் இன்னும் முடியவில்லே.'

'லாபமும் வேண்டாம், நஷ்டமும் வேண்டாம்'

'இந்த வயா-மீடியா பாலிஸி நடு நிலேமை ரொம்ப நல்லதுதான். இருந்தாலும் ஜாகரபியில் பூமி ஏன் உருண்டையாக இருக்கிறது என்பதைப் பற்றி அவனுக்கு...'

'அவனுக்குத் தெரியும். தெரியாவிட்டால் பாதகமில்லே. எப்படியிருந்தாலும் நீ நாளைக் காலே இங்கேவிட்டுக் கிளம்பிவிட வேண்டும். காலே எட்டு மணிக்கு ஒரு ஷட்டில் இருக்கிறது: அதற்கு முந்தியே போவதானுல், மேலாபுரத்திலிருந்து ஆறுமணிக்கு ஒரு பஸ் போகிறது. துரதிர்ஷ்டவசமாக இன்று ராத்திரியே போக ரயிலோ, பஸ்ஸோ இல்லே.'

சேகரன் மௌனமாக வெளியே வந்தான். இதைப்போன்ற சம்பவம் சினிமாவில் காட்டப்பட்டிருந்தால் மிகவும் சோககரமான பின்னணி சங்கீதம் ஒலித்திருக்கும். இது சினிமாவல்ல. ஆதலால், பின்னணி சங்கீதம் ஒன்றும் இல்லாமல் மௌனப் படத்தில் காட்டுவதுபோல சேகரன் பின்கையைக் கட்டிக்கொண்டு ஆகாசத்தையும், பாதாளத்தையும் பார்த்துக்கொண்டு சென்ருன். அந்த மௌனக் காட்சியை பாலுசாமியின் பேச்சு கலேத்தது.

'மிஸ்டர் சேகர்! உங்களிடம் ஐந்து ரூபாய் கடன் வாங்கிக்கொண்டேனல்லவா!'

'உன்னுடைய ஞாபகசக்தி எனக்கு மிகுந்த சந்தோஷத்தைக் கொடுக்கிறது. இப்போது அதைத் திருப்பிக் கொடுக்கப்போகிருயா?'

'இல்லே....இந்த ஊர்ப்பசங்க வெறும் பித்தலாட்டக்காரன்களாயிருக்காங்கள். என்ன ஸார்! 'ஆட்டின்' (ஆடுதன்) வெச்சுண்டே இல்லேன்னு மழுப்பருரு, ஸார்! இந்தப் பயங்களோட சீட்டாடவே கூடாது ஸார்!.....'

'பாலுசாமி! சீட்டாட்டத்தைப் பற்றிக் கொஞ்சம் சாவகாசமாகப் பேசிக்கொள்ளலாமே!'

'சீட்டாட்டத்தைப்பற்றி இனிமேல் நான் பேசப்போகிறதுமில்லே, ஆடப்போகிறதுமில்லே'

'பேஷ்! வெகு நல்ல தீர்மானம்!'

'ஆனுல். அதற்குப் பூர்வாங்கமாக ஒரு ஐந்து ரூபாய் வேண்டியிருக்கிறது. நீங்கள் தயவு செய்து கொடுத்தீர்களானுல் நான் பத்து ரூபாயாகத் திருப்பிக் கொடுத்துவிடுவேன்.'

'நிலேமை முற்றிவிட்டது.'

'ஆமாம். நான் சீட்டாட்டத்தைக் கைவிடுவது என்பது முற்றிப்போன நிலேமைதான்.'

'இருக்கலாம். ஆனுல், சேகரன் கதலீபுரத்திலிருந்து தேசப்பிரஷ்டம் செய்யப்பட்டார் என்பது அதையும்விட முற்றிய நிலேமை.'

'என்ன என்ன? எதற்காக?'

'ஜனநாயக தத்துவத்துக்கு விரோதமாகத் தக்க காரணமின்றி நாடு கடத்தப்பட்டார். பெரிய உள்நாட்டுக் குழப்பம் எதிர்பார்க்கப்படுகிறது.'

'சமாச்சாரத்தை விளக்கமாய்ச் சொல்லுங்கள்.'

'மற்ற விவரங்களே நாளேய அறிக்கையில் காணலாம்.'

இதற்குப் பின்னர் சேகரன் விவரமாய் நடந்ததைச் சொன்னுன். பாலுசாமி வருத்தத்துடன், நவநந்தர்களேப் பிரிய நேர்ந்த ராட்சஸன்போல தன் அறைக்குச் சென்ருன்.

சேகரன் யோசனையில் ஆழ்ந்தான். கதலீபுரத்தில் நிலேமை அவனுக்கெதிராக இருக்கிறது. இனி எந்த முகாந்திரத்தைக் கொண்டு அங்கு அவன் தங்கமுடியும்? விசாலாட்சியைப்

பிரிந்து செல்வதா என்றெண்ணியபோது அவனுடைய ஹிருதயம் நூறு சுக்காக உடைந்தது. அவளே மறுபடி எப்படிக் காண்பது? பயங்கரத்தை எப்படிச் சமாதானப்படுத்துவது? என்ற கவலேகள் சூழ்ந்துகொண்டு அவனேத் திணறச் செய்தன. எதிரில் தனக்குள் தானே சிரித்துக்கொண்டு, வைத்தா வந்து நின்ருன்.

'நீங்கள் ஜம்பு பாய்ஸ் கம்பெனியைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கேளா, ஸார்?'

'இல்லேயே, வைத்தா!' என்ருன் சேகரன், எங்கே வைத்தா நாடகத்தைப் பற்றிப் பிரசங்கம் ஆரம்பித்துவிடப் போகிருனே என்ற பயத்துடன்.

'அதிலே ஒத்தர் கோவலன் பார்ட் போட்டுக் கொள்வார். அவர் பெயர் கிட்டுவய்யரோ அல்லது வெங்கிட்டுவய்யரோ, அல்லது...'

'போனுல் போகிறது. அய்யர் என்று வைத்துக் கொள்வோம். மேலே விஷயத்தைச் சுருக்கமாகச் சொல்லு!'

'அவர் ஒரு தடவை குடி மயக்கத்தில், மாதகி ஸ்டேஜுக்கு வருவதற்கு முன்னுலேயே, மாதகி என்று நினேத்துக்கொண்டு அங்கிருந்த நாற்

காலி, தூண் இவற்றுடன் காதல் பேச்சுப் பேச ஆரம்பித்து விட்டார்.'

'அந்தக் காலத்திலே மதுவிலக்கு வந்திருக்காது...தவிர, தூண் கொஞ்சம் கொஞ்சம் மாதகியின் சாயலாக இருந்திருக்கலாம்...அது கிடக்கட்டும்; நாடக நடிகர்கள், நாடகங்கள், ஜம்பு பாய்ஸ் கம்பெனி, தூண்கள் இவைகளேப் பற்றிக் கொஞ்சம் சாவகாசமாகப் பேசிக் கொள்ளுவோமே!' என்று மெதுவாகத் தெரிவித்தான் சேகரன்.

'இப்போ நான் அதைப் பற்றிப் பேசவில்லே, ஸார்! வாசலிலே உங்களேத் தேடிண்டு ஒத்தர் வந்திருக்கார். அவரைப் பார்த்தவுடனே எனக்கு அந்த நடிகர் ஞாபகம் வந்தது. அதற்காக வந்திருக்கிற மனிதர் குடிகாரர் என்று சொல்லவில்லே. சாயலேப் பார்த்தால் அவர் மாதிரி இருந்தது.'

'என் பேரைச் சொல்லியா அவர் தேடினுர்?'

'பேரைச் சொல்லவில்லே, இந்த வீட்டிலே டியூஷன் சொல்லிக் கொடுக்கிருரே, அவர் இருக்கிருரா? என்று கேட்டார்.'

காமன்வெல்த் மகாநாட்டுக்குச் சென்ற இலங்கைப் பிரதம மந்திரி ஸேனு நாயகா (நடு)வுக்கு லண்டனில் ஓர் உபசாரம் நடந்தது. இலங்கை ஹை கமிஷனர் அவரை வரவேற்ருர். முதலில் நிற்பவர் மிஸ் ஷீலா குணதிலகா.

சேகரன் தன்னைத் தேடி வந்தவரைக் காணச் சென்ருன். சென்றவன் அவ்ரைக் கண்டதும் பேயறைந்தவனைப்போல நின்ருன். அவன் முகம் வெளுத்தது. கால்கள் தடுமாறின, தலை சுற்றிற்று.

இதற்கெல்லாம் காரணம், அவன் எதிரில் வந்து நின்றவர் மாமா நடேசய்யர். சேகரன் ஒரு நொடியில் தன்னைச் சமாளித்துக்கொண்டான். ஆனுல், மாமாவோ கண் கொட்டாமல் அவனையே பார்த்தார். கண்ணைத் துடைத்துக்கொண்டு மறுபடியும் பார்த்தார்.

"ராஸ்கல்! -காலிப்பயல்!'' என்றெல்லாம் அவர் முணுமுணுத்தார்.

"என் ரூமுக்கு வாங்கோ, மாமா!'' என்று அவரைத் தன் ரூமுக்கு அழைத்துக்கொண்டு போனுன்.

"மாமி சௌக்கியமா! மங்களத்துக்குக் கல்யாணம் ஆயிடுத்தா?'' என்று விசாரித்தான். நடேசய்யரால் ஒன்றும் பேசமுடியவில்லை. அவர் முகம் ஒரே ரௌத்ராகாரமாயிருந்தது.

"இருங்கள்! காப்பி, டிபன் கொண்டு வருகிறேன்!'' என்று சொல்லிவிட்டு மெதுவாக மாமா இருந்த ரூமை வெளிப்புறமாகத் தாளிட்டுவிட்டு சேகரன் வேகமாய் நடந்தான். இனி என்ன செய்யவேண்டும் என்பதை அவன் தீர்மானித்துவிட்டான். தோட்டத்தின் குறுக்குப் பாதை வழியாக சாலையைப் பிடிக்கவேண்டியது. அப்படியே கம்பி நீட்டவேண்டியது. விசாலாட்சியிடம் தன் நிலைமையைச் சொல்லக்கூட நேரமில்லையே என்று வருந்தினுன். கதலீபுரத்தில் எதிரிகளின் படையெடுப்பு அதிகமாகிவிட்டது. பயங்கரம் 24 மணி நேர நோட்டீஸ் கொடுத்துவிட்டார். நடேசய்யர் வேறு எங்கிருந்தோ வந்து கதலீபுரத்தில் குதித்திருக்கிருர்!

"கதலீபுரத்திற்கு நடேசய்யர் வரக் காரணமென்ன? அவருக்கு அவன் அங்கு இருப்பது எப்படித் தெரிந்தது?'' என்று மனதிற்குள் ஆச்சர்யப்பட்டுக்கொண்டே சேகரன் கதலீபுரத்தின் எல்லையைத் தாண்டிவிட்டான்.

உண்மையில் சேகரன் ஆச்சர்யப்படவேண்டிய அவசியமில்லை. கதலீபுரத்து வாசிகளில் ஒருவர் நடேசய்யரின் சிநேகிதர். அவர் சமீபத்தில் சென்னைக்குச் சென்றிருந்தபோது நடேசய்யர் தன் பெண்ணுக்கு வரனுக்காக அலைந்து கஷ்டப்பட்டுக்கொண்டிருப்பதைப் பார்த்தார். நடேசய்யருக்குத் தன்னுலான ஒத்தாசை செய்யவேண்டும் என்று மனதில் சங்கற்பம் செய்துகொண்டார். பயங்கர நரஸிம்மத்தின் வீட்டில் டியூஷன் சொல்லிக்கொடுக்கும் சேகரனைக் கண்டவுடன், "இவன்தான் நடேசய்யருக்கு ஏற்ற மாப்பிள்ளை, பையனும் லட்சணமாய், கெட்டிக்காரனுய் இருக்கிருன்'' என்று எண்ணினுர். நடேசய்யருக்குக் கடிதம் எழுதி அவரை வரவழைத்தார்.

(தொடரும்)

ஸ்ரீ ஸ்வாதித் திருநாள்

ஸாஹித்யங்கள்

'ராஜ்ய சேவாநிரத' செம்மங்குடி
ஸ்ரீநிவாச ஐயர் ஸ்வரப்படுத்தியது

பல்லவி

பாவயே ஸாரஸ நாபம் பாஸுர மூர்த்திம் (பாவயே)
4 4 4 4

அனுபல்லவி

பூமி ரமாகரயுக ஸேவ்ய மான பாத ஸரோஜம் (பாவயே)
4 3 3 4

சரணங்கள்

1. துரித ஸ மூஹவிராமம், நிஜதனு ருசி நிந்தித காமம்
3 3

பரிபூரித நதஜனகாமம் ப்ருது நாரத ஹ்ருத யாபி ராமம்
4 3 3 3 4

ஸுரு சிர சோபலலாமம் கலஸாஹஸிக ஸமுதய பீமம்
4 2 3 4

ஹத நிருபம் கலதர பௌமம் ஸுவதன ருசிநிந்தித சாரத ஸோமம் (பாவயே)
2 4 3 3 3 4

2. ஸரஸகனோபம நீலம் த்ருத மனோஹர சேலம்
4 3

நிசுஹிம்கரமதஹார பாலம் மஹிமாதவ மமலஸுசீலம்
3 2 4

சாருகராஞ்சித சைலம் கலதனுஸுதஸமுதய காலம்
2 3 3

பதவிரசித த்ரிபுவனஹேளம் முனிநிகர ஹ்ருதய ஸரோஜ மராளம் (பாவயே)
3 4 3 4

3. பூரிக்ரு பாரஸவாஸம் பணி பரிவ்ருடதல்ப நிவாஸம்
4 2 4

நவநீரத மேசக கேசம், நிஜபத யுக நதகத ரோஷம்
3 3 3 3

ஸுரபீதிஹர ம்ருதுஹாஸம் சாரு திலஸுமஸத் ருசஸு நாஸம்
4 3 3

திவ்ய மதுவன விரசிதராஸம் வலரிபுமத டலஸித பாதஸுதேசம் (பாவயே)
3 4 3 3 4

பல்லவி

பாஸு ர மூர்த்திம் 4	—அழகிய சரீரத்தையுடைய
ஸாரஸ நாபம் 4	—பதுமநாபப் பெருமானை
பாவயே 4	—(நான்) தியானித்து வணங்குகிறேன்.

அனுபல்லவி

பூமீ ரமா கர யுக 4 3	—பூதேவி, லக்ஷ்மிதேவி இவர்களுடைய கைகளால்
ஸேவ்யமான பதத ஸரோஜம் 3	—வணங்கப்படும் தாமரை போன்ற பாதங்களை யுடைய (பதும நாபனை வணங்குகிறேன்)

சரணம் 1.

துரித ஸமூஹ விராமம் 3	—பாபக் கூட்டத்தை யகற்றுபவனும்
நிஜதனு ருசி நிந்தி தகாமம் 3	—மன்மதனைப் பழிக்கும் எழில் வாய்ந்தவனும்
பரி பூரித நதஜன காமம்	—(தன்னை) வணங்கும் ஜனங்களின் விருப்பங் களை நிறைவேற்றுபவனும்
ப் ருகு நாரத ஹ்ருத யாபி ராமம் 4 3 3 3 4	—ப்ருகு, நாரதர் இவர்களுடைய ஹ்ருதயங் களுக்கு ஸந்தோஷத்தைக் கொடுப்பவனும்
ஸு ரு சிர சோப லலாமம் 4	—அழகிய திலகத்தை அணிந்தவனும்
கல ஸா ஹ ஸிக ஸமுத ய பீமம் 2 3 4	—அசுரக்கூட்டத்திற்கு பயத்தைச் செய்பவனும்
ஹத நிருபம கலதர பௌமம் 2	—அளவற்ற தீமைகள் செய்த நரகாசுரனைக் கொன்றவனும்
ஸுவத ன ருசி நிந்தி த 3 3	—தனது முக மண்டல காந்தியால் பழிக்கப்பட்ட
சாரத ஸோமம் 3	—சரத் காலத்து சந்திரனை யுடையவனும் ஆன (பதும நாபனை வணங்குகிறேன்)

சரணம் 2.

ஸரஸக ஜேபம நீலம் 4	—நீருண்ட மேகம் போன்றவனும்.
த் ருத மனோஹர சேலம் 4	—மனதைக் கவரும் வஸ்திரத்தையணிந்தவனும்
சிசுஹிம கர மத ஹரபாலம் 3 2	—சந்திர கலையைக் காட்டிலும்அழகிய நெற் றியையுடையவனும்
மஹி மாதவம் 4	—பெருமைவாய்ந்த லக்ஷ்மியின் நாயகனும்
அமல சுசீலம்	—நிர்மலமான ஒழுக்கமுடையவனும்
சாருக ராஞ்சித சைலம்	—அழகிய கையால் கோவர்த்தனகிரியை ஏந்திய வனும்
க லத நுஸு த ஸமுத யகாலம் 2 3 3	—துஷ்டர்களான அசுரகுழாத்தைத்தொலைத்த வனும்
விரசித த்ரிபுவன ஹேளம்	—தனது விளையாட்டிற்காகவே உலகைப் படைத் தவனும்
முனி நிகர ஹ்ருதய ஸரோஜ மராளம் 3	—முனிவர்களின் மனத்தாமரைகளில் வசிக்கும் ஹம்ஸமாயுள்ளவனுமான (பதும நாபப் பெருமானை வணங்குகிறேன்)

சரணம் 3.

பூரி க்ருபா ரஸ வாஸம் 4	—கருணைக்கு இருப்பிடமானவனும்
பணி பரிவ் ருட தல்ப நிவாஸம் 2 4	—ஆதிசேஷனை படுக்கையில் பள்ளிகொண்ட வனும்
நவ நீரத மேசக கேசம் 3	—நீருண்ட மேகம்போன்ற கூந்தலையுடைய வனும்
நிஜபத யுக நதக தரோஷம் 3 3 3	—(தனது) பாதத்தில் வணங்கப்பட்ட முனிவர் களை யுடையவனும்
ஸு ரபீ திஹரம் ருது ஹாஸம் 4 3	—மந்தஹாஸத்தால் தேவரது பயத்தையகற்று பவனும்
சாரு திலஸும ஸத்ருசஸு நாஸம் 3	—எள்ளுப்புஷ்பம்போன்ற நாஸிகையை யுடைய வனும்
திவ்ய மதுவன விரசிதராஸம் 3 4	—மதுவனத்தில் ராஸக்ரீடை புரிந்தவனும்
வலரிபு மகுட லஸிதபாத ஸரோஜம் 3	—இந்திரனால் வணங்கப்பட்ட தாமரைபோன்ற பாதங்களையுடையவனும் (ஆன பதும நாபனை வணங்குகிறேன்)

ராகம் : கீரவாணி (1-களை) தாளம் : ஆதி

ஆ : ஸரிகமபதநிஸ் அ : ஸ்நிதபமகரிஸ.

(21—வது மேள கர்த்தா)

பல்லவி

1. ; ஸா ; ரீ கம கரி ஸா ; | நீ தா நீ ; | ஸா ; ; ; ||
. பா . வ யே . . . ஸா . ர ஸ நா . ப ம் . .
; ரிஸ நீ ஸா ரீ ; ரிக ரிக | ரீ ; ; ; | ; ரி க மக கரி ||
. பா. . ஸ ர . மூ. . ர் த்தி ம் . .
2. ஸநி ஸரீ ஸரீ பம கரி ஸா ; | நீ தா நீ . | ஸா ; ; ; ||
. . பா. . வ யே. . . ஸா . ர ஸ நா . பம் . . .
; ரிஸ நீ ஸா ரீ ; ரிக ரிக | ரீ ; ; ; | ; ரி க மாபம கரி ||
. பா. . ஸ ர . மூ. . ர் த்தி ம் . .
3. ஸநி ஸரி கம பாதப மாபம கரி ஸா | நீ தா நீ ; | ஸா ; ; ; ||
. . பா. . . வ . . யே. . . . ஸா. ர ஸ நா . பம் . . .
; ரி ஸ நீ ஸா ரீ ; ரிக ரிக | ரீ ; ; ; | ; த த ப ம கரி ||
. பா . . ஸ ர . மூ. . ர் த்தி ம் . .
ஸநி ஸரி கம பாதப மாபம கரி ஸா ரீகரி | ஸ நி தா நீ ; | ஸா ; ; ; ||
. . பா. . . வ . . . யே. . . . ஸா . . . ர . . ஸ நா . . பம் . . .

அநுபல்லவி

1 ; பா தா நீ தா நீ ஸ்ா ; | ; ஸ்ா ரீ க்ா | க்ரி ரீ ஸ்ா ; ||
. பூ . மீ . ர . மா . . , க ர . யு . . க .
2. ; பா தா த ஸ்ா நி ஸ்ா ரீ | ; க்ா ரி க் ம் க் | க்ரி ரீ ஸ்ா ; ||
. பூ . மீ . . ர மா . . க ர . . . யு . . க .
; ஸ்ா ; ஸ்ா ஸ்நி தா ப த நீ | ; நி ஸ் நி த பா | ம க மபா ம் கரி ||
. ஸே . வ்ய மா . . . . ன . பா . . த ஸ ரோ , . . . ஜம் .
ஸநி ஸா ஸ்ா ஸ்ா ஸ்நி தா ப த நிஸ் | ரீ ஸ் நி த நி த ப | தபம பமக கரி ||
. . ஸே : வ்ய மா . . . . ன . . பா . . . த . . ஸ . . ரோ . . ஜம்
ஸநி ஸரி கம பாதப மாபம கரி ஸ்ா ரீகரி | ஸ நி தா நீ ; | ஸா ; ; ; ||
. . பா. . . வ . . யே. . . . . ஸா . . . ர . ஸ நா . ப ம் . .

சரணம்

1. ; பா, த பா மக கப மகா, ரீ | ரி ஸ ஸா நி ஸா ; | ஸ நி தா நீ ஸா ||
. பூ . ரிக்ரு பா. . . . ர . . ஸ வா . . . ஸ ம் . . . . . ப ணி
; நி ஸா ரி கா மக பம கா ரி | கா ; மா ; | ; ; ப ம க ரி ||
. ப ரி வ்ருட தல் . . ப நி வா . ஸ ம் .
2. கம பா, த பா மக ம ப ம கரீ | ரிஸ ஸா நி ஸா , க | ரி ஸ நி த நீ ஸா ||
. . பூ . ரி க்ரு பா. . . . . ரஸ வா . . . ஸம் . . . . . . ப ணி
; நி ஸா ரி கா மக பம கரி ஸரி | கா ; மா ; | ; ; பா தா ||
. ப ரி வ்ருட, தல் . . . ப . நி . வா . ஸ ம் . . ந வ
; த நீ த பா மக ம ப ம கரீ | ரீ கா ப ம கா | ரீ , ஸ நீ ஸா ||
. நீ , ர த மே. . . . . சக கே . . . . . ஸம். . நி ஐ
; ஸரீ கரீ ஸநி தா நீ ஸா | ரீ கா ப ம க ரி | ஸா ; ரி க மா ||
. பத யுக ந . த க த ரோ . . . . . ஷ ம் ஸ . ர
; பா ; தா நீ தா பா தா | நீ ; ஸ்ா ; | ; ஸ்ா ; ஸ்ா ||
. பீ . தி ஹ ர ம்ரு து ஹா . ஸ ம் . சா . ரு
; நி ஸ்ா நி தா பா தா நீ பா | தா ; பா ; | ; ; மக மா ||
. தி ல ஸ்ம ஸ த்ரு ஸ ஸ நா . ஸ ம் . . தி . வ்ய
1. ; ப தா ப தா நீ ஸ்ா ரீ ஸ்ா | ரீ க்ா க் ரி ரீ | ஸ்ா ; ; ; ||
. ம து வ ன வி ர சி த ரா . . . . ஸ ம் . .
2. ; ப தா நி ஸ்ா ரீ ஸ்ா ரீ க்ா | ரி க் ம் க் க் ரி ரி ஸ் | ரீ ; ரீ ரீ ||
. ம து வ ன வி ர சி த ரா . . . . ஸ ம் வ ல
; ஸ் நிரீ ஸ் ஸ்ா ஸ்நி தா பா தா | ப த நி ஸ் நி த பா | மக ம பா ம கரி ||
. . ரிபு ம கு ட . ல ஸி த . பா . . . . த ஸ தே . . . . ஸம்
ஸநி ஸரி கம பாதப மாபம கரி ஸா ரீகரி | ஸ நி தா நீ ; | ஸா ; ; ; ||
. . பா. . . வ . . யே. . . . ஸா . . . ர . ஸ நா . பம் . . .

மாதர் மகா சபை

குங்குமம்

'யார் அது தெருவில்? மஞ்சுளாபோல் இருக்கிறதே!' என்றாள் பானு.

'ஆமாம், மஞ்சுளாதான்' என்று சொல்லிவிட்டு, 'மஞ்சுளா, வாடி, ஏன் நிற்கிறாய்? வரலாம் வா. உன் சிநேகிதி இருக்கிறாள்' என்றாள் தெருவில் நின்றுகொண்டிருந்த மஞ்சுளாவைப் பார்த்து ருக்குவின் மாமியார்.

'அப்படியானால், நீங்களெல்லாம் என் சிநேகிதர்கள் இல்லை போலிருக்கிறது?' என்று சிரித்துக்கொண்டே மஞ்சுளா உள்ளே வந்தாள்.

'அதற்கில்லையடி. உனக்கு மாத்திரமில்லை. மனித சுபாவம் அது. ஒருத்திக்கு ஒருத்தியிடம் தான் அதிக பிரீதி இருக்க முடியும். இதனால் மீதி பேர்களிடம் பிரீதி இல்லை என்று அர்த்தமாகிவிடாது. இது உலக சுபாவம்' என்றாள் ருக்குவின் மாமியார்.

'அந்த ஒருத்தி நான் என்று சொல்கிறீர்கள்? அதானே?' என்று ருக்குவின் மாமியாரைப் பார்த்துச் சொல்லிவிட்டு, 'ஏன்? இதை ஒப்புக்கொள்வதில் உனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லையே?' என்று மஞ்சுளாவைப் பார்த்துக் கேட்டாள் சரோஜா.

'அதெல்லாம் கிடக்கட்டுமடி. நான் ஒன்று கேள்விப்பட்டேன்' என்று விமலா சொல்ல ஆரம்பிக்கையில், அவள் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டிருந்த வசந்தா, ஒருவருக்கும் தெரியாமல் விமலாவைத் தேள் கொட்டின மாதிரி சுரீர் என்று உறைக்கும்படி கிள்ளினாள். சுட்டெரித்து விடுகிறமாதிரி பானு ஒரு முறைப்பு முறைத்தாள். 'அடி, அசடே. இதையெல்லாம் அவளையேவா கேட்பது?' என்று சொல்கிற பாவனையில் ருக்கு நோக்கினாள். உண்மையிலேயே விமலா இந்த எச்சரிப்புகளையெல்லாம்

'..............பானு ஒரு முறைப்பு முறைத்தாள்..............'

பார்த்துவிட்டு நடு நடுங்கிவிட்டாள். மேலே பேசாமல் அத்துடன் நிறுத்திக்கொண்டு விட்டாள்.

'என்ன சொல்ல வந்தாய்? ஏன் திடீரென்று நிறுத்திக் கொண்டு விட்டாய்? பரவாயில்லை. கேட்கலாம் கேள். என்ன கேள்விப்பட்டாய்?' என்றாள் இந்த சமிக்ஞையெல்லாம் கவனிக்காத மஞ்சுளா.

இதற்கு என்ன பதில் சொல்வதென்று விமலாவுக்குத் தெரியவில்லை. வந்தது வரட்டுமென்று 'உங்கள் அகத்துக்காரர் ஊருக்குப் போய்விட்டாராமே?' என்று விமலா சொல்லிவிட்டு, பக்கத்திலிருந்தவர்கள் முகத்தை நோக்கினாள்.

இந்த சமிக்ஞை கலாட்டாக்களையெல்லாம் கவனிக்காத மஞ்சுளா, 'இதற்குத்தானா இவ்வளவு யோசனை! காலை எட்டு மணி வண்டிக்கே போய்விட்டார்' என்றாள்.

'தனியாக வா?' என்றாள் விமலா.

'போடி, உன் குறும்புத்தனம் இன்னும் போகவில்லையே?' என்று ஒரு நாணச்சிரிப்பு சிரித்தாள் மஞ்சுளா.



"......................பேரப் பிள்ளைகளுடன்......................"

'அதெல்லாம் பழங்காலத்து ஸமாச்சாரம். வாழ்க்கையின் ரஸத்தை அனுபவிக்கத் தெரியாததுகள்தான் அப்படியிருக்கும். எங்கள் மூன்றாவது வீட்டில் வந்து பாருங்கள். கிளி கொஞ்சுகிறது என்பார்களே, அந்தமாதிரி ஆனந்தம் பெருக்கெடுத்தோடுகிறது. கடல் மாதிரி வீடு. சுந்தர மாமாவுக்கு மூன்று பிள்ளைகள். மூன்று பிள்ளைகளுக்கும் கல்யாணமாகி நாட்டுப் பெண்கள் வந்திருக்கிறார்கள். எல்லாம் படித்த பெரிய இடத்துப் பசங்கள். ஒன்று இண்டர்மீடியட்; ஒன்று பி. ஏ; ஒன்று பி. ஏ. முதல் வருஷத்தோடு நின்று விட்டதாம். கிளி என்றால் கிளி. பார்ப்பதற்கு ஸ்வர்ண விக்கிரகம் மாதிரி இருக்குங்கள்; வீட்டில் கலகலவென்று எப்பொழுது பார்த்தாலும் சிரிப்பும் சந்தோஷமும்தான். அததற்குத் தனித் தனியாக ரூம்கள். ஜோடி ஜோடியாக அதது 'தம் தம்' என்று மாடிப்படியில் நடந்து போகும்போது பார்க்க வேண்டும். எங்கள் வீட்டுக் கூடம் அதிருகிறமாதிரி இருக்கும். கபடமற்று சுயேச்சையாக 'கட கட வென்று' ஒரு சிரிப்பு சிரிக்குங்கள். சுந்தர மாமாவுக்கும், கல்யாணி மாமிக்கும் (சுந்தர மாமாவின் மனைவி) இவ்வளவு வயதாயிற்றே. அவர்களுடைய பேச்சையும் போக்கையும் பார்க்கவேண்டுமே. அவர்கள் கூடத்தில் ஊஞ்சலில் உட்கார்ந்துகொண்டு பேரப்பிள்ளைகளுடன் கும்மாளமடித்துக்கொண்டிருப்பார்கள். சுந்தரமாமாவுக்கு அடுத்த மாதம் ஷஷ்டியப்த பூர்த்தியாம். ஆனால், இப்பொழுதுதான் கலியாணமான தம்பதிகள் மாதிரி இருக்கும் அவர்கள் நடந்துகொள்ளும் மாதிரி. பசங்களைவிட இவர்கள் கும்மாளம்தான் அமர்க்களப்படும்' என்று சரோஜா சொல்லிக்கொண்டிருக்கையில், 'வயசாய்விட்டால் மாத்திரம் என்ன? அவர்களும் அகமுடை-

யான்-பெண்டாட்டிதானே? வீட்டில் ஒரே குஷியும் கும்மாளமுமாயிருந்தால் அவர்களும் உற்சாகப்படுவது சகஜந்தானே?' என்றாள் ருக்குவின் மாமியார்.

'வயசு ஆக ஆகத்தான் ஆசை அதிகமாகிறது மாமி. எங்கள் தாத்தாவினால் அரை நிமிஷம் எங்கள் பாட்டியை விட்டுப் பிரிந்திருக்க முடிகிறதில்லை. 'ஏய்! யாரடி அங்கே?' என்று நிமிஷத்துக் கொருதரம் பாட்டியைக் கூப்பிட்டபடிதான். ஒரு ஐந்து நிமிஷ காலம் இல்லாமல் எங்காவது போய்விட்டாளானால், 'எங்கேயடி தொலைந்துவிட்டாய்? அரை மணியாய்த் தாகம் நாக்கை வரட்டுகிறது' என்பார். 'ஏன், யாரையாவது பசங்களைக் கேட்டால் கொண்டு கொடுக்கிறதுகள். நானேதான் வந்து கொடுத்தாக வேண்டுமாக்கும்?' என்பாள் பாட்டி. தன் கையால் கொடுத்து அதை அவர் சாப்பிடுவதில் இருக்கிற ஆனந்தம் எவ்வளவென்பது அவளுக்கு நன்றாகத் தெரியும் என்றாள் பானு.

'அவளுக்கு என் படதென்ன? ஒவ்வொரு அகமுடையான் பெண்டாட்டிக்கும் தெரியும்' என்றாள் விமலா.

'அப்புறம் நீ சொல்லடி' என்றாள் சாந்தா.

'சுந்தர மாமாவின் நாட்டுப் பெண்கள் தானாகட்டும், பிள்ளைகள்தானாகட்டும், மனதுக்குள் ஒருவரைப்பற்றி ஒருவருக்கு என்ன அபிப்ராயம் இருக்குமோ, ஏது அபிப்பிராயம் இருக்குமோ, ஒருவருக்கொருவர் அனுவசியமான விஷயங்களில் தலையிட்டுக் கொண்டு வீண் சச்சரவுகளுக்கு இடம் கொடுக்கமாட்டார்கள். சுந்தர மாமாவின் வீடு தேவேந்திர பவனம் தான் போங்களேன்' என்றாள் சரோஜா.



"......எங்கேயடி தொலைந்து விட்டாய்......"

'நீங்கள் என்ன சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள்? எனக்கொன்றும் புரியவில்லையே' என்றாள் மஞ்சுளா.

வாஸ்தவத்திலேயே அவளுக்கு இதெல்லாம் ஏதோ புதிர் போடுகிற மாதிரி இருந்தது. விஷயம் பழையதுதான்.

சரோஜா நிலைமையைத் தெளிவு பண்ணிவிட்டு 'என்ன இப்படிப் பயமில்லாமல் சொல்லுகிறாளே என்று யோசிக்கிறீர்களா? மஞ்சுளா ரொம்ப ரஸிகை' என்று கூட்வே, ஒரு அஸ்திரத்தையும் பிரயோகித்துவிட்டாள் சரோஜா.

'சரோஜாவுக்குப் பேசக் கற்றுக் கொடுக்கவேண்டுமா? அது கிடக்கட்டும். பேச்சு சுவாரஸ்யத்தில் நான் வந்த வேலையை மறந்துவிட்டேன், பார்த்தாயா? உன்னிடம்தான் வந்தேன்' என்று சரோஜாவைப் பார்த்துச் சொன்னாள் மஞ்சுளா.

'ஏன், என்ன சமாச்சாரம்?' என்றாள் சரோஜா.

'அகத்துக்குவா சொல்கிறேன்' என்று சொல்லிவிட்டு, 'தயவு செய்து கொஞ்சம் மன்னித்துக்கொள்ளுங்கள். சரோஜாவை அழைத்துக்கொண்டு போகிறேன். பத்து நிமிஷத்தில் வந்துவிடுவாள்' என்று சொல்லிக் கொண்டே எழுந்தாள் மஞ்சுளா.

29

சிவபெருமானையும் வசீகரித்த ஆயர்பெருமான்

✱

மழநாடு என்று ஒரு நீர் நாடு—அதாவது நீர்வள நாடு. எங்கே பார்த்தாலும் நீர் நிலைகளும் சோலைகளும். அருகேயுள்ள ஒரு நீர் நிலையைப் பாருங்கள். சோலையையும் பாருங்கள். குளத்தைக் குழப்பி நீராடியபின், கார் எருமைகள் மாமரச் சோலையின் குளிர்ந்த நிழலில் வேலையின்றி உறங்குகின்றனவாம்.

காவின் நறுங்குளிர்
நீழல் உறங்குவ கார்மேதி

[கா—சோலை. கார்மேதி—கரிய எருமைகள்] முப்பெருந் தேவைகளில் உடையோ தேவையில்லை. உறங்க, உண்ண—ஏன்? நீராடவும் வசதிக்குக் குறைவில்லை.

ஒரு புறம் பள்ளர்கள் மாடுகளைப் பூட்டி உழுகிறார்கள். அருகே அன்னங்களோடு கூடிய தடாகம். அதன் பக்கத்திலே கருப்பஞ்சாறு காய்ச்சி வெல்லமாக்குகிறார்கள். இந்தப் புகை, மேகங்கள் போலக் காண்கின்றன! வேறொரு புறம் ஆறு, வாழைத் தோட்டங்கள், கமுகுத் தோட்டங்கள், பூச்செடிக் கொடிகள், வேறொரு பக்கம் வயற்காடு, அங்கங்கே கன்றுகள், மான் குட்டிகள். சில இடங்களில் மலர் வனங்கள். அழகும் இனிமையும் பயனும் நிறைந்த காட்சிகள்.

ஆயர்குல ஞாயிறு

தேசத்திற்கு ஓர் ஆபரணமாகத் திகழ்ந்த இந்த மழநாட்டுக்குத் திருமங்கலம் என்ற ஊர் ஆபரணங்களுக்கும் ஆபரணமான திருமங்கலமாகவே திகழ்கின்றதாம். இவ்வூரில் ஆயர்குலப் பெரியார் ஒருவர்,—ஆனாயர் என்று பெயர். சிவபக்தியில் ஊறிக் கனிந்தவர்:

பேயுடன் ஆடு பிரான் அடி
அல்லது பேணாதார்.

[பேயுடன் ஆடு பிரான்—சிவபெருமான். பேணாதார்—(வேறொன்றையும்) விரும்பாதவர்.]

இப் பெரியாரைச் சேக்கிழார்,

ஆயர் குலத்தை விளக்கிட
வந்(து)உதயம்செய்தார்

என்று போற்றுகிறார். 'ஆயர் குல ஞாயிறு' என்கிறார்.

கடமையும் பொழுதுபோக்கும்

அகன்ற காட்டிலே பசுக்கூட்டங்களுக்கு யாதொரு துன்பமும் ஏற்படாமல் அவற்றை மேய்த்து வந்தார். தம் தொழிலை எவ்வளவு நன்றாக, முழுக்கவனத்துடன் சுதர்மமாகச் செய்து வந்தார் பாருங்கள்:

தூநறு மென்புல் அருந்தி,
விரும்பிய தூநீர் உண்(டு),
ஊனமில் ஆயம் உலப்பில
பல்க, அளித்துள்ளார்.

[தூநறு—சுத்தமான நல்ல. ஆயம்—பசுக்கூட்டங்கள். உலப்பில—அளவில்லாதன. பல்க—விருத்தியடைய. அளித்துள்ளார்—காப்பாற்றுகிறார்.]

இப்படி மாடு மேய்ப்பது இவர் தொழில். இதயத்திலே சிவபெருமான்மீது நிறைந்து ததும்பிய அன்பு, இசையின்பமாய்ப் பெருகுமாறு புல்லாங்குழல் வாசிப்பது இவர் பொழுதுபோக்கு.

வளர்ந்த மூங்கிலிலே நுனியில் நாலுபங்கும் அடியில் இரண்டு பங்கும் அறுத்தெறிந்துவிட்டு, நடுவிலுள்ள பாகத்தை வைத்துக் கொண்டு, மெட்டுகள் இருக்க வேண்டிய இடங்களில் துளைகளை வரிசையாகச் செய்தார். முதலில் வாயுவழங்கும் துளை அமைத்தார். பிறகு ஒரு துளைக்கும் மற்றொரு துளைக்கும் ஒவ்வோர் அங்குல அளவாக இடைவெளி அமைத்துக் கொண்டார். புல்லாங்குழலுக்கு 'நீளம் இருபது விரல், சுற்றளவு நாலரை விரல்......?' என்றெல்லாம் அடியார்க்கு நல்லார் என்ற உரையாசிரியர் தமது சிலப்பதிகார உரையில் கூறியுள்ளார். இத்தகைய குழற்கருவியில் சிவபெருமானுக்கு உகப்பான 'ஓம் நமச்சிவாய' என்ற பஞ்சாட்சரத்தை ஏழிசையின் சுருதிபெற வாசித்தாராம் ஆனாயர்:

-டுத்தகுழற் கருவியினில்,
எம்பிரான் எழுத்தஞ்சும்,
தொடுத்தமுறை ஏழிசையின்
சுருதிபெற வாசித்துத்,
தடுத்தசரா சரங்களெலாம்
தங்கவரும் தம்கருணை
அடுத்த இசை அமுதளித்துச்
செல்கின்றார், அங்கு ஒருநாள்—

[எழுத்து அஞ்சு—பஞ்சாட்சரம். கருணை அடுத்த இசை அமுது—கருணை பொருந்திய இசையாகிய அமுதம்.]

கார்காலக் காட்சி

ஒரு நாள் ஆனாயர் வழக்கம் போல காடு நோக்கிச் சென்றார்.

நீலமா மஞ்ஞை ஏங்க,
நிரைக்கொடிப் புறவம் பாடக்,
கோலவெண் முகைஏர் முல்லை
கோபம்வாய் முறுவல் காட்ட,
ஆலுமின் இடைசூழ் மாலைப்
பயோதரம் அசைய வந்தாள்,
ஞாலநீ(டு) அரங்கில் ஆடக்
கார்எனும் பருவ நல்லாள்.

[மஞ்ஞை—மயில். ஏங்க—ஒலிக்க நிரைக்கொடிப் புறவம்—வரிசையாகவுள்ள கொடியையுடைய முல்லை: (இங்கே) முல்லையில் உள்ள வண்டுகள். கோலவெண் முகை ஏர்முல்லை—அழகும் வெண்மையும் தோன்றும் முல்லை அரும்புகள்: கோபம் இந்திர கோபம் என்ற செந்நிறம் பொருந்திய தம்பலப் பூச்சி; இப்பூச்சிகள் கார் காலத்தில் தோன்றும். வாய் முறுவல் காட்ட—(இந்திர கோபம்) வாயையும், (முல்லையரும்புகள்) பற்களையும் காட்ட. ஆலும்—அசையும். மின் இடை—மின்னலாகிய இடை. மாலைப்பயோதரம்—மாலைக் கால மேகமாகிய மார்பு. ஞால நீடு அரங்கு—பூமியாகிய பெரிய நடன மேடை. கார் எனும் பருவ நல்லாள்—கார்காலம் என்ற பெண் ஆவணியும் புரட்டாசியும் ஆகிய பருவ காலம்.]

இப்படி வந்தகார்காலத்தில்காடு நோக்கிச் சென்ற ஆனாயர் பூத்துத் தளிர்த்து நின்ற கொன்றை மரம் ஒன்றைக் கண்ணுற்றார். அது இவரது பக்திக் கண்களுக்கு வெறும் கொன்றை மரமாய்த் தோன்றவில்லை; கொன்றை மலர் கொத்துக்களைத் தமது ஜடாமகுடத்தில் அணிந்திருக்கும் சிவபெருமானைப்போல் தோன்றியது. தோன்றவே, இவர் மனம் சிவத்தில் ஒன்றிவிட்டது. கருவி கரணங்களெல்லாம் குழைந்து உருக, மடை திறந்த அன்பினில் மூழ்கியெழுந்த ஆனாயர், வேய்ங்குழலை அதரத்தில் வைத்து, அஞ்செழுத்தை இசையில் அமைத்து ஊதத்துவங்கினார்.

கீத வலையில் பசு பட்சிகளும், பசு பாலர்களும்

இசையமுதம் எங்கும் நிறைந்து எல்லா உயிர்களிலும் பாயத் தொடங்குகிறது. முதலில் பசுக் கூட்டங்களை நோக்குவோம்; கடித்த அறுகம்புல்லை அசை போட்டு, மென்று தின்னாமல் அப்படியே மெய்ம்மறந்து பசுக்கள் மந்தை மந்தையாகக் குழலோசை எழும் திக்கில் வந்து நிற்கின்றன. பாருங்கள் அந்தக் கன்றுக்குட்டிகளை. பசுக்களிடம் பால் குடித்துக் கொண்டிருந்த அக்குட்டிகள் வேய்ங்குழலோசை காதில் புகவே தாயை மறந்து தங்களை மறந்து நுரை வாயுடன் நிற்கின்றன.

அதோ எருதுகள்! அதோ அந்த மான் குட்டிகள்! அதோ வேறு காட்டு மிருகங்கள்! எல்லாம் மயிர் சிலிர்த்து வந்து மெய்ம்மறந்து நிற்கின்றனவாம்.

ஆடும் மயில்கள் அப்படியே சொக்கிப் போய், இசை வரும் திக்கு நோக்கி மெள்ள வருகின்றன—அசையாது அணுகுவது போல் அணுகுகின்றன. மற்றப் பறவையினங்கள் பறத்தல் ஒழிந்து மயங்கி மயங்கி வந்து நெருங்குகின்றன. மாடு மேய்த்துக் கொண்டிருந்த கோவலர்கள் அப்படி அப்படியே நின்று இசை பருகிய வண்ணம் மெய்ம்மறந்து நிற்கிறார்கள்.

இக்காட்சிகளைச் சேக்கிழார் பின்வரும் இரு பாடல்களால் விளக்குகிறார்:

ஆனிரைகள் அறு(கு) அருந்தி
அசைவிடா(து) அணைந்(து)
அயரப்,
பால் நுரைவாய்த் தாய்முலையில்
பற்றும் இளங் கன்றினமும்
தான் உணவு மறந்தொழியத்,
தடமருப்பின் விடைக்குலமும்.
மான்முதலாம் கான்விலங்கும்
மயிர் முகிழ்த்து வந்தணைய;
ஆடு மயில் இனங்களும் அங்(கு)
அசை (வு) அயர்ந்து மருங்(கு)
அணுக,
ஊடு செவி இசை நிறைந்த
உள்ளமொடு புள்ளினமும்
மாடு படிந்து உணர்வொழிய,
மருங்கு தொழில் புரிந்
தொழுகும்
கூடியவன் கோவலரும்
குறைவினையின் துறை நின்றார்.

[ஆனிரை-பசுக் கூட்டம். அறுகு அருந்தி-அறுகம் புல்லை மேய்ந்து, அசைவிடாது-இரை எடாமல். அயர(தம்மை) மறக்க. தட மருப்பின்-பெரிய கொம்புகளை உடைய. விடைக்குலமும்-எருதுக் கூட்டங்களும். கான் விலங்கு-காட்டு மிருகங்கள். முகிழ்த்து-சிலிர்த்து, அசைவு அயர்ந்து-ஆடுவதை மறந்து. செவி ஊடு-செவி வழியே. புள்ளினம்-பறவைக் கூட்டம். மாடு படிந்து-அருகே அடைந்து, மருங்கு தொழில்-அருகே மேய்த்தல் தொழிலை. கூடிய-திரண்ட. கோவலர்-ஆயர், குறைவினையின் துறை நின்றார்-தொழிலில் கருத்தைச் செலுத்தாமல் இசையில் ஈடுபட்டார்கள்.]

சம தர்ம கீதம்

மேலும் மேலும் குழலூதுகின்றார் ஆனயர். வலியார், மெலியார் ஹிம்ஸிக்கும், ஹிம்ஸிக்கப்படும் பிராணிகள் எல்லாம் இசைமயமாவதால், பாம்புகள் அச்சமின்றி மயில்களின் மேலே விழுகின்றனவாம்: சிங்கமும் யானையும் பகை மறந்து சேர்ந்து வருகின்றனவாம்: மான்கள் புலிகளின் பக்கத்திலே போகின்றனவாம்:

நலிவாரும் மெலிவாரும்
உணர்வொன்றாய் நயத்தலினால்
மலிவாய்வெள் எயிற்(று)அரவம்
மயில்மீது மருண்டு விழும்;
சலியாத நிலை அரியும்
தடங்கரியும் உடன் சாரும்;
புலிவாயின் மருங்(கு) அணையும்
புல்வாய புல்வாயும்!

[நலிவாரும்—வருத்துவோர். மெலிவார்—வருத்துவோர். நயத்தலினால்—விரும்புவதால், மலிவாய் வெள் எயிற்று அரவம்—வாயில் நிறைந்த வெள்ளிய பற்களையுடைய பாம்பு; அரி;—சிங்கம் தடங்கரி—பெரிய யானை. மருங்கு அணையும்—பக்கத்திலே போகும். புல் வாய—சிறிய வாயையுடைய. புல்வாயும்—மானும்.]

இப்படி உயிர்களை ஒருமையுணர்வில் நிறுத்திச் சகோதர நேயம் விளைத்த குழலோசை இன்னும் கேட்கிறது. காற்றும் கேட்கிறதாம் இந்த இசையை. விசையாக அசையாமல் இசை கேட்கிறதாம். மரங்களும் கேட்கின்றனவாம். ஆம், மரக்கிளைகளும் அசையவில்லை. மலையருவிகளும் காட்டாறுகளும் ஓடாமல் திகைத்து நின்று கேட்கின்றனவாம். மேகங்களும் கேட்கின்றன பொழியாமல், முழங்காமல், புடை பெயரர்மல்:

மருவியகால் விசைத்(து)
அசையா;
மரங்கள் மலர்ச் சினைசலியா;
கருவரை வீழ் அருவிகளும்
கான்யாறும் கலித்(து) ஓடா;
பெருமுகிலின் குலங்கள் புடை
பெயர்வொழியப் புனல்சோரா,
இருவிசும்பின் இடைமுழங்கா,
எழுகடலும் இடைதுளும்பா!

[மருவிய கால்— உலாவுகின்ற காற்று. மலர்ச்சினை— பூங்கிளைகள். கருவரை வீழ்— கரிய மலையிலிருந்து விழுகின்ற. கான்யாறு—காட்டாறு. கலித்து—ஒலித்து. பெருமுகில்— பெரிய மேகங்கள். குலங்கள்— கூட்டங்கள். புடை பெயர்வு ஒழிய— புடை பெயராமல் இருக்க. புனல் சோரா— நீர் சொரியவில்லை: இரு விசும்பின் இடைமுழங்கா— ஆகாயத்தில் முழங்கவும் இல்லை. இடை துளும்பா— அலைத்து எழவில்லை.]

சகோதர தர்மமும் சமதர்மமும் இயற்கையெங்கும் வியாபித்துவிட்டன. சராசரங்களெல்லாம் ஆனயரின் வேய்ங்குழல் கேட்டு இசை மயமாகிவிட்டன.

ஆண்டவன் செவியிலும் இசைத்தது

எல்லாம் இசை மயமாக, அந்த இசை சிவபெருமான் காதிலும் விழுகின்றதாம்:

மெய்யன்பர் மனத்(து) அன்பின்
விளைந்த இசைக் குழலோசை,
வையம்தன் னையும்நிறைத்து,
வானம்தன் வயமாக்கிப்,
பொய்யன்புக்(கு) எட்டாத
பொற்பொதுவில் நடம்புரியும்
ஐயன்தன் திருச்செவியின்
அருகணையப் பெருகியதால்!

[பொற்பொது— பொன்னம்பலம். அருகு அணைய— அருகே சேர்.]

இசையால் வசீகரிக்கப்பெற்றுத் தேவியாரோடு ரிஷபாரூடராய் வானவீதியில் எழுந்தருளி வந்த சிவபெருமான் மெய்யன்பரை நோக்கி,அருள் நோக்கம் செய்தார். 'நம்முடைய அடியார்களும் உன்னுடைய வேய்ங்குழல் இன்பம் பருகும் பொருட்டு நீ இப்போது இங்கே குழலூதியவண்ணம் நம்மிடத்துக்கு வருவாய்?' என்று அருளினாராம்.

அண்ணலார் குழற்கருவி
அருகிசைத்(து)அங்(கு) உடன்
செல்ல,
புண்ணியனார் எழுந்தருளிப்
பொற்பொதுவின் இடைபுக்
கார்.

[அண்ணலார்-ஆனயர். புண்ணியனார்-சிவபெருமான்.]

* * * * *

'ஏழிசையாய், இசைப் பயனாய்' என்று சுந்தரமூர்த்தி நாயனார் சிவபெருமானைப் பாடுகிறார். அந்த சுந்தரமான உண்மைக்குக் கதைவடிவில்வியாக்கியானம்செய்கிறது ஆனாய நாயனாரின் சுந்தரத் திருக்கதை. இந்த சிவநேசராகிய ஆயர் பெருமானின் கதை, குழலூதும் கோபாலனாகிய அந்த ஆயர் பெருமானையும், அந்த ஜகன் மோகன, வேணு கோபாலனைப் பெரியாழ்வார் பாடியிருக்கும் மோகனப் பாடல்களையும் ஞாபகப்படுத்துகிறது.

ஆரோக்ய வாழ்க்கை

வைத்தியக் குறிப்புகள்

பண்டித
எம். துரைசாமி ஐயங்கார்

☆

இக் கட்டுரையை வைத்தியக் குறிப்புகளின் கதம்பம் எனலாம். இதில் அடங்கிய ஒவ்வொரு சிறு விஷயமும் தகுந்த அத்தாட்சியை ஆதாரமாகக் கொண்டு எழுதப்படுகிறது, அனுபவத்தில் தெரிந்துகொண்ட அம்சங்கள் மாத்திரமல்ல, வேறு துறைகளிலுள்ள சில விஷயங்களையும் இக்கட்டுரையில் காணலாம்.

1. "தொண்டை வீக்கத்தில் மாத்திரமல்ல, கீல்வாயு போன்ற வேறு சில நோய்களிலும் தொண்டையிலுள்ள கிரந்திகளை (டான்ஸில்ஸ்) முற்றிலும் அறுத்து எடுத்துவிடலாம். அதுதான் அவ்வியாதிகளுக்கு ஏற்ற பரிகாரம்" என்று டாக்டர்கள் ஆலன்பேலார் (Allan & Baylar) என்பவர்கள் கூறுகின்றனர். ஆனால், "சில இயற்கையான இன்றியமையாக் காரியங்களுக்காக அமைந்துள்ள இவ்வவயவங்களுக்கு நேர்ந்துள்ள நோய் நிலைமையைத் தீர்க்க வேறு சிகித்ஸா முறையைக் கையாளாமல், இவற்றை உடலிலிருந்து அறவே அகற்றிவிடுவதால், வாழ்நாளில் வேறு பல தேக அசௌகரியங்கள் அவசியம் ஏற்படும்" என்று அநேக அத்தாட்சிகளைக் குறிப்பிட்டு, அவ்விரு டாக்டர்கள் கூறிய சஸ்திர சிகித்ஸையை டாக்டர் ஜான் ராபர்ட் என்ற வைத்திய நிபுணர் மறுத்துக் கூறுகிறார்.

2. நித்திரையில் ஸுஷுப்தி என்றும், துஸ்வாபம் என்றும் இரு வகையுண்டு. இவற்றுள் முந்தியதை அயர்ந்த சிறந்த தூக்கமென்றும், பிந்தியதை கலவரமுள்ள தூக்கமென்றும் கூறலாம். ஒருவன் காலையில் ஸ்வாஸ்த்யம் என்ற ஆரோக்கிய உணர்ச்சியுடன் எழுந்திருக்க வேண்டுமானால், அவன் இரவில் ஆறு அல்லது ஆறரை மணி நேரம் ஸுஷுப்தி என்கிற அயர்ந்த, சிறந்த நித்திரையை அனுபவிக்க வேண்டும். அவ்வித ஸுக நித்திரையிலிருந்து இனிது எழுந்திருப்பவனுடைய ஸ்வஸ்த்த (ஆரோக்ய) நிலைமையை ஆங்கிலத்தில் யூபோரியா (euphoria) என்பார்கள். எட்டு அல்லது ஒன்பது மணி நேரம் துஸ்வாபம் (கலவர நித்திரை) செய்துவிட்டு எழுந்திருப்பவனைக் காட்டிலும், ஐந்து மணி நேரம் ஸுஷுப்தியில் (ஸுக நித்திரையில்) ஆழ்ந்திருந்து எழுந்திருப்பவனுடைய ஆரோக்கிய நிலைமையும் சுறுசுறுப்பும் மேலானதாயிருக்கும்.

3. குழந்தைகளுக்கு ஜ்வர வேகத்தினாலோ, வேறு காரணங்களாலோ ஆக்ஷேபகம் என்கிற வலிப்பு ஏற்படுவது வெகு ஸாதாரணம். இதைக் கண்டு பெற்றோரும் மற்ற உற்றோரும் கிலியடைவதும் வழக்கம். சீதாம்சுரஸம், அம்ருதாஸத்வம் என்கிற பஸ்மம் போன்ற இரண்டு மருந்துகள் கையிருப்பில் இருந்தால், அவ்வித வலிப்பைக் கண்டு அச்சமுற வேண்டிய அவசியமிராது. குழந்தைகளுக்குக் காணும் அவ்வித நோயை உடனே தணியச் செய்ய இவ்விரண்டும் அரு மருந்துகளாம். குடலில் கிருமிகள் சேர்ந்திருந்தாலும், ஆக்ஷேபக வாயு என்கிற இசிவு காண்பது இயல்பு. அந்நிலைமையில் இரண்டு மூன்று முறை வேளைக்கு இரண்டுமூன்று மாத்திரைகள் வீதம் கிருமிக்னவடி என்கிற மருந்தைக்கொடுத்து, அப்பால் சிறிது ஆமணக்கெண்ணெயையும் கொடுத்தால், கிருமிகள் வெளிப்பட்டு, ஆக்ஷேபக வலிப்புகளும் தானே தீர்ந்து குழந்தை குணமடையும்.

4. "உருளைக்கிழங்கு எளிதில் ஜீர்ணமாகக்கூடாத சாகவர்க்கத்தைச் சேர்ந்தது. அதை மெல்லிய துண்டுகளாக அறுத்து, நெய்யில் சிவக்க வறுத்துப் புஜித்தால் ஸாதாரணமாக ஜீர்ணமாகும். அதைத் தோல் சீவி, சிறு சிறு துண்டுகளாகச் செய்து, ஆவியில் பக்குவம் செய்து, பிறகு மசாலா கலந்து தாளித்து உண்டால், வறுவலைவிட எளிதில் ஜீர்ணமாகும்; அதைவிட குணத்திலும் இது மேலானது. கிழங்குகளை அறுத்து, நீரில் சமைத்தெடுத்து, தோல் நீக்கி, முன்போல் மசாலா சேர்த்துப் பக்குவம் செய்து உண்டாலும் எளிதில் ஜீர்ணமாகும்: ஆனால் இறுதியில் குறிப்பிட்ட பக்குவ முறையில் கிழங்கிலுள்ள வலி (C) என்கிற போஷணைச் சத்து மிகக் குறைந்துவிடுவதால், உருளைக்கிழங்கின் உணவு குணமே போய்விடுகிறது" என்றவாறு 'ஹோம் எகனமிஸ்ட் பத்திரிகை கூறுகிறது.

5. "சிலஸ்திரீகள், முக்கியமாய் சிறு பெண்கள் உடையை மிகவும் இறுகக் கட்டிக்கொள்வதால், இடை அநாவசியமாக சிறுத்துப் போவதுடன், வயிற்றினுள் யக்ருத் என்கிற கல்லீரலும் மிக்க அழுத்தப்பட்டு, கோளாறடைகிறது. இதனால் பசியின்மை, பித்தக் கோளாறு, மலச்சிக்கல், காமாலை முதலிய நோய்களும் ஏற்படுகின்றன. எனவே, பெண்மக்கள் இவ்வொழுங்கீனமும் ஆரோக்கியக் குறைவுக்குக் காரணமுமான

இவ்வழக்கத்தை விட்டுவிடுவது நலம்'' என்று அமெரிக்கன் ஜர்னல் ஆப் மெடிஸின் என்கிற வைத்தியப் பத்திரிகை கூறுகிறது.

6. பிராஹ்மீ ரஸாயனம் இரவில் சரியானபடி நித்திரையில்லாமல் வருந்துபவருக்கு அயர்ந்த நல்ல நித்திரை யுண்டுபண்ணும் மருந்தாயிருப்பதால், அது மூளையையும் நரம்பு மண்டலத்தையும் சுறுசுறுப்பற்றதாகச் செய்து, அவற்றின் சக்தியைக் குறைத்து விடுமென்று சிலர் கருதுகிறார்கள். அது பிசகு. மனம் அமைதி யில்லாமல் தூக்கம் பெறாது வருந்துபவருக்கு நல்ல நித்திரையைத் தரும் சிறந்த குணம் அதற்கு இருப்பதுபோலவே, மூளைக்கும் நரம்புகளுக்கும் ஏற்ற போஷணையளித்து, அவற்றிற்கு வன்மையுண்டுபண்ணும் அருங்குணமும் இதற்கிருப்பதாலேயே பிராஹ்மி என்னும் சரக்கைச் சாஸ்திரம் புகழ்ந்து கூறுகிறது.

7. சொறி, சிரங்கு, பட்ர் தாமரை போன்ற சர்ம ரோகங்களில் கந்தகம், கங்கஸிந்தூரம், தேன்மெழுகு முதலியவை சேர்ந்த மதூச்சிஷ்டாதி லேபத்தைவிட இரஸம், மனச்சிலை, கந்தகம், த்ரிகடுகம், அபாமார்க்க க்ஷாரம் முதலிய க்ரிமிக்ன குணமுள்ள சரக்குகள் சேர்ந்த சர்மரோகாந்தக லேபம் தோலைப்பற்றிய அந்த நோய்களை அறவே அகற்றிட, அதிக உபயோகமுள்ளதாகும்.

8. சில மனிதரின் உயிர் வாழ்க்கையில் ஏற்படும் நன்மை தீமைகள் அவரைப் பராமரிப்பவரின் திறமையைப் பொருந்தியதாயுள்ளது. ஒரு சிறுவனைக் காப்பாற்றி வளர்த்து உலகில் ஒழுங்காக வாழுமாறு வழிப்படுத்த அவன் தாய் இருபது வருடங்கள் அரும்பாடு படுகிறாள். மற்றொருத்தி வந்து அவனை இருபது நிமிஷங்களில் அசடாக்கி, அலங்கோலப்படுத்தி விடுகிறாள். ஒழுங்கான நடத்தையில் விருப்பமும், மனோ திடமும், புத்தி ஸ்வாதீனமும் படைத்த மனிதனாயிருந்தால், அவன் பிந்திய அருவருப்பான தீய நிலைமைக்கு ஆளாக மாட்டான். தேக திடத்தைப் போல் மனோதிடமும் மனிதனின் இனிய வாழ்க்கைக்கு இன்றியமையாதது.

9. ஒருவன் வெகு தூரம் வேகமாய் ஓடி யுட்கார்ந்தபோது, அல்லது கடுமையான வேலை செய்துவிட்டு அமர்ந்திருக்கும்போது அவனது நாடி நடை படபடத்துத் துடிப்பதற்குப் பதிலாக மிக்க மெதுவாகவும் எறும்பு ஊருவது போலவும் அசைவதாக உணரப்படுமானால், அவனது இருதயம் (பொதுவாக தேகம்) பலக் குறைவடைந்திருப்பதாகவும், அவன் பலமான வேலைகளைச் செய்யவும் உடற் பயிற்சியில் ஈடுபடவும் தக்கவனல்ல என்பதாகவும் தெரிந்துகொள்ளலாம்.

10. "விக்கலை நிறுத்த வீணில் மருந்து தேடவேண்டாம். அதற்கு ஏற்ற பரிகாரம், பயமுண்டு பண்ணுவதேயாம். சிலருக்கு மஹா மந்திரம்போல் அச்சமுறுத்துவது விக்கலை வியப்புறக் கூடிய வகையில் விலக்கி விடும். பரீட்சைக்காக "நூற்றுக்கணக்கான பேர் வழிகள் வருடவாரி விக்கலால் இறக்கிறார்கள்'' என்று விக்கலால் வருந்துபவனிடம் திடீரென்று சொல்லிப் பாருங்கள் அல்லது வேறுவிதமாகவும் அவனது நெஞ்சம் அஞ்சுமாறு சொல்லிப் பாருங்கள்'' என்று ஒரு மேனாட்டு வைத்தியப் பத்திரிகையில் ஒருவர் கூறுகிறார்.

11. இளைத்து மெலிந்துள்ள மனிதனை ஏற்ற சிகித்ஸைகளாலும் போஷணை தரும் உணவுகளாலும் பருத்துச் செழித்து பலம் பெறச் செய்வது எளிது. ஆனால், கொழுத்துத் தடித்துள்ளவர்களை ஆரோக்கியமான நடுநிலைமைக்குக் கொண்டு வருவதும், திடகாத்திரமாகச் செய்வதும் அரிதென்று சாஸ்திரமும் அனுபவமும் ஒருங்கே அறிவிக்கின்றன. இளைத்தவனுக்கு பல்யம் (பலத்தை விருத்தி செய்வது) இரஸாயனம் (தாதுக்களைப் போஷிப்பது) என்னும் இனிய ஒளஷதங்களையும், போஷணையளிக்கும் உணவுகளையும் உபயோகித்து அவனைச் சுகப்படுத்தலாம்; இவ்வித சிகித்ஸை 'ப்ருஹ்மணம்' எனப்படும். கொழுத்து மிகப் பருத்திருப்பவனுக்கு விரேசநம் (பேதி), லங்கநம் (பட்டினி), கொழுப்பைக் கரைக்கும் அருவருப்பான மருந்துகள் முதலியவற்றால் அவனைச் சுக நிலைமைக்குக் கொண்டுவர வேண்டும்; இவ்வித சிகித்ஸையை 'கர்ஷணம்' என்போம். வைத்தியம் செய்து கொள்பவருக்கும், செய்பவருக்கும் முந்தியது சுகமாகவும், பிந்தியது கடினமாகவும் இருப்பது இயல்பு.

12. அயஸ்காந்த ஸிந்தூரம் இரத்த தோஷத்தை நீக்கி, அதை விருத்தி செய்யும் அருங்குணம் பொருந்தியதாய் மாத்திரமில்லை; அது ஜீவ தாதுக்களுக்கும் புத்துயிர் அளிக்கும் வீர்யமுள்ளதாயிருப்பதால், ஜீவநீயம் (ஆயுளை விருத்தி செய்யுங் குணம்), பல்யம் (தேக வன்மையை அதிகரிக்கச் செய்வது) என்னும் குணங்களைப் பெற்றிருப்பதாக வைத்திய சாஸ்திரம் அதைப் பெருமையாகக் கூறுகிறது.

13. சோகையில் (நீர்க் கோவையில்) தண்ணீர் உட்கொள்வதைக் குறைப்பதும், உப்பை (முடியுமானால்) முற்றிலும் தள்ளும்படி செய்வதும் முக்கியமான பத்தியமாகும். அவ்வித பத்தியத்துடன் மண்டூர பஸ்மத்தைப் புநர்நவாஸவத்துடன் உட்கொண்டு வருவதால் நீரேற்றம் குறைந்து, வீக்கம் தணிந்து, இரத்தத்தின் சத்தும் அதிகரித்து, நோயாளி சீக்கிரத்தில் இயற்கையான ஆரோக்கிய நிலைமையைப் பெறுவான்.

14. இரவில் சிறிது குறைவாகவே உண்பது ஆரோக்கியத்துக்கு அநுகூலமாகும். இராப் போஜனம் அமிதமாவதாலும், உணவுண்டதும்படுத்துறங்குவதாலும் அமைதியாக நித்திரை யுண்டாகாது. மேலும், துர்ஸ்வப்னங்களும் தோன்றும்; இத்தகையவருக்குத் தூக்கத்தில் பயங்கரமான அமுக்குவான் என்னும் கோளாறும் ஏற்படுவதுண்டு.

15. கடுமையான ஜலதோஷத்திலும்; அர்த்தாவபேதம் என்கிற ஒற்றைத் தலைவலியிலும், பொதுவாகத் தொண்டை நோய், தலைவலி, ஆமவாதத்தாலான உடல்வலி முதலிய கோளாறுகளிலும், சீதாம்சுரஸம் என்கிற ஒளஷதத்தைத் தாளீஸாதி சூர்ணத்துடன் (1-க்கு 10-வீதம்) கலந்து உட்கொள்வது அனுபவத்தில் கைகண்ட சிறந்த சிகித்ஸையாகும்.

அன்றிரவு, சிவராமனுக்கும் ராமநாதனுக்கும் நடுவே வெகு நேரம்வரையில் அழகிரியைப் பற்றிப் பேச்சுகள் காரசாரமாய் நடந்துகொண்டிருந்தன. சிவராமன் உஷா விஷயமாகக் கோர்ட்டில் கார்டியன் விண்ணப்பம் செய்துகொள்வதைத் தவிர வேறு வழியில்லை என்றார். ராமநாதன் அந்த விசாரணையில் கோர்ட்டில் வாக்குமூலம் கொடுக்க உஷாவைத் தான் தைரியப்படுத்தி விடுவதாய் ஏற்றுக்கொண்டான். உஷாவை ஸினிமா நடிகையாக்க அழகிரி காண்ட்ராக்டு செய்துகொண்டிருப்பது ஒன்றே, அவன் கார்டியனாயிருக்க லாயக்கில்லை என்பதற்கு அத்தாட்சியாகும் என்று சிவராமன் கர்ஜித்தார். ராமநாதன், உஷாவை வீட்டில் அவர்கள் எவ்வளவு கேவலமாய் நடத்துகிறார்கள் என்பதற்கு வேலைக்காரக் கிழவியை சாட்சி போடலாம் என்று அபிப்பிராயப்பட்டான்.

இவ்விதம் இருவரும் மனக்கோட்டை கட்டிக்கொண்டிருக்கும் போது அஸ்திவாரம் ஆட்டம் கொடுத்ததுபோல் ஒரு உணர்ச்சி இருவரையும் தனக்குள் சிந்திக்கச் செய்தது. சிவராமன் நினைத்தார். கோர்ட்டிற்குப் போனால் ஜயம் தான். நாமே கார்டியனாகலாம் அல்லது வேறு கார்டியனைக் கோர்ட்டார் மூலம் நியமிக்கச் செய்யலாம். இருந்தாலும் பகிரங்கமாய்க் கோர்ட்டில் என் முறைமையையும், உறவையும், என் பழைய சரித்திரங்களையும் பிரமாணமூலமாய்ச் சொல்லி, சாசுவதமான ரிகார்டுகள் ஏற்படுத்தி வைப்பது எவ்வளவு வெட்கக் கேடு? உலகம் சிரிக்குமல்லவா? உற்றார் உறவினர் வெறுப்பார்கள்; அறிந்தவர் தெரிந்தவர் அவமதிப்பார்கள்.

இப்போது, சொல்லவோ, சுட்டிக்காட்டவோ, கேட்கவோ பயந்துகொண்டிருப்பவர்கள், நாளைக்குப் பேப்பர்களில் படித்துவிட்டு, என்னைக் குசலப்ரச்னம் செய்யத் துணிவார்களே! ஊர் பெண்டுகளுக்கு இது ஒரு பெரிய வம்பாகிவிடுமே! ஊரில் தலையை வெளியில் கிளப்பமுடியாதே! ஆகையால், கோர்ட்டில் நேராக எப்படிப் போய் நிற்கிறது? பின்னாலிருந்து வேலை செய்யலாம். செலவு எதுவானாலும் ஏற்றுக் கொள்ளலாம். நானே மனுதாரராக முன்னால் போய் நிற்பது நடவாத காரியம். மிரட்டலிலேயே காரியத்தைச் சாதிக்க வேண்டியதுதான். வக்கீல் விச்வநாதய்யர் அழகிரியின் வக்கீலாக இருந்தாலும், நியாய புத்தியுடையவர். ஏதாவது சமரஸப்படுத்திவிட வழி தேடுவாரென்று நினைக்கிறேன்.

ராமநாதன் ஆலோசித்தான்—"வக்கீல் சொல்வதைப் பார்த்தால், கார்டியன் பிரச்னை தீராமல் மைனரான உஷாவைச் சட்டப்படி ரிஜிஸ்டர் விவாஹம் செய்து கொள்வது சாத்தியமில்லை என்று தெரிகிறது. கார்டியன் பிரச்னைக்குக் கோர்ட்டு விவகாரம் நடத்த வேண்டும். அது அவ்வளவு சுலபமான காரியமல்ல. ஆனால், அவள் இப்போது இருக்கிறவர்களிடம் மேலும் இருந்து காலம் தள்ளுவது சாத்தியமில்லை. அவளுடைய அடிமைத்தனம் எப்படி நீங்கும்? அழகிரி அவளைத் தன் சுயநலத்திற்காக எப்படியெல்லாம் ஆட்டிவைக்கப் போகிறானோ! அவள் மனதிலிருக்கும் பீதியும் வேதனையும் அளவிட முடியாது. இருந்தாலும் உஷா பிடிவாதக்காரி. தனக்கு இஷ்டமில்லாத காரியத்தில் இலகுவில் ஈடுபடமாட்டாள். ஆனால், ஒரு சிறு பெண், ஒரு அனாதைக் குழந்தை, எவ்வளவு தூரம் அழகிரியைப்போன்ற ஒரு அசுரனை எதிர்த்துப் போராட முடியும்? அவளுக்காக நான் எந்தக் கஷ்ட நஷ்டங்களையும் வரவேற்க வேண்டும் என்று உறுதி செய்துகொண்டாலும், என் நிலைமை என்ன? நான் எவ்வளவு கட்டுப்பாடுகளில் சிக்கிக்கொண்டிருக்கிறேன். எனக்குப் பணமேது! செல்வாக்கு ஏது! சுதந்திரமேது! உலக அனுபவம் ஏது! தாயார் தகப்பனார், அக்கா அத்திம்பேர், பந்துக்கள், அக்கம் பக்கத்தவர்கள் இவ்வளவு பேர்களையும் மீறி, குலசம்பிரதாயத்திற்கு விருத்தமாய் நூதன முறையில் விவாஹம் செய்துகொள்ள எப்படி சாத்தியமாகும்! மேலும், மாமா ஆத்திரத்தில் பேசுகிறாரே ஒழிய, காரியம்வரையில் துணிவாரா என்பது சந்தேகம். மாமா கோர்ட்டிற்குப் போவாரா! தானே நேரில் நின்று உஷாவின் பிதா என்ற ஹோதாவில் கார்டியனாக வாதாடுவாரா! வக்கீல்களுக்கும் சாட்சிகளுக்கும் பணத்தை அள்ளி விடுவாரா? அக்கா, அத்திம்பேர்களை விரோதித்துக் கொள்ளுவாரா? ஊம், ஹூம்! ஒருநாளும் அவர் அத்திம்பேர் முன்னே பதில் வார்த்தை பேசினதுகூடக் கிடையாது. மாமா, வாயால் கோட்டை அளப்பவரே ஒழிய, காரியத்தின் கிட்டப் போனால் வழவழவென்று விட்டுவிடுவார். அப்பாவை சாதாரணமாய் மதிக்க முடியாது. வாயால் பேசாமல் காரியத்தில் நசுக்கிவிடுவார். என்னிடத்தில் இப்போது தப்பபிப்பிராயம் கொண்டிருக்கிறார். அந்த செக்

போர்ஜரி விஷயமாய் என்னைப் போலீஸின்கையில்நிர்த்தாட்சண்யமாய் ஒப்புவிக்க அவர் தயங்கவில்லை. ஊரிலிருந்து இன்று வருகிருரோ! நாளை வருகிருரோ! வந்ததும் பாங்கு மூலமாய்ப் போலீஸாரிடம் நான் கொடுத்த ஸ்டேட்மெண்டு அவர் பார்வைக்கு வரும். என் நடவடிக்கைகளை அறிந்து கொள்வார். அம்மாவும் சொல்லுவாள். மாமா சிவராமன் அப்பாவிடம் ஒளித்துப் பேசவோ, மறுத்துப் பேசவோ தைரியமில்லாதவர். அப்பா எனக்கு என்ன தண்டனை விதிக்கப்போகிருரோ! ஒருவேளை அக்காவும் அத்திம்பேரும் குறுக்கிட்டு, ஏதாவது சமாதானம் செய்தாலொழிய, என்னை வீட்டைவிட்டு விரட்டி விடுவார். அப்படி விரட்டிவிட்டால் என்கதி என்ன? படிப்பும் அரைகுறையாய் நிற்கிறது. உலகத்தில் தனியே நின்று போராடிப் பிழைத்துக்கொள்ளத்தைரியமோ, சாமர்த்தியமோ அனுபவமோ கிடையாது. உஷாவை நான் அடைய வேண்டி, அப்போது அழகிரியைச் சரணமடைய வேண்டி வரும். அதைவிட ஆத்மஹத்தி செய்துகொள்ளலாம். ஆனல், ஒருவேளை சமாதானமாய் போய் என்னை மன்னித்தால், எனக்கு அவர்கள் இஷ்டப்படி ஒரு விவாஹத்தைச் செய்துவைக்க உடனே பிரயத்தனப்படுவார்கள். என் உஷாவைப் பறிகொடுத்துவிட்டு, வேறு விவாஹம் பிறர் திருப்திக்காகச் செய்துகொள்வதைவிட ஆத்மஹத்தி செய்துகொள்ளலாம். எந்த வழியிலும் என்னை இருள் சூழ்ந்து நிற்கிறது.

* * * * *

மறுநாள் விடிந்ததும், ராமநாதன் முதல் நாள் இரவு முடிவு பெருமல் விட்டுவிட்ட சிந்தனைகளை அப்படியே நிறுத்திவிட்டு, அழகிரி தான் கொடுப்பதாய் ஒப்புக்கொண்ட ஆயிரம் ரூபாயையும் அவனிடம் கேட்டுப் பார்க்கலாம் என்ற ஒரு புதிய சங்கல்பத்தை மேற்கொண்டு, மாமாவிடம் தெரிவித்துவிட்டு, வெளியே புறப்பட்டான். மாமா வக்கீல் வீட்டிற்குப் போவதாகச் சொன்னார்.

ராமநாதன் அழகிரியை வீட்டில் பார்த்தபோது வீட்டில் வேறு யாருமே இருப்பதாய்த் தெரியவில்லை. ராமநாதன் வந்த காரியத்தை அழகிரியிடம் தெரிவித்தான். அழகிரி வக்கீலிடம் ஒரு செக் ரூபாய் ஆயிரத்திற்கு எழுதிக் கொடுத்திருப்பதாயும் அதை வக்கீலிடம் இருந்து பெற்றுக் கொள்ளும்படிக்கும் ராமநாதனுக்குச் சொல்லி, அவனை அனுப்பிவிடப் பார்த்தான். ராமநாதன் உஷாவைப் பார்க்க விரும்பினன். அழகிரி-"பெண்டுகள் யாரும் வீட்டிலில்லை. வெளியே போயிருக்கிருர்கள்" என்று பதில் கூறினன்.

ராமநாதன் எழுந்திருக்கவில்லை. அழகிரி தன்னை ஏமாற்றுகிருன் என்று நினைத்தான். செக் விஷயமும் தப்பு சால்ஜாப்பு என்று அவனுக்குத் தோன்றிற்று. அவன் விழிகள் சிவந்தன. உதடு துடித்தது. பல்லை இறுகக் கடித்தான். மூக்குநுனியில் கோபம் திரண்டு வந்தது. அழகிரி ராமநாதனின் முகவிகாரத்தைக் கவனித்தான். புன்னகை புரிந்தான்-"என்ன தம்பி கோபமா? உள்ளே வந்து பாரு. நான் பொய்யா சொல்லுகிறேன்?" என்ருன். ராமநாதன் தன் படபடப்பைச் சற்று அடக்கிக்கொண்டு, "உஷா முதலியவர்கள் எங்கே போயிருக்கிருர்கள்?" என்று வினவினன். அழகிரி கூறியதாவது:—"பாக்கிய லக்ஷ்மிக்கு மாமன் வந்திருக்கார். அவர்தான் சேதார நல்லூர் பொன்னுசாமி பிள்ளை. பரத நாட்டியத்தில் பழய ஜாம்பவான். அவருடைய சிஷ்யர்களே இப்போது பல இடங்களில் பரத நாட்டிய ஆசிரியர்களாக இருந்து, பெண்களை அக்கலையில் தேர்ச்சி பெறச் செய்துவருகிருர்கள். அவர் கலைஞர்களான சில நண்பர்களைப் பார்க்கப் போயிருக்கிருர். குழந்தைகளும் கூடப் போயிருக்கிருர்கள். நீ சற்று நேரம் இருந்தால் அவர்கள் திரும்பி வந்துவிடுவார்கள்" ராமநாதன் அழகிரியின் வார்த்தைகள் யதார்த்தம்தான் என்று அறிந்துகொண்டான். அழகிரி நிஜம் பேசக்கூடியவனுனல் முழு வாசியும் அசுரனல்ல. சிறிதளவுமனுஷ்யனும்ஆகலாம் என்று நம்பிக்கை கொண்டான். அதனல் அழகிரியிடம் உஷாவைப்பற்றிப் பேசஅவன் துணிந்தான்.-'மிஸ்டர், அழகிரிசாமி! என்னைப் போலீஸிலிருந்து ஜாமீன் கொடுத்து நீர் அழைத்து வந்ததிலிருந்தே உமக்கு என்னிடம் அன்பு உண்டென்றும், நான் உஷாவை விவாஹம் செய்துகொள்வதில் உமக்குத் திருப்திதான் என்றும் உணர்வேன். அப்படியிருக்க, எங்கள் இருவருடைய சுகவாழ்க்கைக்குச் சாதகமான ஒரு ஏற்பாட்டைச் செய்துவைக்க, நீர் இடையூறுகள் சொல்லிக் கடத்திவிட்டது ஏன்?"

"அப்படிக்கேள் தம்பி! சொல்லுகிறேன். உன் மாமா நடக்காத காரியத்தைச் சொல்லுகிருர். நான் நடக்கிற காரியத்தைச் சொன்னேன். நான் பேசின பேச்சிலிருந்து பிறழப்போவதில்லை. உஷா பெயரில் இப்போதே ரூ. 5000/-போட்டு வைக்கத் தயாராகவிருக்கிறேன். உன் மாமாதான் தன் பங்கைப் பூர்த்தி செய்வதைத் தட்டிக் கழிக்கப் பார்க்கிருர். யோசித்துப் பார் தம்பி; உன் மாமாதான் கார்டியன் ஆகவேண்டுமென்றும் பணம் தன்பேரில் போட்டுவிடவேண்டுமென்றும் சண்டை போட்டாரே! அவர் உஷாவுக்குக் கார்டியனுக ஏற்படுத்தப்பட்டால், அவளைத் தன் வீட்டில் அழைத்து வைத்துக் கொள்வாரா? தன் மற்ருெரு பெண்ணைப்போல் வளர்ப்பாரா! இல்லையேல், அவர் கார்டியன் ஆக விரும்புவதில் என்ன அர்த்தமிருக்கிறது? இந்த விஷயத்தை அவராவது நீயாவது யோசித்ததுண்டா? ஏன் வெட்டி விவகாரம் பேச வேண்டும்! உஷா எங்கள் வீட்டுப் பெண். எங்கள் ஜாதி. எங்கள் குலம். உன் மாமா அவளுக்குத் தகப்பனுர் என்பது உண்மையானுலும் அவளுடைய பாதுகாப்புக் கார்டியனுக அவர் கட்சி பேசுவது அர்த்தமற்றது. அவளுக்குப் பிதாவானதற்கு அவர் சட்டப்படி அவளுக்கு ஜீவனும்சம் கொடுக்கக்கடமைப்பட்டிருக்கிருர்.

நான், அவரைக் கொடுக்கும்படித் தூண்டவும், ஏதோ தாட்சண்யத்திலுலும், நீ உஷாவை விவாஹம் செய்துகொள்ளப் போவதையும் உத்தேசித்தும் அவர் கொடுக்கும் தொகைக்குச்சரியான தொகையை நானும் கொடுப்பதாய் ஒப்புக்கொண்டேன். கோர்ட்டிற்குப் போவதனுல் அவரிடம் தொகை வசூலிக்க என்னுல்முடியுமேழுிய, என்னைக் கொடுக்கும்படி நிர்ப்பந்திக்க அவரால் முடியாது. வேண்டுமானல், வக்கீல்களைக் கேட்டுப் பார்க்கட்டும். ஆகையால், விவஹாரமில்லாமல் நேற்று நான் சொன்னபடி ஒப்பந்தத்தை அவர் நிறைவேற்றினுல் நல்லது-இல்லையேல், நான் நோட்டீஸ் விட்டதைத் தொடர்ந்து, அவர்பேரில் வியாஜ்யம் போடுவது நிச்சயம். நீயும் உன் மாமாவை நம்பாதே! அவர்தான் கொடுக்க வேண்டியதைக் கொடுக்காமல் நான் கொடுப்பதையும் கபளீகரம் செய்துவிட்டு, அந்தக் குழந்தையைச் சந்தியில் நிறுத்தி விடுவார். அவர் எவ்வளவு கொடுக்கல் வாங்கல், நிலபலம், நகை நட்டு, வீடு வாசல் எல்லாம் ஆண்டவர். இப்போது என்ன நிலைமைக்கு வந்திருக்கிருர்! அவரை நம்பிப் பணத்திற்குக் கார்டியனுக நியமிக்கலாமா? சரீரப் பாதுகாப்புப் பற்றினவரை அவர் கார்டியன் கடமையை உண்மையில் செலுத்துவது அசாத்தியம் என்று ஏற்கனவே சொல்லிவிட்டேன். நீ படித்த பிள்ளை. திர்க்காலோசனை செய்து பாரு.

உன் மாமா உன்னிடம் உண்மையில் பிரிய முள்ளவராயிருந்து, நீ அவர் பெண் உஷாவை விவாஹம் செய்து கொள்வதில் திருப்தியுடையவராயுமிருந்தால், அவரிடம் இந்தக் காரணங்களை எடுத்துச் சொல்லிப் பார். பணத்தை வக்கீலிடம் கொடுக்கச் சொல். நானும் முன்பேசியபடிக் கொடுக்கிறேன். வக்கீலிடம் பணத்தைப்



இவ்வருஷம் டோக்கியோவில் கலைப்பண்பு தினத்தன்று நடந்த அணி வகுப்பில் இம்பீரியல் அரண்மனை பிளாஸாவில் இந்த "லாண்டர்ன்" நடனம் நடந்தது. இதை 30 ஆயிரம் பேர் பார்த்தனர்.

பொருக்கட்டி ஒப்பந்தம் எழுதி, அவரைக்கொண்டே பாங்கியில் உஷாவுக்குக் கார்டியனுன என் பேரில் கணக்கு வைக்கச் செய்வோம். இந்தக் காரியம் நிறைவேறியபின், உன் ரிஜிஸ்டர் விவாஹத்தை நடத்தி வைப்போம். நான் கார்டியனுயிருந்து உஷாவை உனக்கு ரிஜிஸ்டர் விவாஹம் செய்து கொடுக்கச் சம்மதித்து, விவாஹ ரிஜிஸ்ட்ரார் முன் ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போடுகிறேன். உன் மாமா கார்டியனுனல், அவர் கையெழுத்துப் போட வேண்டும். இல்லாவிட்டால், உஷா மைனரானபடியால், விவாஹம் ரிஜிஸ்டர் ஆகாது. அப்போது மாமா உன் ரிஜிஸ்டர் விவாஹத்தைத் தடுக்கத் தன் கையில் "பவரை" வைத்துக் கொண்டவராவார். அவர் ஒரு வேளை கபடமற்று இஷ்டப்பட்டாலும், உன் தாய் தகப்பனுர்கள் அவரை இந்த மைனர் விவாஹத்திற்குச் சம்மதி அளிக்காதபடித் தடுத்துவிடுவார்கள். இது நிச்சயம். மாமா உன்னிடத்தில் கபடமாய் பழகி வருகிறுர். நீ அவரை நம்பியிருக்கிறுய். அவர் சொந்தப் பெண்ணை-உன் மருமாளை-நீ விவாஹம் செய்துகொள்ளாமல் வேறு வழியில் திரும்பியது அவருக்கு ஆத்திரத்தை மூட்டியிருக்கும். உன்னைத் தன் கைவசத்தில் வைத்துக்கொண்டு, தன் இஷ்டத்தை நிறைவேற்ற அவர் "பிளான்" போட்டிருக்கிறுர். நீ அதை அறியவில்லை. அழகிரிதான் மோசக்காரன் என்று நினைக்கிறுய்—"

அழகிரி ஒரு மோஹனப் புன்சிரிப்புச் சிரித்தான். ராமநாதன் அழகிரியின் யுக்திகளைக் கேட்டுத் திகைத்துப் போனுன்.

மாமா சிவராமன் எதைத்தான் செய்யமாட்டார் என்று அவன் மனதில் தோன்றிற்று.

(தொடரும்)

சத்வைத்யசாலை நஞ்சன்கூடு

"நஞ்சன்கூடு பல்பொடி"

பாகடெரியின் சிறந்த மருந்துகள்

குழந்தைகளுக்கு:
12 காஸ்மன் கஸ்தூரி மாத்திரை
18 கர்ஜன் கோரோஜனை மாத்திரை
15 பாலக்ஸ் பேதியாக மாத்திரை

பெரியவர்களுக்கு:
99 ஜ்வரேக் எல்லா ஜ்வரங்களுக்கும்
77 காலரெக்ஸ் அஜீர்ண பேதிக்கும், விடிபேதிக்கும் (காலரா)
23 பெயினே (பெயின பாம்) தலைவலி, வாயுபிடிப்பு.....

தினமும்:
61 நஞ்சன்கூடு பல்பொடி நீ.61. பல் உபாதைகளையும் கண்டிக்க
78 கூலெக்ஸ் உஷ்ண சமன தைலம்
55 ஜீர்ணப் அஜீரண, பித்த சமனி.
(முழு மருந்து ஜாபிதாவிற்கு எழுதவும்)

ஸோல் ஏஜெண்டுகள்: யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர் வீதி, மதறாஸ்.

காலரா, அஜீர்ண பேதிக்கு, I. D. L. நெ. 77. காலரெக்ஸ் சிறந்த மருந்து ரூ. 1-8-0 தபாலில் அனுப்ப ரூ. 2-6-0 அனுப்பவும்.

டிப்போக்கள்: மதுரை, கோயமுத்தூர், கும்பகோணம், பம்பாய்.

RAHAMATH PHARMACY
(Estd 1925)
55, Parish Venkatachala Iyer St, G. T., Madras.

சகல வியாதிகளுக்கும் கைமேல் பலன் தரும் யூனனி ஆயுர்வேத மருந்துகள் தயார் செய்யுமிடம்.

உத்தரவாதம் கொடுத்து ஆஸ்த்மா, ஈளை, சுவாச இருமல், சகல மேக வியாதிகள், குன்மம், குதகவலி, குதக கோளாறுகள், ரத்த மூலம், படை, சர்ம வியாதிகள் இவைகளுக்கு கைகண்ட யூனனி சிகிச்சை.

அநேக நற்சாட்சிகளை நேரில் பார்வையிடலாம்.
பரீக்ஷியுங்கள்.

ஜெயா எலக்டிரிக் கம்பெனி,
சின்னகடை வீதி, சேலம் டவுன்.

★

எலக்டிரிக் : பம்பு செட்டுகள், மோட்டார்கள், ஸ்டார்ட்டர்கள், ஸ்விட்ச் கியர்கள், பல்பு தினுசுகள், ஒயர் காயில்கள், மீட்டர்கள், ரேடியோக்கள்.

இன்னும் மில்களுக்கும், விவசாயத்திற்கும், வீடுகளுக்கும் தேவையான எல்லாவிதமான எலக்டிரிக் சாமான்களும், சில்லரையாகவும், மொத்தமாகவும் விலை சரசமாய்க் கிடைக்கும்.

சகலவிதமான பட்டு நூல் ஜவுளிகளுக்கு நாணயமும் நம்பிக்கையுமுள்ள புதிய ஜவுளிக்கடை

ராம்ராஜ்யா ஹால்

N.R. ராமசந்திர செட்டி & கோ. கடை வீதி... சேலம்

புண்ணுகி வலிக்கும் காலா?

உலக புகழ் பெற்ற இந்த ஜாம்பெக் உபயோகியுங்கள்.

இவ்வற்புதமூலிகை மருந்தாகிய ஜாம்பெக், களைப்பு, வலி; புண், வீக்கம் இவற்றிற்கு நிவாரணமளித்து புண்ணுகிய காலை குணமாக்கி உமது கால் ஆரோக்கியமாக விருக்கச் செய்யும். கெட்டி சருமத்தையும் ஆணிகளையும் ஜாம்பெக் மிருதுவாக்கி சுலபமாக அகற்றப்பட உதவும். மிருகக் கொழுப்பு இல்லாததற்கு உத்தரவாதம்.

சரும நோய்கள், காயங்கள், பூச்சி கடிகள், புண்ணுகி வலிக்கும் காயங்கள் தசை வலி, தேக குளிர்ச்சி இவற்றிற்கு சிறந்தது.

Zam-Buk

சமனமுட்டி குணமாக்கும் கிருமிநாச மருந்து.
ஏஜண்டுகள்: மெஸர்ஸ் தாதா & கம்பெனி
பி. டி. மதராஸ்.

ஆருடம்!
உங்கள் எதிர்கால பலன்!!

★

தொழில், குடும்பம், காதல், பிரயாணம், வியாதி, வியாஜ்யம், வியாபாரம் முதலிய எல்லா விஷயங்கள் சம்பந்தமாகவும் குறிப்பாக பதில் அனுப்பப்படும். கட்டணத்திற்கான போஸ்டல் ஆர்டருடன் ஜாதகம் அல்லது கடிதம்எழுதும் நேரம்தேவை.

கேள்வி 3-க்கு ரூ. 2.
மேற் கேள்வி ஒவ்வொன்றுக்கும் அணு 8.
10 கேள்விகள்
அல்லது
ஒரு வருஷ பலன் ரூ. 5.
வெளி நாடுகளுக்கு 5 ஷில்லிங்.

மீனுக்ஷி ஜோதிடாலயம்,
P. B. நெ. 1015, பம்பாய்.

மறுக்க முடியாத உண்மை!
நாகரீக வாழ்விற்கு அடிப்படையானது
அழகு மிகுந்த ஆடைகளே!!

தொழில் முறையில் அனுபவம் வாய்ந்தவர்களைக் கொண்டு கண்களைக் கவரும் கலர்களில் வனப்பு மிகுந்த ஜரிகை வேலைப்பாடுகளோடு தயாரிக்கப்பட்ட

பட்டு
புடவைகள் வேஷ்டிகள்

எங்கள் வசம் ஏராளமாயிருக்கின்றன.

C. R. பாலுசாமி அய்யர்

115, நைனியப்ப நாய்க்கன் தெரு, மதராஸ்.
போன் நெ. 3432.

9, ஜடாமுனி கோவில் தெரு, மதுரை.

வாரியர்
பிருங்காமலகாதி
தைலம்

குளிர்ச்சி மிக்க ஸ்நான தைலம். கறுப்பான காந்தி மிக்க கூந்தல் தாராளமாக வளரச் செய்யும். அரிப்பு, பொடுகு, தலைவலி, அதி உஷ்ணம், நித்திரையின்மை, கண் எரிச்சல், அதிகப்படிப்பினுலோ வேலையினுலோ ஏற்படும் மந்தம், ஞாபக மறதி, மூளைக்கொதிப்பு முதலியவைகளில் மிகவும் உபயோகமானது.

16 அவுன்ஸ் புட்டி ரூ. 4.
(பாக்கிங், தபால் செலவு வேறு.)

ஆர்ய வைத்தியர்
கே. எஸ். வாரியரின்
அஷ்டாங்க
ஆயுர்வேதசாலா
தெப்பக்குளம், திருச்சி.
(ஸ்தாபிதம் : 1936.)

சிறந்த கூந்தல் உணவு

உங்கள் சரீரத்திற்கு நல்ல உணவு அவசியமானதுபோல் கூந்தலுக்கும் நல்ல உணவு அவசியமாகும். உங்கள் கூந்தலின் வசீகரம் நீங்கள் உபயோகிக்கும் கூந்தல் தைலத்தைப் பொறுத்ததே.

காமினியா ஆயில் (ரெஜிஸ்டர்ட்)

மூளைக்குக் குளிர்ச்சியூட்டி கூந்தல் வளர அவசியமான பலவித சத்துக்கள் சேர்ந்தது. மயிர்க்கால்களுக்கு அவசியமான போஷாக்கு அளிக்கையில் ஆரோக்யமாக வளரவும் உதவுகின்றது. பொடுவன்களைப் போக்கி, கூந்தல் உதிர்வதை நிறுத்தும்.

ஆயிரக்கணக்கானவர்கள் **காமினியா ஆயில்** உபயோகித்துப் புகழ்ந்துள்ளனர்.

இன்றே பரீக்ஷித்து திருப்தி அடையுங்கள்.
எல்லா ஸ்டோர்களிலும் விற்கப்படுவது.
எப்பொழுதும் உபயோகியுங்கள்.

ஆ[illegible]ல்பஹார் (ரெஜிஸ்டர்ட்)

இணையற்ற [illegible]. நீடித்த நறுமணம் உள்ளது. தபால் [illegible] 4 அணா ஸ்டாம்பு அனுப்பி சாம்பிள் வாங்கிப் [illegible]கள்.

Sole Agent:—ANGLO INDIAN DRUG & CHEMICAL CO.
265, Jumma Musjid, P.O. Box 2085, Bombay 2.

12666.

எல்லோரும் எங்கள்
பீ. எஸ். வஸ்துக்களை
உபயோகியுங்கள்

மணத்திலும், சுவையிலும் ஆரோக்கியமானது

P.S.

பெருங்காயம் – பாதம் எண்ணெய் – அம்லா ஹேர் ஆயில் – வாசனை தேங்காய் எண்ணெய்-கஸ்தூரிகுங்குமப்பூ-கோரோஜனம் – ஊறுகாய் (பஞ்சாபி) ரோஸ் பஞ்சாபிகுல்கந்து-பஞ்சாப்தேன் – முத்து பன்னீர்–ஓமவாடர் – முறப்பா, நெல்லிக்காய் – இஞ்சி, மாங்காய்.

தயாரிப்பவர்கள் :—
மதருஸ் புட்பிராடக்ட்ஸ்,
45, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,
ஜி. டி. மதருஸ்.

ஆஸ்த்மாவை குணப்படுத்துவது

ஸ்வாஸ்ஹாரி தான்.

ஐந்து நிமிஷத்திலோ, ஒரே இரவிலோ ஆஸ்த்மாவை குணப்படுத்தி விடுமென்று விளம்பரம் செய்யும் மருந்துகளை உட்கொண்டால் நோய் அதிகரிக்குமேயொழிய குறையாது. "புரோஹித் ஸ்வாஸஹாரி" ஒன்றுதான் உட்கொண்ட ஆரம்பத்திலிருந்தே கபத்தைக் கரைத்து அஜீரணத்தை குணப்படுத்தி நுரை ஈரல்களை பலப்படுத்தி ஆஸ்த்மாவினின்றும் பூரண சௌக்கியத்தை நிச்சயமாக அளிக்கிறது. ரூ 3-8, ரூ 6-, ரூ 10- பாக்கிங்களில் எல்லா இடங்களிலும் கிடைக்கும். அல்லது "டாக்டர் புரோஹித் பார்மஸி" கோலாப்பூர் விலாசத்திற்கெழுதி பெற்றுக்கொள்ளலாம்.



ஆஸ்த்மா, ச்வாஸாசய நோய்களுக்கு டாக்டர்கள் விதிப்பது

புரோஹித ஸ்வாஸஹாரி

DR. PUROHIT PHARMACY, KOLHAPUR

மதராஸ் ஸ்டாகிஸ்டுகள்: காகா & கோ, நைனியப்ப நாய்க்கன் தெரு.

S.A.H.
TRADE MARK

Rgd. No. 2221.

28 வருஷமாய் தென்னாடு
முழுவதும் பிரசித்தி
பெற்று வரும்

சேலம் மூன்று தாமரை பீடிகளை

உபயோகித்து சந்தோஷமடையுங்கள்.

Prop: S. அஹமத் உசேன், கோட்டை, சேலம் - *S.I.R.*



அபரிமிதமான ஜீவசக்தி வெற்றிபெற உதவுகிறது

அம்ருதா

ரத்த சுத்தி திராவகம்



தேகப்பயிற்சி செய்வோருக்கு மிக அவசியமான சக்தியை அம்ருதா அளிக்கிறது. இந்த ரத்த சுத்தி திராவகம் இளைஞர்கள், முதியவர்கள், குழந்தைகள் அனைவருக்கும் இன்றியமையாதது. வாய்க்கு மிக இனிப்பானது, குணத்தில் சிறந்தது. அரிய மூலிகைகள், பழச் சத்துக்களைக்கொண்டு உயர்ந்த வைத்திய முறைப்படி தயாரிக்கப்பட்டு வரும் இந்த ஜீவ சக்தி திராவகம் யாவருக்கும் இணையற்ற நண்பன்.

கேஸரி குடீரம் லிமிடெட் மதராஸ்

ஒரிஸ்ஸா, நைஜாம், ஆந்திரா ஜில்லாக்களுக்கும்

தமிழ்நாட்டுக்கும் ஏஜண்டுகள்:—

ஸ்ரீ தாரா மா ஜெனரல் ஸ்டோர்ஸ்.

பர்ஹாம்பூர் - செகந்திராபாத் - பெஜவாடா - மதுரை

★

FREE GIFT.

OF YOUR 1949 HOROSCOPE. IMPORTAN PLANETARY INFLUENCES BRING NEW OPPORTU NITIES FOR UNPRECEDENTED IMPROVEMENT IN YOUR SOCIAL, PROFESSIONAL & FINANCIA AFFAIRS DURING 1949. LEARN AT ONCE TH GREAT GOOD LUCK THA AWAITS YOU.

SEND NO MONEY.

SEND ONLY YOUR HOROS COPE COPY OR DATE O BIRTH AND YOU WILL B THRILLED WHEN YO RECEIVE THE INTENSEL INTERESTING FORECAST OF YOUR FUTUR ABSOLUTELY FREE. WRITE AT ONCE TO—

Prof. SEKHAR. B.A. (Wash) M.I.B.M. (U.S.A.
The Great Mesmerist & Zemindar
ELLORE. (West Godavari Dt.)

N. B. All correspondence & Readings in English only

★

Coffee
Ours for Quality



RAW
ROAST
OR
GROUND

GANESH & Co
(MADRAS) LTD
T. NAGAR

Printed and Published by S. Chakrapani Iyengar at the "Swadesamitran" Press. Victory House, Mount Road, Madras. Editor: C. R. Srinivasan B. A.

Regd. No. 2514.

தலையிட்டோர் சூழ்ச்சி பலிக்கவில்லை



தேவஸ்தானம் கமிட்டி — திருப்பதி 26-9-48.

பகவான் ஸ்ரீவெங்கடேஸ்வரரின் ரத்னகிரீடத்தில் திகழும் அபூர்வமான வேலைப்பாட்டை கவனிக்கும்போது அதைத்தயாரித்த ஸூரஜ்மல் கம்பெனியாரின் உன்னதமான வேலைத் திறமையில் தங்களுக்குள்ள பெருமதிப்பை தெரிவித்துக்கொள்வதில் திருமலை திருப்பதி தேவஸ்தானக்கமிட்டியார் மிக்க மகிழ்ச்சியடைகின்றனர். கலையின் சிகரம் பூரணப் பொலிவுடன் விளங்கலாமென்பதற்கு இக்கிரீடமே தகுந்த சான்று.

B. வீராசாமி நாயுடு,
கமிஷனர்.

முடிவில் . . . .

உண்மை ஜெயிக்கும்

ஸூரஜ்மல்ஸ்

திருப்பதி ரத்ன கிரீடம் தயாரித்தவர்.

313, எஸ்பிளனேட் : : மதராஸ்.

(1)	(2)	(1)	(2)